விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 10 திங்கட்கிழமை (25.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 006

## வட்டு. கொட்டைக்காட்டில்
## மோ.சைக்கிள் தீப்பற்றி இளைஞன் உடல்கருகி சாவு


23☛


# ஐ.தே.க. தனித்து ஆட்சியமைக்கும்!

## லக்ஸ்மன் கிரியல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

கூட்டணி அரசாங்கத்திலிருந்து எதிர்வரும் 31ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறினால், ஐக்கிய தேசியக் கட்சி தனித்து அரசாங்கத்தை அமைக்கும் என உயர்கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)



## புதிய அனுபவத்திற்காக அதிகாரத்தை தாருங்கள்
## ஜே.வி.பி. கோருகிறது



(கொழும்பு)

புதிய அரசியல் அனுபவம் ஒன்றை பெற்றுக்கொள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை தமக்கு வழங்குமாறு ஜே.வி.பி கோரியுள்ளது. 24☛

## பிணைமுறி அறிக்கை மூடி மறைக்கப்படாது
### – மகிந்த அமரவீர

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர விவகாரம் சம்பந்தமான விசாரணை அறிக்கை எதிர்வரும் 30ஆம் திகதி கிடைக்க உள்ளதாகவும், அதனை நீதிமன்றத்திற்கு அனுப்ப ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நட 23☛


## நல்லாட்சி என நாட்டை நாசமாக்கியோரை தண்டிப்போம்
### என்கிறார் பசில்

(கொழும்பு)

நல்லாட்சி என்ற பெயரில் நாட்டினை நாசமாக்கியதில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் எவ்வாறு பொறுப்புக்கூற வேண்டுமோ அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும்



பொறுப்புக்கூறியாக வேண்டும். இவர்கள் மறைமுகமாக அரசாங்கத்தை ஆதரித்து நாட்டினை நாசமாக்கியுள்ளனர் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற 23☛






## குளிக்கச்சென்ற மாணவர் இருவர் நீரில் மூழ்கி பலி
### புதுக்குடியிருப்பில் துயரம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவு வீதியில் உள்ள கள்ளியடி ஆற்றில் குளிக்கசென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பினை சேர்ந்த 7 இளைஞர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளினை கழிப்பதற்காகக் கள்ளியடிப்பகுதி 23☛

## ஆசிரியர் சங்க கோரிக்கை தேர்தல் ஆணையரால் நிராகரிப்பு



(கொழும்பு)

ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நிராகரித்துள்ளார்.

கல்விபொதுத்தராதர பரீட்சையின் வினாத்தாள்கள் திருத்தும் பணியில் ஈடுபடுவதன் காரணமாக தபால் மூல வாக்களிப்புக்கான 23☛

APEX TRAVELS
எம்மிடம் சகல நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
* இந்தியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசாக்களை இங்கிருந்தவாறே விண்ணப்பிக்க முடியும்.
* ஏனைய நாடுகளுக்குமான விசா உதவிகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
* பிரயாண காப்புறுதி(Travel Insurance), திகதி மாற்றம், சுற்றுலா ஒழுங்கமைப்பு, ஹோட்டல் முன்னேற்பாடுகளும் செய்து தரப்படும்.
* வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை விசாபெற்று யாழ்ப்பாணத்திலே செய்து தரப்படும்.
* Budget Airlines: Spice Jet, Indigo, Air Asia, Fly Dubai, Air Arabia ஆகிய விமானங்களில் குறைந்த கட்டணங்களில் செல்வதற்கு இன்றே நாடுங்கள்.
தொடர்புகளுக்கு (C-864)
077 350 4700
E-mail: fly@apextravels.lk
No.105/1, Power House Road, Jaffna.
021 222 8008
www.apextravels.lk

## தமிழக ஆர்.கே.நகரில் தினகரன் அமோக வெற்றி



(சென்னை)

ஆர்.கே. நகரில் 2016 தேர்தலில் ஜெயலலிதா பெற்ற வெற்றி வித்தியாசத்தைவிட கூடுதல் வாக்குகள் வித்தியாசத்தில் டிடிவி தினகரன் வெற்றிபெற்றார். 24☛

## முழு நிர்வாணமாய் இராணுவ முகாமுக்குள் புகுந்த இளைஞன்

(வவுனியா)

வவுனியா மாவட்ட இராணுவ முகாம் ஒன்றுக்குள் நிர்வாணமாக உள்நுழைந்த இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக வவுனியா மூன்று முறிப்பு பகுதியில் 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுதந்திரக் கட்சி தலைமையகத்தை அநாதை மடம் என மாற்றலாம்

## ஜே.வி.பி கிண்டல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தற்போது அநாதைகளின் மடமாக மாறியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

எப்பாவல பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் அதிகாரம் ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருக்கின்றதா அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் இருக்கின்றதா என்பதை தெளிவுபடுத்த வேண்டியது அவசியம்.

எந்த அரசியல் பிச்சைக்காரனுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி திறந்துள்ளது. டட்லி வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தின் பெயர்ப்பலகையை அநாதை மடம் என்றுதான் மாற்ற வேண்டும்.

வேறு கட்சிகளில் இருந்து விரட்டப்பட்டவர்கள், துரத்தப்பட்டவர்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கத்துவம் வழங்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அமைப்பாளர்களும் இல்லை, வேட்பாளர்களும் இல்லை.

நாட்டை கட்டியெழுப்பவும் நாட்டை அழிக்கவும் அரசியல்வாதிகளால் மாத்திரமே முடியும் எனவும் லால் காந்த குறிப்பிட்டுள்ளார்.(மு)

# ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் பணிப்பாளர்கள் 6 பேர் திடீர் பதவி விலகல்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவையின் பணிப்பாளர் குழுவின் ஆறு உறுப்பினர்கள் திடீர் என்று பதவி விலகியுள்ளார்.

குறித்த பதவி விலகலுக்கான காரணம் இது வரை வெளியாகவில்லை.

எனினும், விமான சேவைக்கு புதிய பணிப்பாளர் குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கன் மற்றும் மிஹின லங்கா விமான சேவைகளில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஜனாதிபதியின் ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் இந்த பதவி விலகல் இடம்பெற்றுள்ளது.

மேலும், மத்திய வங்கியின் பிணை முறி விநியோக மோசடி தொடர்பான அறிக்கை கிடைத்த பின்னர் இந்த ஆணைக்குழு நியமிக்கப்படும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (மு-1)

# துன்னாலை அசம்பாவித சம்பவம் 4ஆம் திகதி வரை விளக்கமறியல்

(கரணவாய்)

துன்னாலையில் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளவர்களை தொடர்ந்தும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

கடந்த ஜூலை மாதம் 09ஆம் திகதி சட்டவிரோத மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டமை தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களில் பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் வழக்கு கடந்த வியாழக்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்ட போதே விளக்கமறியலில் உள்ளவர்களையும் வழக்கையும் எதிர்வரும் 04ஆம் திகதிக்கு இற்கு ஒத்தி வைத்தார்.(மு-60)

# மூத்த ஊடகவியலாளர் எஸ்.எம்.ஜியின் நினைவஞ்சலி கூட்டம் நேற்று



(யாழ்ப்பாணம்)

மூத்த ஊடகவியலாளரான அமரர் எஸ்.எம்.கோபாலரட்ணத்தின் (கோபு ஐயா) "நினைவழியா நாட்கள்" எனும் தலைப்பிலான நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். நாச்சிமார் கோவிலடியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவஞ்சலிக் கூட்டம் அகவணக்கத்துடன் ஆரம்பமாகியதுடன் ஈழத்தின் மூத்த ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு கோபு ஐயாவின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதுடன் நினைவுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து நினைவுரை நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் மதகுருக்கள், மக்கள் பிரதிநிதிகள், பல்கலை மாணவர்கள், ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.(மு-9)

# கொடிகாமம் பொலிஸாரால் 1 1/2 கிலோ கஞ்சா பறிமுதல்

(சாவகச்சேரி)

வெளி மாவட்டம் ஒன்றில் இருந்து விற்பனைக்காக எடுத்துவரப்பட்ட 1 1/2 கிலோ கஞ்சா கொடிகாமம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று இரவு 8 மணியளவில் கொடி காமம் பஸ்தரிப்பிடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது, கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் புலனாய்வு அதிகாரி கு.தினேஸிக்கு கிடைத்த. இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான அ.கஜந் தன மற்றும் எதிர்சூரிய ஆகியோர் குறித்த சந்தேக நபரை கொடிகாமம் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர். (மு-60,89)


சுந்தர்சன் நிறுவனத்தின்

மாபெரும் மலிவு விற்பனை 2017இல் பரிசில் வென்ற அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள்

1ஆம் பரிசு -Sofa-க.குகானந்தம், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
2ஆம் பரிசு -Washing Machine-இ.சாஜித், நவாலி.
3ஆம் பரிசு -Microwave Oven-K.ரகுராம், கோண்டாவில்.
4ஆம்-8ஆம் பரிசு-Mobile Phones-மகேந்திரம், பளை/ அபுஷ்நயா, மானிப்பாய்/ இன்பராணி, குருநகர்/ டினுவர்ஷா, மானிப்பாய்/ தமிழினி, சங்குவேலி
9ஆம்-13ஆம் பரிசு-Fan-விஷ்ணுவர்தன், நவாலி/ லக்சிதா,அச்சுவேலி/ றம்யா, மானிப்பாய்/ டினோஜன், அல்வாய்/ மில்கா, நவாலி.

Wusley நிறுவனத்தின் பரிசில்களை வென்ற வாடிக்கையாளர்கள்

1ஆம் பரிசு -Table fan-சிவோத்தமர், ஏழாலை
2ஆம் பரிசு -Grinder-தனேஸ்வரன், நல்லூர்
3ஆம் பரிசு -Rice Cooker-பஞ்சலிங்கநாதன், நல்லூர்
4ஆம் பரிசு -Electric Kettle-டர்சினி, உடுவில்
5ஆம் பரிசு -Toaster-வனிதா, அச்சுவேலி.



சுந்தர்சன் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் சேவை அடிப் படையில் தங்கம் வென்றோர்:
திரு.மகேந்திரராசா
திரு.சுரேஷ்


# மரண அறிவித்தல்

## துரையப்பா ஏரம்பமூர்த்தி

(சந்தனராசா) J.P (முன்னாள் RMC)

பிறப்பு 11 - 09 - 1943



இறப்பு 23 - 12 - 2017

வேலணையை பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை மேற்கை வசிப்பிடமாகவும், குருபரன் வீதி, முழங்காவிலை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா ஏரம்பமூர்த்தி (சந்தனராசா) 23.12.2017 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், லக்ஷ்மணிதேவியின் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்-கிளி/முழங்காவில் ம.வி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் பத்மநாதன், காலஞ்சென்ற தர்மராசா மற்றும் சந்திரலீலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான ருக்மணிதேவி, தவமணிதேவி மற்றும் ஜெயமணிதேவி, ஸ்ரீ இராமகிருஷ்ண பிரசாத், ராதாகிருஷ்ண பிரசாத், கோபால கிருஷ்ண பிரசாத், காலஞ்சென்றவர்களான பூபாலகிருஷ்ணபிரசாத், ஸ்ரீநவநீத கிருஷ்ணபிரசாத், சின்னையா, மற்றும் யோகராணி, செம்மனச்செல்வி, காலஞ்சென்ற இராமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், எழில் அரசி, எழில்ச்செல்வி, எழில்வதனி, உமாஆனந்த், உமாசந்தர், உமாநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகநேசன், மதன்மோகன், செந்தில்வேல், ஜெகதீஸ்வரி, கனகேஸ்வரி, குந்தவி ஆகியோரின் அன்பு மாமனும், ரதினி, ரத்வினி, லவன், ஹரினி, தருணிகா, பிரேமிகா, புவிதன், அபிநயன், கோபிதன், மதுமிதன், ரங்சீதன், பிரேமிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முழங்காவில் அன்புபுரம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருபரன் வீதி,
முழங்காவில்.

தகவல்:-குடும்பத்தினர்
0776681342

(1948)

# இராணுவத்திற்கு அரசு மிகப்பெரிய அநீதி!

## இராவணா பலய ஒருங்கிணைப்பாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மனித உரிமை செயற்பாட்டாளரான சுனிலா அபேசேகரவை நல்லாட்சி அரசாங்கம் காணாமல் போனவர்களைத் தேடி அறியும் செயலகத்தின் உறுப்பினராக நியமித்தமை இராணுவத்திற்கு செய்த மிகப் பெரிய அநீதி என இராவணா பலய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் இத்தேகந்தே சத்தா திஸ்ஸ தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் 11 இளைஞர்களை கடத்திச் சென்று காணாமல் போக செய்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க உள்ளிட்ட சந்தேகநபர்களை பார்க்க நேற்று வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றிருந்த போது சத்தாதிஸ்ஸ தேரர் இதனைத் தெரிவித்தார்.

சுனிலா அபேசேகர என்பவர், இலங்கை இராணுவத்திற்கு எதிராக சர்வதேசத்திற்கு விடயங்களை முன்வைத்த பெண். அவரை காணாமல் போனவர்களைத் தேடி அறியும் செயலகத்தின் பணிகளுக்கு நியமித்துள்ளதால் படையினருக்கு அந்தோகதிதான்.

அதேபோல் அரசாங்கம் நன்றாக மாட்டிக்கொண்டுள்ளது. பதவி வந்த போது துறைமுக நகரம் குறித்து சண்டித்தனம் பேசிய அரசாங்கத்திற்கு அதன் பின்னர் அம்பாந்தோட்டை துறைமுகம் மட்டுமல்ல காணிகளையும் சீனாவுக்கு கொடுக்க நேர்ந்தது என அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

## வடக்கு - கிழக்கில் நல்லிணக்கம் சார்ந்த வீதி அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுப்பு

(கொழும்பு)

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் முதற்கட்டமாக நல்லிணக்க முன்னெடுப்பின் கீழ் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் கீழ் 1847.4 கிலோமீற்றர் வீதிகள் புனரமைக்கப்படுவதற்கான நிதியீட்டலுடன் கூடிய கேள்வி கோரல்கள் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.



இதன்கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் வருகின்ற A மற்றும் B வகை வீதிகளும் (173.5 கிலோ மீற்றர்கள்), மாகாண மட்டத்தில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் வருகின்ற C மற்றும் D வகை வீதிகளும் (394.45 கிலோமீற்றர்கள்), உள்ளூராட்சி சபைகளின் கீழ் வருகின்ற வீதிகளுமாக (1279.45கிலோ மீற்றர்கள்) மொத்தம் 1847.4 கிலோ மீற்றர் வீதிகள் புனரமைக்கப்படும்.

இதன் கீழ் முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம்- மானிப்பாய்- காரைநகர் வீதியும் (27.7கிலோ மீற்றர்கள்), யாழ்ப்பாணம்- புன்னாலை-பருத்தித்துறை வீதியும் (36.15கிலோ மீற்றர்கள்), வழுக்கையாறு - புங்குடுதீவு- குறிகாட்டுவான் வீதியும் (24.5 கிலோமீற்றர்கள்) உள்ளடக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் முறிகண்டி-கனகபுரம் டுப்பிளிகேசன் வீதியும் முல்லைத்தீவில் வன்னிவிளான்குளம்- பனங்காமம் வீதி, இரட்டைவாய்க்கால் மந்தளன் சாலைவீதி, வற்றாப்பளை பிரதான வீதி மற்றும் மன்னார் மாவட்டத்தில் பிரமணாளங்குளம் பெருப்பு கடந்தான் வீதி, மகிழங் குளம் பள்ளமடு வீதி உட்பட பல வீதிகளும் திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூர் மத்தியவீதி, சீநனா வெளிபாட்டாளிபுரம் வீதி உட்பட பல வீதிகளும் அம்பாறை மாவட்டத்தில் பானமகும்புக்கள் வீதி, சியம்பலாண்டு வதுமான வீதி உட்பட பல வீதிகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் தொப்பிகல வடமுனைவீதி, மஹரன் புறைவ் உட்பட பலவீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக பல கிராமிய வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இந்த வீதிகளுக்கு மேலதிகமாக இரண்டாம் கட்டமாக பாலங்கள் புனரமைப்பதற்காக நிதியீட்டலுடன் கூடிய கேள்வி கோரல்கள் முன்வைக்கப்படும். வீதிகள் புனரமைக்கப்படுவதற்கான நிதியீட்டலுடன் கூடிய கேள்வி கோரல்கள் 22ஆம் திகதி டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன் அதன் முடிவு திகதி பெப்ரவரி 2ஆம் திகதி முடிவுறுத்தப்படும் என தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவ் வீதி அபிவிருத்தி திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டதும் வடக்கு- கிழக்கு மாவட்டங்களில் பாரிய பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படும் எனவும் இதன் மூலம் உற்பத்தி மட்டம், வேலைமட்டம் மற்றும் வருமானமட்டம் முன்னேற்றம் அடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டங்கள் நல்லிணக்கத்திற்கு பாரிய பங்கினை வழங்கும் என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (இ-7)

## கடும் பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் வாக்குச் சீட்டு அச்சிடும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணி, அரச அச்சக திணைக்களத்தில் கடுமையான பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச அச்சகத்தில் தனியான பாதுகாப்பான ஒரு பிரிவு இந்த அச்சுப் பணியை மேற்கொள்வதாக தெரிய வருகிறது.

முதலில் வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்பட்ட 93 உள்ளூராட்சி சபைகளின் வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்படுவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தப் பகுதிக்கான பணிகள் நிறைவடைந்த பின்னர் எஞ்சிய 248 சபைகளுக்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-7)

## 11 இளைஞர்கள் கடத்தல்; சிஐடியினர் அறிக்கையை மாற்றியதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் டீ.கே.பி. தசநாயக்கவை எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் 11 தமிழ் இளைஞர்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பில் முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் டீ.கே.பி. தசநாயக்க குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், கொழும்பு கோட்டை நீதவான் நீதி மன்றத்தில் முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க மீதான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது, புலனாய்வுப் பிரிவினர் தனது ஆரம்ப அறிக்கையின் பல பகுதிகளை மாற்றியதாக நீதிமன்றில் தெரிவித்த அவர், தனிப்பட்ட அறிக்கை ஒன்றை தாக்கல்செய்ய அனுமதிக்க வேண்டுமெனக் கோரினார்.

இதற்கிடையில், சாட்சி விசாரணைக்கு முக்கிய தகவல்களை வழங்கியதாகவும், ஆரம்ப அறிக்கையை எந்த விதத்திலும் மாற்றியமைக்கவில்லை எனவும் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி நிஷாந்த சில்வா நீதிமன்றத்தில் தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

25.12.2017

மார்கழி 10, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு

சப்தமி முன்னிரவு 9.59 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 9.10 மணிவரை

சுபநேரம் 9.26-10.56 மணிவரை

இராகுகாலம் 4.56-6.26 மணிவரை

நத்தார் பண்டிகை தினம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம், பூரம் மதியம் 2.36 மணி மீன-சந் | | ராகு |
| கேது | | | |
| சூரி,சுக் சனி | புத | குரு,செவ் | |

வளவன்

**மீனம்:** கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படு வீர்கள், திட்டமிட்ட பயண மொன்றில் திடீர் மாற்றங் களைச் செய்ய முற்படுவீர் கள், புதியவர்களின் சந்திப்ப கிடைக்கும்.

**மேடம்:** வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை அமையலாம், சுபகாரியச் செலவுகளில் நாட்டம் காட்டு வீர்கள், வெளியூர்த் தொடர்பு கள் கூடும்.

**இடபம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்கள் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும்.

**மிதுனம்:** தொழிலில் வளர்ச்சி கூடும் நாள், கொள்கைப்பிடிப் போடு செயற்படுவீர்கள், பேச்சைக் குறைத்து செய லில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** எதிர்பார்ப்புக்கள் நிறை வேறும் நாள், வாக்கு மேன் மையுண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், ஆன்மீ சிந்தனை மேலோங்கும் நாள்

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, ஆன் றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வேலைச்சுமை கூடி னாலும் பலன் கிடைக்கும்.

**மகரம்:** கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள் தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரப லமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**சிம்மம்:** உதவுவதாகச் சொன்னவர் கள் உங்களை விட்டு விலக லாம், எடுத்த காரியங்களை முடிப்பீர்கள், அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்பட லாம், வாகன பழுது செலவு கள் ஏற்படலாம்.

**தனுசு:** நண்பர்களின் ஒத்துழைப்பு கள் கிடைக்கும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமை யாய் அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** சுபகாரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வருகையுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** சுப தகவல்கள் வந்து சேர லாம், தலைமைப் பதவிகள் உங்களைத்தேடி வரலாம், தொழில் மேன்மையுண்டு, உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன் னேற்றம் ஏற்படலாம், செய் தொழில் மேன்மையுண்டு.

# இந்தியாவுக்கு கிறிஸ்மஸ் பரிசு

## மும்பையிலும் வீழ்ந்து வெள்ளையடிப்புக்கு ஆளானது இலங்கை




மும்பை ரி20' போட்டியில் கடைசி ஓவர் வரை போராடிய இந்திய அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. இந்த வெற்றி இன்றைய கிறிஸ்மஸ் தினத்துக்கான உற்சாக வெற்றியாக அமைந்தது.

இதன்மூலம் தொடரை 3-0 என முழுமையாக கைப்பற்றி, கிண்ணத்தை முழுமையாக சுவீகரித்தது. இலங்கை அணி பரிதாபமாக 'வைட் வோஷ்' ஆனது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட சர்வதேச 'ரி20' தொடரில் பங்கேற்றது. கட்டாக், இந்தூரில் நடந்த முதலிரண்டு போட்டிகளில் வென்ற இந்திய அணி, 2-0 என்ற கணக்கில் ஏலவே தொடரை கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில் நேற்று, மும்பை, வான்கடே மைதானத்தில் 3ஆவதும் இறுதியுமான போட்டி நடந்தது. இந்திய அணியில் யுவேந்திர சகால், பும்ராவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது. இளம் வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் சிராஜ் இடம் பிடித்தார்.

நாணயச்சுழற்சியில்வென்ற இந்திய அணித் தலை வர் ரோகித் சர்மா, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

### குணரத்ன ஆறுதல்

இலங்கை அணி வழக்கம் போல துடுப்பாட்டத்தில் சொதப்பியது. டிக்வெல (1), குசல் பெரேரா (4), உபுல் தரங்க (11) சொற்ப ஓட்டங்களில் வெளியேற, 3 விக்கெட்டுக்கு 18 ஓட்டங்கள் எடுத்து திணறியது. பின் இணைந்த சதீர சமரவிக்ரம - குணரத்ன ஜோடி நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது. 4 ஆவது விக்கெட்டுக்காக 38 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது, பாண்ட்யா பந்தில் சமரவிக்ரம (21) 'பெவிலியன்' திரும்பினார். 'சைனாமேன்' பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் 'சுழலில்' குணதிலக (3) சரணடைந்தார். அணித் தலைவர் திசர பெரேரா (11), நிலைக்க வில்லை. பொறுப்பாக ஆடிய குணரத்ன (36), ஆறுதல் அளித்தார்.

இலங்கை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்கள் எடுத்தது. ஷானக (29), தனஞ்செய (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார்பில் உனத்கத், பாண்ட்யா தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.




### பாண்டே நம்பிக்கை

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு லோகேஷ் ராகுல் (4) ஏமாற்றினார். தனஞ்செய வீசிய 3ஆவது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்த அணித் தலைவர் ரோகித் சர்மா, நுவான் பிரதீப் வீசிய 6ஆவது ஓவரின் தொடர்ச்சியாக 2 பவுண்டரிகள் விளாசினார். இவர், 20 பந்துகளில் 27 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஷானக பந்தில் ஆட்டமிழந்தார்.

பின் இணைந்த ஸ்ரேயாஸ் ஐயர், மணிஷ்பாண்டே ஜோடி பொறுப்பாக ஆடியது. மூன்றாவது விக்கெட்டுக்கு 42 ஓட்டங்கள் சேர்த்திருந்த போது, ஸ்ரேயாஸ் (30) துரதிர்ஷ்டவசமாக 'ரன்-அவுட்' ஆனார். ஹர்திக் பாண்ட்யா (4) நிலைக்க வில்லை.

### 'திரில்' வெற்றி

ஷனாகா வீசிய 15ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்த மணிஷ் பாண்டே (32), சமீரா 'வேகத்தில்' போல்டானார். இதனையடுத்து இந்தியாவின் வெற்றிக்கு 23 பந்தில் 28 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

பின், தோனி, தினேஷ் கார்த்திக் ஜோடி இணைந்து நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது. பிரதீப் பந்தில் தினேஷ் கார்த்திக் ஒரு சிக்சர் அடிக்க, 6 பந்துகளில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்டது. திசர பெரேரா வீசிய கடைசி ஓவரில் ஒரு பவுண்டரி அடித்த தோனி, வெற்றியை உறுதி செய்தார். இந்திய அணி 19.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 139 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

தோனி (16), கார்த்திக் (18) ஆட்டமிழக்காமல் இருநதனர். டெஸ்ட், ஒருநாள் தொடர், 'ரி20' என அனைத்திலும் தோற்ற இலங்கை அணி வெறுங்கையுடன் நாடு திரும்புகிறது.

### சபாஷ் சகால்

'இத் தொடரில் அதிக விக்கெட்டுக்கள் கைப்பற்றிய பந்துவீச்சாளர்கள் பட்டியலில், இந்தியாவின் யுவேந்திர சகால், முதலிடம் பிடித்தார். இவர், 2 போட்டிகளில் 8 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். இவரை அடுத்து இந்தியாவின் ஹர்திக் பாண்ட்யா (6 விக்..), குல்தீப் யாதவ் (6), ஜெயதேவ் உனத்கட் (4) உள்ளனர்.

### ரோகித் முதல்வன்

இத்தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் இந்திய அணி கேப்டன் ரோகித் சர்மா, முதலிடம் பிடித்தார். இவர், 3 போட்டியில் ஒரு சதம் உட்பட 162 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்த இரண்டு இடங்களை இந்தியாவின்லோகேஷ ராகுல் (154 ஓட்.), இலங்கையின் குசல் பெரேரா (100) கைப்பற்றினர்.

### தொடர் நாயகன்

பந்துவீச்சில் அசத் திய இந்தியாவின்உனத்கட் (4 ஓவரில், 15 ஓட்., 2 விக்கெட்.), ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை கைப்பற்றினார்.

# பொக்சிங் டே டெஸ்டிலிருந்து மிட்சல் ஸ்ரார்க் விலகல்




இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்டில் (பொக்சிங் டே டெஸ்ட்) இருந்து அவுஸ்திரேலியாவின் முன்னணி வேகப் பந்துவீச்சாளர் மிட்சல் ஸ்ரார்க் குதிகால் காயம் காரணமாக விலகியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு வரலாற்று சிறப்பு மிக்க 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. பிரிஸ்பேன், அடிலெய்ட், பேர்த் டெஸ்ட்களில் வென்ற அவுஸ்திரேலியா 3-0 என்ற கணக்கில் ஏலவே தொடரை கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் 4ஆவது டெஸ்ட் ('பொக்சிங் டே'), மெல்போர்னில் நாளை ஆரம்பமாகிறது. இப்போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் இருந்து, குதிகால் காயம் காரணமாக வேகப் பந்துவீச்சாளர் மிட்சல் ஸ்ரார்க் விலகினார். கடந்த மூன்று டெஸ்டில் 19 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ள இவர் இல்லாதது அவுஸ்திரேலிய அணிக்கு பின்னடைவு. இவர், காயத்தில் இருந்து விரைவில் குணமடையும் பட்சத்தில், வரும் ஜன. 4இல் தொடங்கும்சிட்னி டெஸ்டில் விளையாடலாம். மெல்போர்ன் டெஸ்டில், ஸ்ரார்க்கிற்கு பதிலாக மற்றொரு வேகப்பந்துவீச்சாளர் ஜக்சன் பேர்ட், தேர்வாகியுள்ளார். இதுவரை 8 டெஸ்டில் விளையாடி உள்ள பேர்ட், 34 விக்கெட்டுக்கள் சாய்த்துள்ளார்.

### ஓவர்டன் காயம்

மெல்போர்ன் டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் இருந்து வேகப் பந்துவீச்சாளர் கிரெய்க் ஓவர்டன், விலா எலும்பு முறிவு காரணமாக விலகினார். சமீபத்தில் நடந்த அடிலெய்ட் டெஸ்டில் அறிமுகமான இவருக்கு, பெர்த் டெஸ்டின் போது காயம் ஏற்பட்டது. இவருக்கு பதிலாக இளம் வேகப்பந்துவீச்சாளர் ரொம் குரான் (வயது-22) அறிமுகமாகிறார்.

# வெற்றி மேல் வெற்றி

# மன்செஸ்டர் சிட்டி சாதனை




இங்கிலாந்தில் கழக அணிகளுக்கு இடையே உள்ளூர் கால்பந்து தொடர் நடக்கிறது. மன்செஸ்டரில் நடந்த லீக் போட்டியில் மன்செஸ்டர் சிட்டி, போர்ன்மவுத் அணிகள் மோதின. போட்டியின் 27ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் அணியின் அகுரோ கோல் அடித்தார். தன் பங்கிற்கு ஸ்டெர்லிங் (53) கைகொடுக்க, மன்செஸ்டர் வலுப்பெற்றது. மீண்டும், அகுரோ (79), டேனியலோ (85) அசத்தினர். இதற்கு எதிரணி பதிலடி தர மறுக்க, மன்செஸ்டர் சிட்டி அணி 4-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

### சாதனை

இதன் மூலம், தொடர்ந்து 17ஆவது வெற்றியை பதிவு செய்தது. இத்தொடரில் அதிக வெற்றி பெற்ற அணி என்ற சாதனையை தக்க வைத்துக்கொண்டது.

1982 க்குப்பின் ஒரே ஆண்டில் 100 கோல் அடித்த அணி என்ற பெருமையை மான்செஸ்டர் சிட்டி பெற்றது. இதறகு முன், லிவர்பூல் அணி 1982ல் 106 கோல் அடித்திருந்தது. இந்த 'சீசனில்' மன்செஸ்டர் சிட்டி அணி இதுவரை 19 போட்டிகளில் 18 வெற்றி, ஒரு சமனிலை பெற்று 55 புள்ளியுடன் முதலிடத்தில் உள்ளது. அடுத்த இரண்டு இடங்கள் முறையே மன்செஸ்டர் யுனைடெட் (42), செல்சி (39) அணிகள் உள்ளனர்.

அபாரமாக விளையாடிய அகுரோ இம்மைதானத்தில் மான்செஸ்டர் சிட்டி அணிக்காக தனது 100ஆவது கோலை பதிவு செய்தார்.


### அதிக கோல்

பார்ன்லியில் நடந்த மற்றொரு லீக் போட்டியில் ஹாரி கேன் 'ஹாட்ரிக்' கோல் அடிக்க டொட்டன் ஹம் ஹாட்ஸ்பர் அணி 3-0 என பார்ன்லி அணியை வீழ்த்தியது. இதன் மூலம், இத்தொடரில், ஒரே ஆண்டில் (36 கோல்) அதிக கோல் அடித்த நியூகேசில் யுனைடெட அணியின் அலன் ஷியரர் (36 கோல், 1995) சாதனையை சமன் செய்தார்.

Merry Christmas

# நத்தார் சிறப்பிதழ் 2017

## யாழ்.ஆயரின் கிறிஸ்மஸ் வாழ்த்து



கிறிஸ்து பிறப்பு பெருவிழா இன்று கிறிஸ்தவ உலகு மட்டும் கொண்டாடும் ஒரு விழாவாக இல்லாமல் உலகை மக்கள் அனைவரும் கொண்டாடும் ஒரு உலகப் பெருவிழாவாக மாறிவிட்டது. இந்த உலகப் பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழா வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக.

பூவுலகில் நன்மனது கொண்டோருக்கு அமைதி ஆகுக என வாழ்த்துகிறோம்.

கிறிஸ்து பிறப்பு பெருவிழா ஒரு மகிழ்ச்சியின் விழா. ஒரு அன்புறவின் உறவின் விழா. ஒரு ஒன்றுகூடலின் விழா. குடும்பமாக - உறவுகளாக - நண்பர்களாக - பங்கு சமூகமாக இணைந்து குதூகலிக்கும் ஒரு விழா. கன்னி கருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவார். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவர். இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு என்று பொருள்படும் என மத்தேயு நற்செய்தியாளர் (மத்தேயு 1:23)இவ்விழா பற்றி விளக்கம் தருகிறார்.

நமது இந்த கிறிஸ்து பிறப்பு பெருவிழாக் கொண்டாட்டங்கள் அனைத்திலும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை தெளிவாக உணரவேண்டும். கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை உறுதிப்படுத்த வேண்டும். கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை இவ்விழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் அறிவிக்க வேண்டும். இந்த உண்மைக்கு ஏற்ற விதமாக இவ்விழாவை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆடைகள், அறுசுவை உணவு, பட்டாஸ் கோலங்கள் கொண்டாட்டங்கள் என மகிழ்ந்திருக்கும் போது அயல் வீட்டில் இவற்றைப் பெற முடியாதவர்கள் இருக்கிறார்கள் என்பதை மறக்காது பகிரக்கூடியவற்றை அவர்களோடு பகிர்ந்து மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குவோம். கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையை அவர்களும் உணரச்செய்வோம். போர் முடிந்து பல ஆண்டுகளாகியும் மக்களின் இயல்பு வாழ்வை மேம்படுத்துவதில் நல்லெண்ண அரசு வேகமாக செயற்படவில்லை. பல விடயங்களை இன்னும் முழுமையாக ஆற்றவில்லை என திரும்ப திரும்ப குறை கூறவேண்டியே உள்ளது.

இவற்றில் காணாமற்போனோர் விடயம் - அரசியற் கைதிகள் விடயம் - சொந்த நிலங்கள் விடுவிப்பு விடயம் என்பன முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டியன.

காணாமற் போனோர் விடயத்திற்கு உடன் முடிவு காணுங்கள். இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது. அதேவேளை உயிரோடு இருப்பவர்களை காலம் காலமாக மறைத்தே வைத்திருக்க முடியாது. மனித உயிர் சம்பந்தமான இப்பிரச்சினைக்கு இனியும் காலம் தாழ்த்தாது உடன் முடிவு காணுங்கள். இறந்தவர்களுக்கு சமயக் கடமைகளை நிறைவேற்றி உறவுகள் தம் மனசுகளை ஆறுதற்படுத்தவும் இறந்தவர்களுக்கான இறப்பு சான்றிதழைப் பெறவும் இழப்பீடு பெறவும் வழி செய்யுங்கள்.

அரசியற் கைதிகளை உடன் விடுதலை செய்யுங்கள். அவர்கள் வாழ்வை சிறைக்கம்பிகளின் பின்னால் இனியும் வீணடிக்காதீர்கள். ஏற்கனவே மனதளவில் பாதிக்கப்பட்ட அவர்கள் முழுமையான விடுதலை பெற விரைவாக செயற்படுங்கள் என தமிழ் மக்கள் பெயரால் வேண்டுகிறோம்.

சொந்த நிலங்களில் மக்கள் சென்று குடியமர்ந்தால்தான் யுத்தம் முடிந்து விட்டதென மக்கள் மன அமைதி கொள்வர். மக்கள் குடியிருப்புக்களில் இருந்து இராணுவத்தை முழுமையாக அகற்றுங்கள். அவர்களுக்கு அரச காணிகள் நிறையவே உண்டு. போராட்டம் முடிந்தமையால் அவர்கள் தள்ளி இருப்பதே சிறந்தது.

இவற்றை செயற்படுத்த காலம் கடத்துவதால் எதுவும் நடைபெறப் போவதில்லை. நல்லெண்ண அரசு இந்த அடிப்படை வசதிகளை நேரகாலத்தோடு செய்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி இந்த,நாட்டில் இனி வருங்காலத்தில் தமிழ்,சிங்களம் என்ற இரு இனங்களும் இணைந்தே வாழவேண்டும் என்ற சமாதான சமிக்ஞையைக் காட்டி இருக்க வேண்டும்.

இன்று என்றுமில்லாத அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்க நிலைமைகள் சாதகமாக இருப்பதால் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்ட தீர்வினைக் காண அரசியலில் சம்பந்தப்பட்ட அனைவரும் அனைத்து வேறுபாடுகளையும் மறந்து உழைக்க வேண்டுமென அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் இறையாசீர்மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

**மேதகு கலாநிதி**
**யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம்**
**யாழ்.ஆயர்**



## ரோமர் அமைதியும் கிறிஸ்துவின் அமைதியும்



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசு பிரான் பெத்லகேமிலுள்ள மாட்டுத் தொழுவம் ஒன்றில் பிறந்தார். அப்பொழுது உலகில் இருந்த ஒரேயொரு வல்லரசு ரோமராஜ்யமேயாகும். ரோமப் பேரரசர்களான ஜூலியஸ் சீசர் அகஸ்து சீசர் போன்றோரைப் பார்த்து உலகமே நடுநடுங்கி நின்றது.ரோமர் தாம் உலகுக்கு சமாதானம்,அமைதி என்பவற்றை அளிக்கின்றோம் என்று பெருமைப்பட்டனர். அவர்கள் கொடுத்த சமாதானம், ரோமரின் அமைதி (PAY ROMANA) என்றழைக்கப்பட்டது. ரோமரைப் பின்பற்றிப் பல நாடுகள் தாம் கொடுத்த அமைதியை பிரித்தானிய அமைதி (PAY BRITANIA),அமெரிக்க அமைதி (PAY AMERICANA) என்று பெருமையுடன் குறிப்பிட்டனர்.

ரோமருடைய சாந்திக்கு மக்கள் அதிகமான விலைகொடுக்க வேண்டியிருந்தது. நிறை கர்ப்பிணியான மரியாள் பல மைல் பிரயாணம் செய்து பெத்லகேம் செல்ல வேண்டியிருந்தது. அகஸ்து வரி ஏய்ப்பை நிறுத்த குடிமதிப்புக்கு உத்தரவிட்டார். ரோமசமாதானத்திற்கு அது அவசியமாகவிருந்தது. இயேசு பாலன் தனக்கு மாறான ஒரு சக்தியாக வந்து விடுவாரோ என்று பயந்து இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகள் எல்லாரையும் கொன்றழித்து விடுங்கள் என்று யூதேயாவிலிருந்து சிற்றரசன் ஏராது ஆணை பிறப்பித்தார். இவையெல்லாம் ரோம அமைதிக்கு அவசியமாகவிருந்தது. அந்த காரமும் பயமும் சூழ்ந்திருந்த ரோமர் ஆட்சிக்காலத்திலே தான் இயேசு பிறந்தார்.

கடுங்கோன்மையினால் உருவாக்கப்பட்ட ரோமர் அமைதிக்கு மாறாக அன்பும் அருளும் நிறைந்த அமைதியை வழங்கினார் அது கிறிஸ்துவின் அமைதி எனப்பட்டது. (PAY CHRISTY) அடக்கு முறையினால்உலகை ஆண்டவர்கள் சமுதாயத்தைக் கட்டுப்படுத்தியவர்கள் நீண்டகாலம் இன்பத்தை அனுபவிக்க முடியவில்லை. ஆனால் அன்பு, இரக்கம், பரிவு, தயாளம் என்பவற்றினால் மக்களை ஆண்டவர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கிறிஸ்துவின் அமைதி நமக்கு தைரியத்தைத் தருகின்றது.கர்த்தர்
நீதிமான்களின் வதியை அறிந்திருக்கின்றார்.
துன்மார்க்கரின் வழியோ அழியும் (திருப்பாடல் 1:6)

**கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
**முன்னாள் ஆயர், தென்னிந்திய திருச்சபை.**

## ஒளியாக மாற நல்வாழ்த்துக்கள்


பாலக இயேசுவின் பிறப்பை உலகமே கொண்டாடி மகிழும் நன்னாளில் நல் இதயங்கள் யாவருக்கும் இதயம் நிறைந்த நத்தார் வாழ்த்துக்கள்.

நாம் கொண்டாடும் பாலக இயேசுவின் பிறப்பு பல சோதனைகளை தாண்டியே சரித்திர சாதனையானது. தேடப்பட்டவரான பால இயேசு எங்கே? எப்போ? எப்படி? பிறப்பார் என எதிர்பார்த்திருந்த மக்கள் மத்தியில் மனுமகன் பிறப்போ சரித்திரத்திலும் இடம் இல்லை என அலைந்து அகதி யாகி மாடடைக் குடிலில் மரியின் மடியில் பிறக்க தீவனத் தொட்டியே தஞ்சமானது. இடையர்கள் தேடினர். மாட்டுத் தொழுவத்தில் கண்டனர். கீழை த்தேச மூவிராசாக்கள் தேடினர். வால்வெள்ளி நட்சத்திரம் வழிகாட் டியது. பரிசில்கள் கொடுத்தனர். ஏரோது அரசனும் தேடினான். பச்சிளம் பாலக னைக் கொல்வதற்காக/ தலைமறை வாகி அலைந்த செய்தி அத னால் நற்செய்தியில் பதிவாகியது. இப் பிறப்பின் செய்தியை அன்று இடையர்கள் பொறுப்புடன் பகிராவிட்டால் இன்று எமது ஒளி விழாக்கள் அர்த்தமிழந்திருக்கும். இன்றைய எமது விழாக் கள் அடுத்த தலைமுறையினரும் கொண்டாடி மகிழ எமது பொறுப்புக்கள் பகிரும் நற்செய்திகள் பிறர் வாழ்வுக்கு ஒளியாக வேண்டும். இதுவே எம் வாழ்வுக்கும் ஒளி விழாக்களும் அர்த்தமூட்டும்.

பாலக இயேசுவின் சாயலில் காணும் எம் சிறார்களின் வாழ்வில் ஒளி பிறக்க எதிர்கொள்ளும் சவால்களை வெல்ல எம் பொறுப்புக்களை உணர்ந்து சாட்சிகளாக மாற ஒளிவிழாக்களை நற்செய்தி பகிரும் செயல்கள் விழாக்களாக மாற கொண்டாடுவோம்.

அன்புள்ளங்கள் யாவர்க்கும் எமது நத்தார் நல்வாழ்த்துக்கள்.

**செ.யோசப்பாலா, செயலாளர், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.**



## பாலகனின் பிறப்பு எமது மண்ணை புதுப்பிக்கட்டும்

மழையும் குளிரும் நிறைந்த மார்கழி மாதம் பிறந்துவிட்டால் மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குவதோடு பாலக இயேசுவின் பிறப்பை நினைவுபடுத்தும் பல்வேறு விதமான காட்சிகளை நாம் காணக்கூடியதாக இருப்பது வழமையாகும். உலகில் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்படாத நாடுகளே இல்லை எனும் அளவிற்கு இவ்விழா சிறப்புப் பெறுகின்றது. எல்லா இடங்களிலும் மின் விளக்கு அலங்காரங்களும் சோடனைப் பொருட்களும் காட்சிப்படுத்தப்படுவதோடு கிறிஸ்மஸ் தாத்தா பொம்மைகளின் ஆக்கிரமிப்பும் அதிகமாக இருக்கும். மக்கள் புத்தாடை, புதுநகைகள் வாங்குவதோடு மட்டுமல்லாமல் கிறிஸ்து பிறப்புக் குடிலுக்கான சுரூபங்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்களை கொள்வனவு செய்வதிலும் அதிக ஆர்வம் காட்டுவர். அத்துடன் கிறிஸ்து பிறப்பு அன்று திருப்பலியில் பங்குபற்றுவதோடு இன்னும் பல ஆன்மீக செயற்பாடுகளிலும் ஈடுபடுவர். எனவே கிறிஸ்து பிறப்பு விழா கிறிஸ்தவர்களின் முக்கிய ஒரு விழாவாக கொண்டாடப்படுகிறது.

### மூவொரு இறைவனின் வாக்குறுதி

இறைவன் ஆதியில் மனிதனைப்படைத்து ஏதேன் தோட்டத்தில் வாழ அனுமதிக்கின்றார். இறைவனின் ஆசீர்வாதங்களும் அருள் வளங்களும் நிரம்பப் பெற்றவர்களாக அந்த நந்தவனத்திற்குள் வாழ ஆதிப்பெற்றோர் நுழைகின்றனர். எல்லா வசதிகளையும் வாய்ப்புக்களையும் கொடுத்த இறைவன் ஒரு நிபந்தனையை விதிக்கின்றார். தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல நீ உண்ணலாம்.ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தில் இருந்து மட்டும் உண்ணாதே (ஆதி 2:16-17) என்று கட்டளை இடுகின்றார். அலகையின் சூழ்ச்சியால் ஏவாள் ஏமாற்றப்பட்டு கட்டளையை மீறியதால் கடவுளின் சினத்திற்கு ஆளாவதோடு ஏதேன் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். அந்தவேளையில் இறைவனின் பரிவிரக்கம் அவர்களுக்கு வாக்குறுதி மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. "உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவேன்" (ஆதி 3:15) என்ற இறைவார்த்தைப் பகுதியும் எசாயா இறைவாக்கினரின் முன்னறிவிப்பும் (எசாயா 11:1-9) இதை உறுதிப்படுத்துகின்றது.

### தூய கன்னி மரியாவும் மெசியாவின் பிறப்பும்

இறைவன் தன்னுடைய மாபெரும் அன்பின் வெளிப்பாடாகவும் இரக்கத்தின் அடையாளமாகவும் தன்னுடைய அன்பு மகனை இவ்வுலகிற்கு அனுப்புகின்றார். தன் மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற தூய கன்னி மரியாவை தேர்ந்தெடுக்கின்றார். பிறப்பிலிருந்தே அவளைப் புனிதமாகப் படைத்து கன்னிமைக்கும் பழுதின்றிப் பாதுகாத்து தன்னுடைய அன்பு மகனைக் கருத்தாங்கும் பெரும் பாக்கியத்தைக் கொடுக்கின்றார். அருள் மிகப் பெற்றவளாக இதோ ஆண்டவரின் அடிமை என்றவள் கருவிலே திருச்சுதனை தாங்கி மீட்புத்திட்டத்தை தொடங்கி வைக்கின்றார். பேறுகாலம் வந்தபோது மாடடைக்குடிலில் பாலகனைப் பெற்றெடுத்து துணிகளில் பொதித்து தீவனத் தொட்டியில் வளர்த்துகின்றார்.

### மகிழ்ச்சி தருகின்ற பாலகனின் பிறப்பு

பாலக இயேசு பிறந்த பொழுது உலகில் பாவ இருள் அகன்றது. அகிலமெங்கும் அருள் ஒளி வீசியது. அனைவரின் உள்ளங்களிலும் பெரு மகிழ்வு உண்டாயிற்று. வானவர் அணி ஒன்று சேர்ந்து கடவுளைப் புகழ்ந்து அமைதிக் கீதம் இசைத்தனர். சாமக்காவல் செய்து வந்த இடையர்களுக்கு வானதூதர் மெசியாவின் பிறப்பின் செய்தி அறிவிக்க தம் இடையுடன் வந்து பணிந்து தொழுகின்றனர். அதிசயத் தாரகை கண்ட தூர தேசத்து ஞானிகள் மூவர் காணிக்கைப் பொருட்களுடன் பயணித்து மெசியாவைக் கண்டு காணிக்கை படைத்து வணங்கி மகிழ்வு கண்டனர். நாமும் பாலகனை உள்ளத்தால் தொழுது வணங்கி மகிழ்ச்சியை எமதாக்குவதொடு மற்றவர்களோடும் பகிர்ந்து கொள்வோம்.

### எமது மண் புதுப்பிக்கட்டும்

கிறிஸ்து பிறப்புப் பெருவிழா அன்பின் விழா, பகிர்வின் விழா, நம்பிக்கையின் விழா,விடுதலையின் விழா என்று அழைக்கப்படுகின்றது. மனிதம் புனிதமாக பேணப்பட வேண்டும். மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக இறைவன் மனுவானார். பாலக இயேசுவின் பிறப்பு எமக்கு மகிழ்வையும் சமாதானத்தையும் தந்துள்ளது. அச்சமாதானம் எமது உள்ளங்களிலும் இல்லங்களிலும் மட்டுமல்ல அனைத்து மக்களுக்கும் எமது மண்ணுக்கும் கிடைக்க வேண்டும் நிலையான சமாதான சாத்தியமாவதற்கு எமது உள்ளங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

முடிவாக "இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை அறிவிக்கின்றேன் (லூக்கா 2:10) என்ற இறைவார்த்தைச் செய்தி எமது மண்ணில் நிதர்சனமாக வேண்டும். புத்தாடை புனைவதிலும் வெளிஆடம்பரங்களிலும் மட்டும் தான் கிறிஸ்து பிறப்பு விழா என்பதை புறந்தள்ளுவோம். ஆன்மீக வாழ்வில் புனிதமாக மாறி புதுப்பிறப்படையும் போது தான் நத்தார் விழா அர்த்தம் உள்ளதாக மாறும்.


***இ.அ.அமலரட்ணம்***




# நத்தார் சிறப்பிதழ் 2017


உங்கள் இல்லங்கள், அலுவலகங்கள், வியாபார நிலையங்கள், பாடசாலைகள் போன்ற அனைத்திற்கும்
அதி உயர் தரத்திலான பாதுகாப்பினை வழங்கும் அனைத்து தொழில்நுட்பங்களும் ஒரே இடத்தில்


**HIKVISION**
AUTHORIZED MASTER DEALER



World No 1 Camara

அதிஉயர் கண்காணிப்பு கமராக்கள்
மிக குறைந்த விலையில் 2 வருட உத்தர வாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

உலகத்தரம் வாய்ந்த கண்காணிப்பு கமராக்கள்.




அனைத்து விதமான வாகனங்களுக்குரிய
Player / Cameras / LED TV
களும் எம்மிடமுண்டு.





Mobile Phone Software Repairing / Unlock

சகலவிதமான கையடக்க தொலைபேசிகளின்
உதிரிப்பாகங்களை மிககுறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.




தொழில்நுட்பம் சம்பந்தமான அனைத்து
தேவைகளும் ஒரே இடத்தில்...

Technology at the Speed of Life
**arun**
Software Developers

இல.273, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமையில்

J.A.ARUN T.P: 077 712 3313 / 021 221 5828

# நத்தார் சிறப்பிதழ் 2017

Merry Christmas


நத்தார் பண்டிகை, புதுவருடத்தை முன்னிட்டு புத்தம் புதிய டிசைன்களில் சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைகளை எண்ணம் போல் நியாயமான விலையில் வாங்கி மகிழ்ந்திட நாடவேண்டிய இடம்,

**ஆர்.வி.ஜி மருந்தகம்**

**ARVEGIE MEDICALS**

இல. 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே : 021 222 2129

**ASR Wedding Halls**

புதுப்பொழிவுடன் புதிய வைபர் மணமறை அமைக்கப்பட்டிருப்பதால் இப்போதே உங்கள் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்




திருமணங்கள், பதிவுத் திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் மற்றும் வங்கிகள், கம்பனிகளின் வைபவங்கள், பாடசாலை நிகழ்ச்சிகள் உட்பட சகல விதமான வைபவங்களையும் உங்கள் எண்ணம்போல் சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடன் சிறப்பாக நடத்திட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்...

இல. 542, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 373 4116,
021 222 1355, 021 222 1356
மின்னஞ்சல் : asrhall@hotmail.com
Find us on :
Facebook.com /Jaffnaasrenterprises





ANNAMALAIYAN SRI RAGAVENTHIRAR ENTERPRISES (PVT) LTD



யாழ்நகரில்

**ASR Hotel**

மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள சர்வதேச தரத்துடனான நட்சத்திர தங்குமிட விடுதி

**பிரான்சிஸ் றேடேஸ்**

**Francis Traders**

மீன்பிடி உபகரணங்கள், யமகா அவுட் மோட்டார் அதன் உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



இல.133/8, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

No.133/8, K.K.S.Road, Jaffna.

Proprietor : V.Douglas Paul
077 758 8224

T.P : 021 222 8392 / 077 758 8224
E-mail : francestraders.dl33@gmail.com


**கிருபா லேணர்ஸ்**

**சாரதி பயிற்சிப் பாடசாலை**

அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

- ஆண், பெண் இருபாலாருக்கும் (AUTO GEAR AND MANUAL) வாகனப் பயிற்சி.
- பெண்களுக்கு நவீன காரில் பெண் பயிற்சியாளர்களால் பயிற்சி.
- விசேட வீடியோ வகுப்புக்கள்.
- விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- தவணை முறைக் கட்டண வசதி.
- விரும்பிய நேரத்தை தெரிவு செய்யும் வசதி.
- இரவு நேர வாகனப் பயிற்சி.
- அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களால் மும்மொழிகளிலும் பயிற்சி.





226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 222 - 4353
021 - 492 - 3200
077 - 722 - 5292

A9 வீதி, கிளிநொச்சி.
(கச்சேரி முன்பாக)
021 - 228 - 5505
071 - 454 - 6955

இல.227/6,
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
(மதவடி அண்மையில்)
021 - 224 - 2022
071 - 454 - 6956

இல.216, A9 வீதி
வவுனியா (வசந்தி திரையரங்கு முன்பாக)
024 - 222 7777
0777 - 100 - 444

விக்னேஸ்வரா
கல்லூரி வீதி, நெல்லியடி.
021 - 300 - 6550
071 - 454 - 6957

கண்டி வீதி,
சாவகச்சேரி
021 - 227 - 0700
021 - 492 - 3202

வாடியடி சந்தி, பூநகரி.
021 - 320 - 1818, 071 - 454 - 6955

இல.94, பிரதான வீதி,
மன்னார்.
071 - 988 - 7699, 077 - 847 - 2732

நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி,
முழங்காவில்.
021 - 300 - 6544, 071 - 454 - 6955

புளியடிச்சந்தி, முல்லைவீதி, விசுவமடு.
021 - 320 - 1515, 071 - 454 - 6955

# நத்தார் சிறப்பிதழ் 2017


## CITY MEDICAL CARE (PVT) LTD

CITY MEDICALS
SINCE 1978

சகல விதமான மருந்துப் பொருட்கள் மளிகைப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ளவும்.

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து விநியோகிக்கின்றோம். வாடிக்கையாளர் அனைவரும் எமது காட்சியறைக்கு வருகை தந்து கவர்ச்சிகரமான விலைக்கழிவை பெற்றுக் கொள்ளுங்கள்.



40ஆவது ஆண்டுக்குள் காலடி வைக்கும் எமது ஸ்தாபனத்துக்கு யாழ். மாவட்டத்தில் வேறு கிளைகள் கிடையாது.

CITY MEDICALS NO.487, HOSPITAL ROAD, JAFFNA.
T.P: 021 222 3880, 021 222 7693

CITY MEDICAL CARE (PVT) LTD,
NO.558A HOSPITAL ROAD, JAFFNA.
021 221 7661



நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு

இந்தியன் செலக்ஷனின்

## இந்தியன் பஜார்

வழங்கும்

மாபெரும் விசேட விலைக் கழிவுகள்



உங்களுக்குத் தேவையான
திருமண பட்டுப் புடைவைகள்
விதம் விதமான
அழகிய பட்டுப் புடைவைகள்
மற்றும்
அனைத்து வகையான
ஆடைகளையும்
மிகக் குறைந்த
விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

இடம்:
யாழ். வீரசிங்கம் மண்டபம்.
காலம்: 18.12.2017-02.01.2018 வரை



## ST.ANTONY'S Computer

187,KKS Road, Jaffna. 021 222 4865 / 075 069 8608

We CAN REPAIR
*NO POWER*
*NO DISPLAY*
*NO CHARGING*
*NO BOOTING*

## COMPUTER REPAIR

*PROFESSIONAL, SERVICES FOR HOME AND OFFICE*

- கணனி திருத்தும்
- கணனி மாற்றும்
- கணனி உதிரிப்பாகங்கள் விற்பனை
- கண்காணிப்பு கமரா பொருத்துதல்

கணனிகள் யாவும் உடனுக்குடன் திருத்திக்கொடுக்கப்படும்.



பண்டிகைக்கால ஏசியன் தளபாடத்தின்


## மாபெரும் மலிவு விற்பனை

Table Mate 2400/= 1400/=
Table Fan (1 year Warranty) 4600/= 3510/=
ஸ்ரீல் அலுமாரி 13500/= 9950/=
Kitchen Rack 2000/= 1450/=
பிரம்பு செற் 16500/=14750/=
6X4 கட்டில் 10500/=9000/=
லெதர் சோபா செற் (டீபோ இலவசம்) 41450/=36500/=
Iron Board 1300/= 990/=
6 கதிரை ரீப்போ 5500/= 4200/=
Imported மர அலுமாரி 29000/=18240/=

இல.230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6911. 076 821 9415. 077 358 3879



## அல்பா மிக்சர்



மிக்ஷர் பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை, கவர்ச்சிகரமான சம்பளமும் உணவும் வழங்கப்படும்.

தொ.பே :
076 881 3891

Backss Lane, Uduvil Road, Manipay.
Tel :- 021 225 5278

Alpha Mixture

பக்கஸ் ஒழுங்கை, உடுவில் வீதி, மானிப்பாய்.
தொலைபேசி :- 021 225 5278



ஸ்ரீகாந்தா ஓட்டோ கெயார் சென்ரர்
வாகன சேவிஸ்
வீல் அலைன்மன்ற்
ஓயில் மாற்றம்
வாகன திருத்த வேலைகள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றிட நாடுங்கள்!
Srikantha Auto Care Centre
இருபது வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள தரமான வேலைகள்
ரயர் மற்றும் பாவனைக்கு உகந்த பாவித்த ரயர்கள் விற்பனைக்குண்டு.
T.P : 077 814 7025, 021 222 4363
பலாலி றோட் கோண்டாவில் சந்தி யாழ்ப்பாணம்.




காலங்கள் மாறலாம். அதுபோல நாமும்,
புதிய பழக்க வழக்கங்கள், அனுபவங்கள்,
அங்கீகாரங்கள், பொறுப்புக்கள்,
இந்த மாற்றங்கள் எல்லாம் வளர்ச்சியின் ஒரு பாகம்.
இருப்பினும், இப்படியொரு மாற்றங்கள்
நமக்குள் இருந்தாலும்
சில பொருட்கள் நம்மிடையே
என்றுமே மாறுவதில்லை.
எத்தனையோ மாற்றங்களிலும்
ஒன்று மட்டும் என்றுமே
மாறாது. உறவுகள்...
தங்கமான உறவு
இப்பொழுது
புதிய பொலிவுடன்
வாழ்க்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய நத்தார்
புதுவருட
வாழ்த்துக்கள்
நியூ உதயா ஜுவெல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Thank You
NEW Uthayaa JEWELLERS
021 222 2031
newuthayajwellrs@gmail.com
No. 91, Power House Road, Jaffna
Newuthaya
uthaya.new




# நத்தார் சிறப்பிதழ் 2017


## விசேட விலைக்கழிவு !!!




நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட Everpure Hi – Tec (Pvt) Ltd. நிறுவனம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) யால் அங்கீகரிக்கப்பட்டு யாழ் மண்ணை தளமாக கொண்டு இயங்கி வரும் ஒரே நிறுவனமாகும்.

**எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**

உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள கல்சியம் , மக்னீசியம் , மாசுக்கள் கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

**Water Softener System**

Tiles , Bathroom Fittings , Washing Machine களில் படியும் கல்சியம் , மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

**கழிவுநீர் சுத்திகரிப்பு**

வீடு , தொழிற்சாலை , உல்லாச் விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.

**நீச்சல் தடாக வடிவமைப்பு**


உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து , நிறுவி , பராமரித்துத் தரப்படும்.

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**

No.341, K.K.S Road, Jaffna. | Hp - 021 222 6888, 021 567 7567 | Hotline - 077 362 6230
Web : www.everpurehitec.com E-mail: everpurehitec@gmail.com FB: everpurehitec

## மாபெரும் மலிவு விற்பனை 2017

| | | | |
|---|---|---|---|
| I. | Table Mate | 2400/= | 1400/= |
| II. | Dressing Table | 7500/= | 4680/= |
| III. | Cane Set | 16900/= | 14900/= |
| IV. | 6 Chair with Tipo (wisdom) | 6000/= | 5450/= |
| V. | SOFA Set With Glass Coffee Table | 43000/= | 36500/= |
| VI. | Wood Cupboard (Import) | 29000/= | 18240/= |
| VII. | Mattress | 3600/= | 2920/= |



"வெளிநாட்டில்" இருந்து புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட வீடு மற்றும் அலுவலகத்துக்கு தேவையான அனைத்துப் பொருள்களையும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

அரசடி வீதி, தட்டாதெரு சந்திக்கும் பிறவுண் வீதி சந்திக்கும் இடையில்
076 821 9418. 076 821 9413

## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத்துக்கு இரு விற்பனையாளர்கள் தேவை. பழகியவர்களும் பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. (பெண்கள்)

- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்



**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## டெங்கு ஒழிப்பு செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.கிளையினால் நடத்தப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் ஓர் செயற்பாடாக டெங்கு நோய் தொடர்பான செயலமர்வு நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (இ-7)



உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த அமரர்களான ச.பாலகிருஸ்ணன் மற்றும் பா.புஸ்பராணி ஆகியோரின் நினைவாக உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை கனடாவைச் சேர்ந்த பா.கஜமுகன் அண்மையில் வழங்கி வைத்தார்.

## முன்பள்ளியின் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு வளர்மதி பாலர் முன்பள்ளியின் கலைவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வளர்மதி சனசமூக நிலைய கலையரங்கில் பி.மகிந்தினி தலைமையில் இடம்பெறும்

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. அரியநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கனடா வாழ் கல்விச் செயற்பாட்டாளர் பொன். கந்தையா மற்றும் ஓய்வு நிலை அதிபர் மு.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-101)

## கிறிஸ்மஸ் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறும். (இ-7)

## முதியோர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்வடக்கு முதியோர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)

## வழமைக்குத் திரும்பிய வைத்திய சேவை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச சபையின் கீழுள்ள செம்பியன்பற்று உபஅலுவலகத்தில் இயங்கி வந்த பிரதேச ஆயுள்வேத வைத்தியசாலை கடந்த சில காலமாக வாரத்தில் ஒரு நாள் மட்டும் இயங்கி வந்தது.

இந்நிலையில் கடந்த 21ஆம் திகதியிலிருந்து திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும் சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் ஆயுள்வேத வைத்திய சேவையும் வைத்திய ஆலோசனையும் இடம்பெற்று வருவதாக செம்பியன்பற்று உள அலுவலர் தெரிவித்துள்ளார். (இ-10-64)

## விற்பனைக் கண்காட்சி






(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சமுர்த்தி சங்கங்களின் சமாசங்களின் ஏற்பாட்டில் சமுர்த்தி அபிமானி 2017ஆம் ஆண்டு விற்பனைக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமையும் நேற்று முன்தினம் சனிக்கிழமையும் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட சமுர்த்திப் பயனாளிகளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் சுயதொழில் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டு நடைபெற்ற கண்காட்சியில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-10-19-105)

# மனிதநேயத்திற்கு எதிராக எழுந்து நிற்கும் ஆயுதங்களை மௌனிக்க செய்ய வேண்டும்



## ஜனாதிபதி மைத்திரி நத்தார் வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டு எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் விடை காணமுடியும் என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மனிதநேயத்திற்கு எதிராக எழுந்து நிற்கும் சகல ஆயுதங்களையும் மௌனிக்கச் செய்து, எதிர்காலத்தைப் பிரகாசமடையச் செய்ய அவ்வழியே சிறந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

நத்தார் தின வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கோலாகலமான உலகபண்டிகையான நத்தார் கொண்டாட்டங்களுடன் இணைந்து அதனைக் கொண்டாடும் நம் நாட்டின் கிறிஸ்தவ சகோதரர்களுக்கு எனது நத்தார் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தெய்வீகத்தன்மையும் மனிதாபிமானமும் சந்தித்துக்கொள்ளும் ஒரு அபூர்வ நிகழ்வாக அன்று முதல் இன்று வரை நத்தார் பண்டிகை மானிட வரலாற்றில் முக்கிய பங்கினை வகித்து வருகின்றது.

விவேகமும் சமத்துவமும் அற்ற, குரூரத்தனம் வேரூன்றியிருந்த காலப்பகுதியிலேயே இயேசு பிரான் இந்த பூமியில் அவதரித்தார். அவர் தெய்வீக வரம் பெற்றவராக இந்த பூமியில் பிறந்திருந்தபோதிலும், சமூகத்தின் தீமையினை நீக்குவதற்கான வழிகாட்டு தலை ஒரு சாதாரண மனிதர் தமது வாழ்வில் எதிர்நோக்க நேரிடும் அனைத்து இடையூறுகளையும் அனுபவித்தவாறே அவர் உலக மக்களுக்கு வழங்கினார்.

இதனாலேயே மனிதாபிமானத்தின் ஆழத்தையும் அதில் இருக்கவேண்டிய முன்மாதிரியான குணங்களையும் உலக மக்கள் சரியாக இனங்கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது.

தற்கால உலகமக்கள் எதிர் நோக்கியிருக்கும் பாரிய சவால்களுக்கான தீர்வுகளைக் காண்பதற்கான வழிமுறையும் அதனுள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

அதாவது மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டு எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் விடை காணமுடியும் என்பதே அங்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

ஏனையவர்களின் மீது காட்டும் இரக்கம், கருணை ஆகியன தமக்கு வெற்றியைத் தருவதுடன், ஒட்டுமொத்த மனித வர்க்கத்தையே சகவாழ்வை நோக்கி இட்டுச்செல்லும் என்பதும் தெளிவாகின்றது.


மனிதநேயத்திற்கு எதிராக எழுந்து நிற்கும் சகல ஆயுதங்களையும் மௌனிக்கச் செய்து, அமைதியின் பாதையில் எதிர்காலத்தைப் பிரகாசமடையச் செய்ய இத்தகைய பயணப்பாதையில் பயணிப்பதன் மூலமே இயலுமானதாக அமையும்.

இத்தகைய மகத்தான சிந்தனையை நிஜமாக்கும் தேவாலயத்தின் அந்த இனிமையான மணியோசையானது, இந்த நத்தார் காலத்தில் உலகமெங்கும் எதிரொலிக்கட்டுமாக.

உலகவாழ் சகல கிறிஸ்தவ மக்களுக்கும் அமைதியும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த இனிய நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# நம்பிக்கை இழந்து வாழும் எமது மக்களின் மனங்களில் நம்பிக்கை மீள உருவாகட்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நத்தார் வாழ்த்து



(கொழும்பு)

நத்தார் தின ஒளியானது நம்பிக்கை இழந்து வாழும் எமது மக்களின் மனங்களில் நம்பிக்கையையும் சமாதானத்தையும் மீள் உயிர்ப்பிக்கிறதாக அமைய வேண்டுமென பாராளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நத்தார் தின வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துளளார்.

கிறிஸ்து நாதரின் பிறப்பினை கொண்டாடும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் எனது மனங்கனிந்த நத்தார் தின வாழ்த்துக்கள்.

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் நிகழ்ந்த கிறிஸ்து நாதரின் பிறப்பானது மக்களுக்கு சமாதானத்தையும் நம்பிக்கையையும் கொண்டு வந்தது.

நத்தார் பண்டிகையின் நிகழ்வுகளானது கிறிஸ்து நாதர் வெளிக்காட்டிய தாழ்மை, அன்பு,பிறரை நேசித்தல், மற்றும் தியாகம் போன்ற பண்புகளை எமக்கு மீள ஞாபகமூட்டி நிற்கின்றன.

மேலும் அன்பு, மனதுருக்கம், பிறரை நேசித்தல், உண்மை ,சமத்துவம் மற்றும் சமூக நீதி போன்றவை தொடர்பில் கிறிஸ்து நாதரின் போதனைகளானது இன்றும் எமது சமூகங்களுக்கு தொடர்புடையதாக இருப்பதுமன்றி எப்போதும் அவை தொடர்புடையதாகவே காணப்படும்.

நத்தார் தின ஒளியானது நம்பிக்கை இழந்து வாழும் எமது மக்களின் மனங்களில் நம்பிக்கையையும் சமாதானத்தையும் மீள் உயிர்ப்பிக்கிறதாக அமைய வேண்டுமென பிரார்த்திப்பதோடு, இந்த நத்தார் பண்டிகை காலங்களை வசதியற்று இயலாமையில் உள்ள எம் சக மக்கள் மீதான எமது கரிசனையை வெளிக்காட்டும் காலங்களாக அனுஷ்டிக்குமாறும் வேண்டுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# நிரந்தர விடியலின் சமாதான ஒளி வீசட்டும்

## டக்ளஸ் எம்.பி. நத்தார் வாழ்த்து



(யாழ்ப்பாணம்)

நிரந்தர விடியலின் சமாதான ஒளி வீசட்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நத்தார்தின வழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலகத்தின்ஒளியாக கருணை மைந்தன் இயேசு பிரான் பிறப்பெடுத்த இத்தினத்தை உலகெங்கும் வாழும்மக்களுடன்இணைந்து எமது மக்களும் நத்தார் தினமாக நம்பிக்கையோடு கொண்டாடி மகிழ்ந்து வருகின்றார்கள். இந்த நத்தார் தினத்தை நாமும் எமது மக்களோடு இணைந்து மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம்!

நிரந்தர சமாதானம், நீடித்த சமஉரிமை, வரலாறு எங்கும் துயரச் சுமைகளை சுமந்த எமது மக்களுக்கு ஒரு நியாயத் தீர்ப்பு. இவைகளே எமது மக்களின் ஆழ்மன விருப்பங்கள். ஆனாலும் எமது மக்களின் விருப்பங்கள் யாவும் வெறும் கற்பாறைகளில் மட்டும் விதைக்கப்பட்ட விதைகளாகவே இருந்து வந்திருக்கின்றன.

நிரந்தர சமாதானத்தை நோக்கிய எமது மக்களின் விருப்பங்கள் யாவும் நிறை வேறாத கனவுகளாக முடங்கிப் போயிருக்கின்றன. தீமையை வெறுத்து நன்மையை விரும்பி நியாயத்தை நிலைப்படுத்த முன்வாருங்கள்!

நீங்கள் உண்மையானவர்களை விசுவாசித்தால் நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும் புரண்டு வரும். தவறான பாதையை நீங்கள் தெரிவு செய்வது சிங்கத் திடமிருந்து தப்பியவனுக்கு கரடி எதிர்ப்பட்டது போல், அல்லது வீட்டுக்குள் வந்து சுவரின் மேல் கையை வைத்தவனுக்கு பாம்பு கடித்தது போலவே இருக்கும். ஆகவே இனிவரும்காலம்நல்லகனி தரும் காலமாக மாறிவர நாம் தொடர்ந்தும் மாற்றத்திற்காக உழைப்போம். சமாதானத்தின் வடிவாக கருணை மைந்தன் இயேசு பிரான் பிறந்த இத்தினத்தில், எமது வரலாற்று வாழ்விடங்கள் தோறும் உங்கள் இல்லங்களின் வாசல்தோறும், நிரந்தர விடியலின் சமாதான ஒளிவீசவும் சமவுரிமை மலரவும் நாம் உழைப்போம் என உறுதி கொண்டு எழுவோம். உங்கள் அனைவருக்கும் நத்தார் தின வாழ்த்துக்கள்! அன்பும் கருணையும் அவனி முழுவதையும் ஆழட்டும்! என அவர் மேலும் தெரிவிததுள்ளார். (இ)

# ஏழை மக்களின் துன்பங்களை சிறிதாவது குறைக்க வேண்டும்

## நத்தார் தின வாழ்த்தில் வடக்கு ஆளுநர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நத்தார் தினத்தில், வசதி வாய்ப்புக்கள், வாழ்வு வளங்கள் மறுக்கப்பட்ட ஏழை மக்களிடம், அன்பினைப் பகிர்ந்து அவர்களின் துன்பங்களை சிறிதாவது குறைக்க நாம் முன்வர வேண்டும் என வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

நத்தார் தின வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்

மகிழ்ச்சி மிக்க நத்தார் 2017 எம்மிடத்தில் நிறைந்திருக்கின்றது.

நத்தார் என்பது கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் ஒரு காலமாகும். இக் காலமானது எமது விழுமியங்கள், அன்பு, சமாதானம் மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது. கடவுளின் எல்லையற்ற அன்பை நாம் பிரதிபலிக்கிறோம்.



யேசுபிரானின் பிறப்பு, வாழ்வு ஆகியவற்றிற்கு நிரந்தரமான உண்மைத்துவம் தரும் அன்பு, ஐக்கியம், ச்கிப்புத் தன்மை மற்றும் சமாதான சகவாழ்வு ஆகியவை நிறைந்த சூழ்நிலையை உருவாக்க பெருவிருப்பம் கொள்கின்ற அகில உலக கொண்டாட்ட காலமாக நத்தார் திகழ்கிறது.

இயேசு கிறிஸ்துவே உலகிற்கு நல்லிணக்கம் மற்றும் சமூக நீதியின் பெரும் தூதர். ஒரு மெழுகுதிரியை ஒளிரச் செய்தல், இருளைச் சபிப்பதை விட மேலானதும் சிறந்தது மாகும்.

இன்று உலகில் மில்லியன் கணக்கான மக்கள் நம்பிக்கை என்னும் மெழுகுவர்த்தியை ஏற்றி உள்ளனர். நத்தார் ஒரு சமயரீதியிலான புனித நாள் என்பதுடன் உலகளாவிய பண்பாட்டு நிகழ்வுமாகும். இரண்டாயிரம் ஆண்டுகளாக உலகெங்கிலும் உள்ள மக்கள் சமய மரபுகள் மற்றும் உலகியல் பழக்கவழக்கங்களுடன் நத்தார் தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

நமது நாட்டில் நத்தார் கொண்டாட்டங்களின் ஆரம்பம் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியது. கர்த்தரான இயேசு பிரான் பிறந்த தினமான டிசெம்பர் 25 நமது தாய் நாடான இலங்கையில் கிறி ஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்த வரல்லாத எல்லா சமூகத்தினராலும் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

நாம் இந்த நத்தார் தினத்தில் வசதி வாய்ப்புகள், வாழ்வு வளங்கள் மறுக்கப்பட்ட மக்களை சிந்திக்க வேண்டும். வறுமை, தனிமை, நோய், அன்புக்குரியவர்களின் இழப்பு - இந்த உண்மைகள் நத்தார் தினத்தில் எம்மை அவர்களுக்காக உழைப்பதற்கு திடம்கொள்ள வைக்கின்றன. இதன் முதல் படி, அவர்களிடம் நம் அன்பினைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் அவர்களின் துன்பங்களை சிறிதாவது குறைக்க முடியும். வெளிச்சம் பிரகாசிக்கும் போது இருள் தன்னை வெளிக்கொணர முடியாது.

இயேசு கிறிஸ்து சமாதானத்தின் இளவரசனும் வாழ்க்கையின் சிறந்த வெற்றியாளனும் ஆவார். பயம் நிறைந்த, பாவம் நிறைந்த, வன் கொடுமைகளுக்கு ஆளான மற்றும் வேதனைகளுக்குள்ளான மக்களுக்கு அவரது அன்பு உண்மையானதும் முழுமையானதுமாகும்.

அதற்கு இயேசு "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சாமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்றார். (யோவான் 14:27) கர்த்தராகிய இயேசு உம்மையும் உமது குடும்பத்தினரையும் சமாதானத்துடனும் செழிப்புடனும் அன்புடனும் அதிஸ்டத்துடனும் வாழ ஆசிர்வதிப்பாராக என தெரிவித்துள்ளார். (இ-9)

# மரியன்னை ஈன்ற பாலா

ஊரெல்லாம் மகிழ்ந்து பொங்க நீலம் குழைத்த
அகன்றவானில் புதுமீனும் ஒளியைக் கொட்ட
மார்கழியின் பனிப்பொழிய மாட்டுக் குடிலில்
மனிதபாவத்தை வேரறுத்து உலகை மீட்கத்
தோமுத, மரியன்னை ஈன்றபாலா
தெய்வமைந்தா! யேசுநாதா! உம்மை மறந்த
சீர் கெட்ட ஈனரையா தேடி வந்தீர்?
சின்னவிழி எடுத்தெம்மைப் பாரும் ஐயா!

பொல்லாத பசிக்குணவு தருவார் இல்லை!
பொறாமையால் பிறர்வாழ்வைக் கெடுப்போர் உண்டு
இல்லாத ஒன்றினுக்கே உருவமைத்து
இனவாதம் மதவாதம் பேசிக் குழப்பிக்
கல்லாத மனிதருக்கு பிளவுண்டாக்கிக்
கொக்கரிப்போர் இங்குளரே! வேதந்தானும்
சொல்லாத நெறியையேசு தந்தபரதனால்
சிரந்தாழ்த்தி அவரடியை வணங்கி வாழ்வோம்!

-கலாபூஷணம், கவிஞர் மு.சிங்கராயர்.

# இறைமகனை தொழுவோமே

பல்லவி

உலகெங்கும் விடிவெள்ளி ஒளிக்கீற்று இருளகற்ற
இரட்சகராய் தொழுவமதில் இறைபாலன் பிறந்தாரே.

அனுபல்லவி

தலம்யாவும் தேடிவந்து தூதுவனை துதிக்கையிலே
துலங்குமே பெருவாழ்வு தலமெழுகு ஒளிதனிலே
-உலகெங்கும்

சரணம்

மாரியற் கதிர்முற்றி மண்மீது சாய்ந்து விடும்
மனம்போல நெல்மணிகள் மனைமீது குவிந்து விடும்.
மேரிசூசை மைந்தனையே மாட்டிடை குடிலங்கண்டு
மூவரசர் இடையர் போல் மங்கலமும் பாடுவோமே
-உலகெங்கும்.

ஆக்கம்: "யாழ்முத்து" கே. திருத்துவராஜா.

# பாரதம்

# ஆர்.கே.நகரில் தினகரன் புதிய அவதாரம்

(சென்னை)

ஆர்.கே.நகர் இடைத் தேர்தல் மூலம் டி.டி.வி.தினகரன் புதிய அவதாரம் எடுத்துள்ளதால் தமிழக அரசியல் களத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அ.தி.மு.க.வில்இருந்து ஓரம் கட்டப்பட்ட டி.டி.வி. தினகரன் சுயேட்சை வேட்பாளராக களம் இறங்கி சாதித்துக் காட்டியுள்ளார். இது ஆளும் கட்சியான அ.தி.மு.கவுக்கும் எதிர்க் கட்சியான தி.மு.கவுக்கும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றி பெற்ற தொகுதியான ஆர்.கே.நகரில் அவரது திடீர் மரணத்தால் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

பணப் பட்டுவாடா புகாரால் கடந்த ஏப்ரல் மாதம் இரத்துச் செய்யப்பட்ட ஆர்.கே.நகர் தேர்தல் கடந்த 21ஆம் திகதி நடத்தி முடிக்கப்பட்டது. பணப் பட்டுவாடா விவகாரம் இந்த தேர்தலிலும் பூதாகரமாக எழுந்தது. ஆனால் அது தேர்தலுக்கு வேட்டு வைக்கவில்லை.

பிளவுபட்ட அ.தி.மு.க. அணிகள் (எடப்பாடி பழனிசாமி-ஓ.பன்னீர்செல்வம்) இணைந்து அ.தி.மு.க. சின்னமான இரட்டை இலையை மீட்டெடுத்தனர். வெற்றிச் சின்னமான இரட்டை இலைச் சின்னம் எங்களுக்கு கிடைத்துள்ளது. நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்று அ.தி.மு.கவினர் உறுதியாக நம்பினர்.

அதே நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவரான மு.க.ஸ்டாலின் ஆர்.கே.நகரில் தி.மு.க. நிச்சயம் வெற்றி பெறும். அ.தி.மு.கவுக்கு டெபாசிட் கூட கிடைக்காது. இன்னொருவரும் (தினகரன்) தொப்பியை இழந்து தேர்தலில் நிற்கிறார். அ.தி.மு.கவுக்கும், எங்களுக்கும் தான் போட்டி என்று கூறினார். இப்படி பலம் வாய்ந்த 2 பெரிய கட்சிகளுடன் சுயேட்சை வேட்பாளராக டிடிவி.தினகரன் போட்டியிட்டார்.

அ.தி.மு.கவும், தி.மு.க.வும் அவரை பெரிதாக கண்டு கொள்ளவில்லை. இரட்டை இலைச் சின்னம் கிடைத்துவிட்டது. அதனால் வெற்றி நிச்சயம் என்று நம்பினார்கள் அ.தி.மு.கவினர் அதே நேரத்தில், அ.தி.மு.கவில் ஏற்பட்டுள்ள பிளவும் கூட்டணி கட்சிகளின் பலமும் நிச்சயம் தங்களை வெற்றி பெற செய்யும் என்று தி.மு.கவினர் நம்பினர். ஆனால் ஆர்.கே.நகர் தொகுதி மக்களோ மாற்றி யோசித்தனர். சுயேட்சையாக குக்கர் சின்னத்தில் போட்டியிட்ட தினகரன் விசில் அடித்து சாதித்து காட்டியுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் தமிழக அரசியல் களத்தில் புதிய தலைவராகவே தினகரன் அவதாரம் எடுத்துள்ளார்.

ஏனென்றால் அ.தி.மு.க. அணிகள் பிளவுபட்டிருந்த போது சசிகலா தலைமையில் அ.தி.மு.க. அம்மா அணி இயங்கியது. சசிகலா சிறை சென்ற நேரத்தில் அந்த அணியின் துணை பொதுச் செயலாளரானார் தினகரன். பின்னர் சசிகலா அணி எடப்பாடி அணியாக மாறி ஓ.பி.எஸ்ஸுடன் கைகோர்த்தது. ஒன்றுபட்ட அ.தி.மு.க. உருவானதால் தினகரன் முற்றிலுமாக ஓரம் கட்டப்பட்டார். இதனால் இனி அவர் அவ்வளவுதான் என்கிற பேச்சுக்களும் எழுந்தன.

கடந்த முறை ஆர்.கே. நகரில் போட்டியிட்ட போதே தினகரனுக்கு சோதனைக் காலம் தொடங்கியது.

இரட்டை இலைச் சின்னத்துக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கில் கைது வருமான வரி சோதனை என அவர் மீது அம்புகள் பாய்ந்து கொண்டே இருந்தன. இதையெல்லாம் அவர் தைரியமாகவே எதிர் கொண்டார். அதே துணிச்சலுடன் ஆர்.கே.நகர் தேர்தலிலும் களம் இறங்கினார்.

தினகரன் மீது தொடர்ச்சியாக தொடுக்கப்பட்ட இந்த எதிர்ப்பு கணைகளை எல்லாம் தனது அசாத்திய தைரியம், துணிச்சலால் தவிடு பொடியாக்கி காட்டியுள்ளார் தினகரன்.

ஆர்.கே.நகர் தேர்தலில் நான் வெற்றிபெற்று சட்டசபைக்குள் செல்வேன். அப்போது 'சிலீப்பர் செல்' எம்.எல்.ஏக்கள் என்னை ஆதரிப்பார்கள் என்றும் கூறியிருந்தார்.



இதனால் ஆர்.கே.நகர் தேர்தலுக்கு பின்னர் தமிழக அரசியல் களத்தில் அதிரடி மாற்றம் நிகழுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. தினகரன் கூறியதுபோல அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அவரை ஆதரிக்க தொடங்கினால் அது நிச்சயம் அதிரடி மாற்றத்திற்கு வழி வகுக்கும் என்பதே அரசியல் நோக்கர்களின் கணிப்பாக உள்ளது.

தமிழக அரசியல் ஜெயலலிதாவின் மரணத்திற்கு பின்னர் ஒரு வெற்றிடம் நிலவுகிறது. புதிய நபர் ஒருவர் வருவாரா? என்கிற எதிர்பார்ப்பு பரவலாகவே உள்ளது. அந்த புதியவர் டி.டி.வி.தினகரனா? என்கிற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

ஆர்.கே.நகரில் பெற்ற வெற்றியின் மூலம் நான் இல்லாமல் தமிழக அரசியல் களம் இல்லை என்பதை தினகரன் ஆணித்தரமாகவே உணர்த்தியிருக்கிறார். அவரது ஆதரவாளர்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியுள்ளனர். (இ)

# அ.தி.மு.க.கட்சியும் இரட்டை இலையும் தினகரனிடம் வரும்

## தங்க தமிழ்ச்செல்வன் பேட்டி



(சென்னை)

அ.தி.மு.க கட்சியும், இரட்டை இலைச் சின்னமும் டி.டி.வி. தினகரனிடம் விரைவில் வரும் என்று தங்க தமிழ்ச் செல்வன் எம்.எல்.ஏ நம்பிக் கையுடன் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசியலில் பல த்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் டிடிவி தினகரன் வெற்றிபெற்றுள்ளார்.

இந்நிலையில் இது குறித்து தினகரன் ஆதரவாளர் தங்க தமிழ்ச்செல்வன் சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், "அண்ணாவால் உருவான உதய சூரியன் சின்னத்தையும், எம்.ஜி. ஆரால் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டை இலைச் சின்னத்தை சுயேட்சை சின்னம் வென்றுள்ளது. தினகரனுக்கு வாக்களித்த ஆர்.கே. நகர் மக்களுக்கு நன்றி.

பணபலம், படை பலத்தை வென்றுள்ளார் தினகரன். மத்திய, மாநில அரசுகளின் முயற்சியை முறியடித்திருக்கிறோம். மக்கள் நம்பிக்கை வைத்ததாலேயே தினகரன் வெற்றி பெற்றுள்ளார். இது துரோக ஆட்சி. இந்த ஆட்சி அகற்றப்படும் என்று தினகரன் உறுதியளித்தார். மக்களும், அ.தி.மு.க. தொண்டர்களும் எங்கள் பக்கம் இருக்கிறார்கள். அ.தி.மு.க. கட்சியும், இரட்டை இலைச்சின்னமும் தினகரனிடம் வரும்.

நாங்கள் பணப் பட்டு வாடா செய்யவில்லை. அ.தி.மு.க தான் பணப் பட்டுவாடா செய்தது. அதிமுகவில் 60 ஸ்லீப்பர் செல்கள்இருக்கிறார்கள். அவர்கள் விரைவில் வெளியே வருவார்கள் என்று தங்க தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

# ஆற்றுக்குள் கவிழ்ந்த பேருந்து 32 பேர் பரிதாபமாகப் பலி

## பிரதமர் மோடி இரங்கல்



(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தான் மாநிலத்தில் நேற்று முன்தினம் மாலை பேருந்து ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழப்பு 32 ஆக உயர்ந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் சவாய் சவாய் மதோபூர் நகரில் இருந்து சுமார் 40-க்கும் மேற்பட்ட பயணிகளுடன் லால்சாட் நோக்கி பேருந்து புறப்பட்டு வந்தது. துமி என்ற இடத்திலுள்ள ஆற்றுப்பாலத்தில் வந்தபோது பேருந்து திடீரென சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து பின்னர் பாலத்தின் தடுப்புச் சுவரை உடைத்துக்கொண்டு பனாஸ் ஆற்றிற்குள் விழுந்தது. இதனால் பேருந்து தண்ணீரில் மூழ்கியது. உள்ளே இருந்த பயணிகள் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது. 6 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இந்த விபத்து மனவேதனை அளிப்பதாக கூறியுள்ள மோடி, தன்னுடைய எண்ணங்கள் அனைத்தும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தை பற்றியே உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மீட்புப் பணிகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் மற்றும் அங்குள்ள நிலைமையை மாநில அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் மோடி தெரிவித்துள்ளார். (இ-7)

# மாட்டுத்தீவன ஊழல் வழக்கில் லாலு பிரசாத் குற்றவாளி!



(லக்னோ)

மாட்டுத் தீவன ஊழல் தொடர்பான 2 ஆவது வழக்கில், பிஹார் முன்னாள் முதலமைச்சரும் ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவருமான லாலு பிரசாத் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ராஞ்சியிலுள்ள சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் கால் நடைத் தீவன ஊழல் வழக்கு நடந்து வந்தது. இந்த வழக்கில் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது. இதில் லாலு பிரசாத் உட்பட 15 பேர் குற்றவாளி என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தீர்ப்பை தொடர்ந்து லாலு பிரசாத் உள்ளிட்ட அனைவரும் உடனடியாக கைது செய்யப்பட்டனர். லாலு பிரசாத் உள்ளிட்டோருக்கான தண்டனை விபரம் ஜனவரி 3ஆம் திகதி அறிவிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் பிஹார் முன்னாள் முதல்வர் ஜகன் நாத் மிஸ்ரா உள்ளிட்ட 6 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தீர்ப்பு குறித்து லாலு பிரசாத் கருத்து தெரிவிக்கையில்,

"உண்மையைச் சுற்றி தற்போது பொய் சூழ்ந்துள்ளது. மிக வலிமையான பொய் மூலம் பிரசாரம் நடக்கிறது. பொய் பாதி தூரம் பயணப்பட்டுள்ளது. ஆனால், உண்மையை மூடி மறைத்து சூழ்ந்துள்ள பொய், விரைவில் நீக்கப்பட்டு உண்மை வெளிப்படும். இறுதியில் உண்மை வென்றே தீரும்.

நெல்சன் மண்டேலா, மார்ட்டின் லூதர் கிங், பாபா சாகேப், அம்பேத்கர் போன்றவர்கள் தங்கள் முயற்சியில் தோல்வியுற்றிருந்தால் அவர்களை வரலாறு வில்லன்களாகதான் சித்தரித்து இருக்கும்.

எனது தர்ம யுத்தத்தில் ஒட்டுமொத்த பிஹாரும் எனக்குத் துணையாக நிற்கிறது. எனக்கு தொந்தரவு கொடுக்கலாம். ஆனால் என்னை யாரும் வெற்றி கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# டெம்பின் புயலுக்கு 200 பேர் உயிரிழப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்பகுதியைத் தாக்கிய டெம்பின் புயலால் ஏற்பட்ட பெருமழை, வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்துள்ளது.



ஆண்டு தோறும் சுமார் 20இற்கும் மேற்பட்ட புயல்களால் பாதிக்கப்படும் பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்பகுதியை கடந்த 22 ஆம் திகதி பிற்பகல் சக்தி வாய்ந்த வெப்ப மண்டல புயல் தாக்கியது. இந்த புயலுக்கு டெம்பின் என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் புயல் மிண்டானாவ் தீவை துவம்சம் செய்தது. மணிக்கு சுமார் 80 கிலோ மீற்றர் வேகத்தில் புயல் காற்றுடன் பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பல கிராமங்கள் நீரில் மூழ்கின. தாழ்வான பகுதியில் குடியிருந்த சுமார் 12 ஆயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆறுகளில் நீர் மட்டம் உயர்ந்ததால் சில கிராமங்களில் கரை புரண்டு ஓடிய வெள்ள நீரில் வீடுகள் அடித்து செல்லப்பட்டன. டெல் நார்ட்டே மாகாணத்தில் உள்ள சிபுகோ சலுக் நகரங்களில் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். இந்த புயலினால் சுமார் 100 பேர் உயிரிழந்துள்ளதாக முதல் கட்டத் தகவல்கள் வெளியாகின.



இந்நிலையில், இந்த புயலினால் டெல் நார்ட்டே மாகாணத்தில் சுமார் 127 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 72 பேர் காணாமல் போயிருப்பதாகவும் பேரிடர் மீட்பு மற்றும் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். மிண்டானோவா பகுதியில் உள்ள சம்போங்கா தீபகற்பத்தில் 48 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தவிர மற்ற பகுதிகளில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் டெம்பின் புயலினால் பலியானோர் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் பிலிப்பைன்ஸ் நாட்டை தாக்கிய மற்றொரு புயலுக்கு 46 பேர் பலியான நிலையில் தற்போது மேலும் ஒரு புயல் அந்நாட்டை தாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேசத்தின் குரலின் நினைவெழுச்சி







தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 11 ஆவது நினைவெழுச்சி நிகழ்வு பாரிஸின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான நந்தியாரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றது. (இ-4)

## உலக தரிசனம்

# சொற்ப டொலர்களுக்காக ஜனநாயகத்தை அமெரிக்காவிடம் யாரும் விற்றுவிடாதீர்கள்

### துருக்கி ஜனாதிபதி கோரிக்கை

(அங்காரா)

அமெரிக்கா தரும் சொற்ப டொலர்களுக்கு ஆசைப்பட்டு உங்கள் நாட்டின் ஜனநாயகத்தை அமெரிக்காவிடம் விற்றுவிடாதீர்கள் என உலகத் தலைவர்களை துருக்கி ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜெருசலேமை இஸ்ரேல் தலைநகரமாக அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 6 ஆம் திகதி அறிவித்தார். அதைத் தொடர்ந்து பாலஸ்தீனத்தில் போராட்டமும் மோதலும் வெடித்தது.

ட்ரம்பின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா உள்ளிட்ட 128 நாடுகள் வாக்களித்தன. இந்த தீர்மானத்தை எதிர்த்து அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட 9 நாடுகள் வாக்களித்தன.

இந்நிலையில், தனது முடிவை எதிர்த்து வாக்களித்த நாடுகளுடனான அமெரிக்காவின் உறவுகளை மறு சீராய்வு செய்ய நேரிடும் என்னும் பாணியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கருத்து தெரிவித்திருந்தார்.


இதற்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்கா தரும் சொற்ப டொலர்களுக்காக ஆசைப்பட்டு உங்கள் நாட்டின் ஜனநாயகத்தை அமெரிக்காவிடம் விற்று விடாதீர்கள் என உலக தலைவர்களை துருக்கி ஜனாதிபதி தாயிப் ஏர்துவான் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## உள் விவகாரங்களில் தலையீடு

# கனடா, பிரேசில் தூதர்களை வெளியேற்றிய வெனிசுவெலா

(கராகஸ்)

சட்டவிதிமுறைகளை மீறுதல் மற்றும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டதாக கூறி கனடா மற்றும் பிரேசில் தூதரக அதிகாரிகளை வெனிசுவெலா அரசு நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது.



தென் அமெரிக்க நாடான வெனிசுவெலாவில் சில மாதங்களுக்கு முன்னதாக எதிர்க்கட்சிகள் அங்கம் வகிக்கும் தேசிய சபையை கலைத்து விட்டு புதிதாக அரசியல் சாசன சபையை ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரா அமைத்தார்.

முழுக்க முழுக்க ஆளும் கட்சியே இந்த சபையில் அங்கம் வகிப்பதாக கூறி எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தின. இதனால், ஏற்பட்ட கலவரத்தில் 120இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

ஜனாதிபதி மதுராவின் நடவடிக்கைக்கு அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்ததோடு சில தடைகளையும் விதித்தன.

கனடாவில் உள்ள வெனிசுவெலா தூதரக அதிகாரிகள் ஊழல் மற்றும் மனித உரிமைகளை மீறியதாக கூறி அந்நாட்டு அரசு அவர்களுக்கு சில தடைகளை விதித்தது.

வெனிசுலாவின் அண்டை நாடான பிரேசிலில் முன்னாள் ஜனாதிபதி தில்மா ரூசேப் பதவி நீக்கம் செய்யப்பட்டதில் இருந்து மதுரா அந்நாட்டுடன் சுமூக உறவை கடைப் பிடிக்கவில்லை. தில்மா பதவி நீக்கம் செய்யப்பட்டதில் சதி இருப்பதாக அவர் கூறி வந்தார். மேலும், புதிய அரசுடன் மதுரா மோதல் போக்கையே கடைபிடித்து வந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் திடீரென கனடா தூதர் க்ரைப் கோவாலிக் மற்றும் பிரேசில் தூதர் ரை பெரைரா ஆகிய இருவரையும் நாட்டை விட்டு வெளியேறுமாறு வெனிசுவெலா அரசியல் சாசன சபையின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் டெல்சி ரோட்சிக்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

தூதரக அதிகாரிகளுக்கான சட்டதிட்டங்களை மேற்கண்ட இருவரும் ஒழுங்காக கடைபிடிக்கவில்லை எனவும், வெனிசு வெலாவின் உள் விவகாரங்களில் தலையிட்டார்கள் என்றும் அவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. (இ-7)

# பிலிப்பைன்ஸ் வணிக வளாகத்தில் பயங்கர தீவிபத்தில் 37 பேர் பலி!

(மணிலா)

தெற்கு பிலிப்பைன்சின் தவாவோ நகரிலுள்ள ஒரு வணிக வளாகத்தில் ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில் சிக்கி 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்குப் பகுதியில் தவாவோ என்ற நகர் அமைந்துள்ளது. அந்நகரில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி பொருட்கள் வாங்குவதற்காக நேற்று முன்தினம் காலை ஏராளமான மக்கள் குவிந்தனர்.

அப்போது அந்த வணிக வளாகத்தின் மூன்றாவது மாடியில் எதிர்பாராத விதமாக தீ பிடித்துள்ளது. இந்தத் தீயானது வேகமாக மற்ற தளங்களுக்கும் பரவியுள்ளது. இதையடுத்து அந்த கட்டடத்தில் இருந்தவர்கள் அலறியடித்து கொண்டு வெளியில் ஓடியுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் பொலிஸார் மற்றும் தீயணைப்பு துறையினர் வந்து தீயை அணைத்து கட்டடத்திற்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இருப்பினும் தீயை அணைக்க முடியவில்லை. எனவே தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.



இந்த விபத்து குறித்து அந்நகரின் துணை மேயரும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் மகனுமான பாவ்லோ டுடெரெட் பேஸ்புக்கில் வெளியிட்ட செய்தியில் அந்த கட்டிடத்தில் சிக்கியிருப்பதாக கூறப்படும் 37 பேர் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பு இல்லை என கூறியுள்ளார். (இ-7)

# முஸ்லிம் பிரிவினர் மீது மனித உரிமை மீறல்

### வெள்ளை மாளிகை முன் ஆர்ப்பாட்டம்



(வோஷிங்டன்)

பிரிவினைக்குப் பின்னர இந்தியாவிலிருந்து பாகிஸ்தானில் குடியேறிய முஸ்லிம்கள் மீது மனித உரிமை மீறல் நடப்பதாக கூறி அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை மற்றும் அமெரிக்காவில் உள்ள பாகிதான் தூதரகம் முன் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது. (இ-7)

# கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களை தமிழ்மொழியிலும் வெளியிட வேண்டும்

## கல்வியமைச்சர் காரியவசம் பணிப்பு

(கொழும்பு)
கல்வி அமைச்சின் சுற்று நிருபங்கள் தமிழ்மொழியிலும் வெளியிடப்பட வேண்டுமென கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பு ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் தமிழ்மொழியின் ஊடாகவும் வெளியிடப்பட வேண்டும்.

தற்போது கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் சிங்கள மொழியில் மட்டுமே வெளியிடப்படுகின்றது.

இதனால் தமிழ்மொழி மூல பாடசாலை நிர்வாகங்கள் சிரமங்களை எதிர் நோக்க நேரிடுகின்றது.

குறிப்பாக வடக்கு- கிழக்கு மற்றும் பெருந்தோட்ட தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு சிங்கள மொழிமூலமான சுற்று நிருபங்களை




அனுப்பி வைப்பதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இந்தச் சிக்கல்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் தமிழ் மொழியிலேயே சுற்று நிருபங்களை அனுப்பி வைக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மகிந்தவால் களமிறக்கப்பட்ட ரோஹித!

## அதிர்ச்சியில் சகோதரர்கள்



(கொழும்பு)
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சி தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த நடவடிக்கைகள் மகிந்தவின் மகன்கள் தலைமையில் நடைபெறுவதால் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ வருத்தத்தில் உள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார முன்னாயத்த நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் மகிந்தவின் புதல்வரான ரோஹித ராஜபக்ஷ மற்றும் அவருக்கு நெருக்கமானவர்களினால் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

"பேச்சு போதும் - வேலையை ஆரம்பிப்போம்" என்ற தலைப்பில் அந்த பிரசார மாதிரி தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு மகிந்த ராஜபக்ஷவும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்ஷவினால் இந்த பிரசார நடவடிக்கை "ட்ரை எட்" உட்பட நாட்டின் பிரதான பிரசார நிறுவனங்களிடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதற்கு ரோஹித ராஜபக்ஷ தலையிட்டிருப்பதும், மகிந்த ராஜபக்ஷ, ரோஹித ராஜபக்ஷவின் தீர்மானத்திற்கு விருப்பம் தெரிவித்திருப்பதும் பசில் ராஜபக்ஷவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2015 தேர்தல் பிரசாரங்களை கெடுத்ததும் மகிந்தவின் மகன்கள்தான் எனவும், இந்த முறையும் கெடுப்பதற்கே நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பசில் தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளார் என குறித்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

# மகிந்த ஆட்சிக்கால கொலைகள் தொடர்பில் ஜே.வி.பி. நூல் வெளியீடு



(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பில் ஜே.வி.பி. நூல் ஒன்றை வெளியீடு செய்யவுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்கு வைத்து இந்த நூல் வெளியீடு செய்யப்படவுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள், காணாமல் போதல்கள், ஊடகவியலாளர்கள் கொலைகள், பாரிய ளவிலான ஊழல் மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அம்பலப்படுத்தும் நோக்கில் இந்த கையேடு வடிவிலான நூல் வெளியிடப்படவுள்ளது.

பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் நோக்கில் இந்த நூல் வெளியிடப்படவுள்ளது.

தராதரம் பாராது குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் யார் என்பதனையும் அந்த நபர்களின் பதவி நிலைகள் தொடர்பிலும் இந்த கையேடு வடிவிலான நூலில் குறிப்பிடுவதற்கு ஜே.வி.பி.யின் அரசியல் சபை தீர்மானித்துள்ளது. (இ-7)

# மீண்டும் ஐ.தே.கவில் இணைகிறார் கெஹலிய

(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல மீண்டும் ஐ.தே. கவில் இணைந்து கொள்ளவுள்ளார் .

கண்டியில் எதிர்வரும் ஜனவரி 12ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள ஐ.தே.கவின் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், கெஹலிய ரம்புக்வெல மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்வார் என்றும் கூறப்படுகிறது.



2001-2004 காலப்பகுதியில் ஐ.தே.க .அரசாங்கத்தில் அமைச்சராகப் பதவி வகித்த கெஹலிய ரம்புக்வெல, பின்னர் மகிந்த ராஜபக்ஷ அரசுக்குத் தாவி அமைச்சர் பதவியைப் பெற்றார்.

அவர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில், அரசாங்கப் பேச்சாளராகவும் பதவி வகித்திருந்தார்.

தற்போது மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிரணியில் உள்ள கெஹலிய ரம்புக்வெல மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## யாரை எது சொன்னாலும்

இந்த உலகம் வரவர ரொம்பவும் உணர்ச்சி பூர்வமாக ஆகிவருகிறது.

வேலைக்காரர்களை எதுவும் சொன்னால் மறுநாள் வேலைக்கு வரமாட்டேன் என்கிறார்கள்.

நண்பர்களை எதுவும் சொன்னால், என்னை நீ எப்படி விமர்சிக்கலாம்? என்று சண்டைக்கு வருகிறார்கள்.

பிள்ளைகளைக் கண்டித்தால் உடனே முன்னைவிட முரண்டு பண்ண ஆரம்பித்துவிடுகிறார்கள். சிலர் வீட்டை விட்டே ஓடிவிடுகிறார்கள்.

பரீட்சையில் பெயிலான பிள்ளைகளைக் கண்டித்தால், உடனே செத்துப் போகிறேன் நான்! என்கிறார்கள். சிலர் செய்யவும் செய்து விடுகிறார்கள். மனைவியைக் கணவன் ஏதும் சொன்னால் பெரிய கலவரமே உண்டாகிவிடுகின்றது. மனைவி கணவனை ஏதும் சொல்லிவிட்டால் கணவன் பிரியத்தைக் குறைத்துக் கொண்டு விடுகிறான்.

அதிகாரி ஏதும் சொன்னால் சரிதான் போங்க சார்! உங்களால் முடிஞ்சதைப் பார்த்துக்குங்க சேர். என்கிறார்.

பத்து ஆண்டுகளுக்கு முன் அல்லது இருபது ஆண்டுகளுக்கு முன் இந்த நிலைமையா இருந்தது?

வேலைக்காரர்களை ஏதும் சொன்னால் உத்தரவுங்க! என்றார்கள். நண்பர்களை ஏதும் சொன்னால் நன்மைக்குத் தான் சொல்றீங்க என்றார்கள். பிள்ளைகளுக்குப் பெற்றோரைக் கண்டாலே குலை நடுக்கம். எதிர்த்து ஒரு வார்த்தை பேச அதுகளுக்குத் திராணி இருந்ததில்லை.

மனைவியை கணவன் ஏதும் கோபித்துக் கொண்டால் உங்கள் சொல்படியே செய்கிறேன் நாதா என்றார்கள். மனைவி கணவன் எதுவும் சொல்லுவது என்பதோ நினைத்துப் பார்க்க முடியாத விடயமாக இருந்தது. இன்று எல்லாமே மாறிவிட்டன. மனித இனம் கவரிமான் இனமாக ஆகிவிட்டது. இவ்வளவு நாகரிகமாகச் சொல்வானேன்? மனிதர்கள் தொட்டால்சிணுங்கியாக மாறிவிட்டார்கள்.

இதை உணர்ந்து கொள்ளாமல் சிலர் இன்னும் அந்தக் காலத்து மனிதர்களாகவே இருக்கிறார்கள்.

எதையும் பக்குவமாகச் சொல்ல நாம் கற்றுக் கொள்ள வேண்டிய கால கட்டம் இது.

தட்டிக் கொடுத்தும் தவறை உணர்த்துகிற மாதிரியும் கசப்பு மருந்தைத் தேன் கலந்து கொடுக்கிற மாதிரியும் எதையும் சொல்ல நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஏன் நேத்து லீவு? இப்பிடித் தான் இஷ்டத்துக்கு லீவு போடறதா? கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா உனக்கு? என்றெல்லாம் ஆரம்பிக்காமல் நேற்று நீ வராமல் போனதால் ரொம்ப வேலை நின்னு போச்சுப்பா. நீ வந்துராமாட்டியான்னு 11 மணி வரை வாசலையே பார்த்துக் கொண்டிருந்தேன் என்கிற தோரணையில் அவரவர்க்குப் பொருத்தமான முறையில் பேசிவிடலாம். அதிகார வர்க்கம் இன்று தட்டிக் கொடுத்துத் தான் வேலை வாங்க வேண்டும்.

நண்பர்கள் என்பவர்கள் ஒப்பந்தக்காரர்கள் என்பதால் அளவோடு சொல்லி சிறியதாகக் கோடு காட்டினால் போதும். ஓவர் டோசேஜ் தேவையில்லை.

பிள்ளைகளிடம் பேசும் போது அவர்களது நன்மைக்காகத் தான் சொல்கிறோம் என்பதை உணர்த்தும் வகையிலும் பொறுமையாகவும் பேச வேண்டும்கோபித்தால் இன்று எதிர் மறையான பலன்களே கிடைக்கும்.

கணவன்-மனைவி இருவரும் பிறரது குறைபாடுகளை மூட் நல்லபடியாக இருக்கிறபோது சிரித்து ரசிக்கும் வகையில் சொல்லலாம் . அவசியமெனில் டோசேஜ் சற்றே கூட்டலாம்.

உலகம் மாறிவிட்டது. இனி யாரை என்ன சொல்வதாக இருந்தாலும் நாமும் நம் அணுகுமுறையை மாற்றிக் கொள்வோம்.

**லேனா தமிழ்வாணன்**

# வரி அறவிடுவதை நிறுத்தக்கோரி கடற்றொழிலாளர்கள் கவனயீர்ப்பு





(படங்கள்:பொ.சோபிகா)

(யாழ்ப்பாணம்)

தம்பாட்டியில் அமைக்கப்பட்ட மரக்கறிச் சந்தையில் கடற்றொழிலாளர்களிடம் புதிதாக அறவிடப்படும் வரியை நிறுத்துமாறு கோரி தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் நேற்று தம்பாட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க இறால் கொள்வனவு சங்க நிலைய முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு எதிராக மேற்கொண்டிருந்த இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கையில்,

"தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்களிடம் கொள்வனவு செய்யப்படும் கடல் உணவு வகைகள், உள்ளூர் சந்தையில் இதுவரைகாலமும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் பின்னர் வரும் மேலதிக கடல் உணவுகளே வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ஊர்காவற்றுறை பிரதேச சபையால் தற்போது புதிதாக மரக்கறிச் சந்தை ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இந்த சந்தையில் கடலுணவு வியாபாரத்தில் ஈடுபடுபவர்களிடம் பிரதேச சபையால் வரி அறவிடப்படுகிறது. இதனால் உள்ளூர் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப் படுகின்றனர்.

பிரதேச சபையில் வியாபார உரிமம் பெற்றே குறித்த கடலுணவு வியாபாரிகள் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். 2018 ஆம் ஆண்டுக்குரிய வியாபார உரிமம் பெறுவதற்கு விண்ணப்பமும் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் எந்தவொரு சந்தைகளிலும் அறவிட முடியாத வரியை ஏன் தம்பாட்டியில் அறவிட வேண்டும். இதனால் கூட்டுறவு சங்க செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

எனவே கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு வரி அறவிடுவதை பிரதேச சபை நிறுத்த வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (இ-9)


## விற்பனை

Lion பொமேரியன்

நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

(1924). T.P:021 222 1273


## மரண அறிவித்தல்

**அமரர் வேலுப்பிள்ளை சரோஜா (பேபி)**



பிறப்பு:- 14.05.1939
இறப்பு:- 23.12.2017

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சரோஜா (23.12.2017) காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஓவசியர் வேலுப்பிள்ளை அன்னபூரணம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான முத்துராஜா, செல்வராஜா, சண்முகராஜா மற்றும் செல்வநாயகி, வாமசக்தி, விஜயராணி, ஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அரியமலர், பத்மாவதி, காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் சிவராஜா, பகீரதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.12.2017 நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

222, செம்மணி வீதி,
நல்லூர். (2101)

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 1656

# நன்றி நவில்கின்றோம்



## லயன் செல்லத்துரை மகாதேவா MJF, JP

எமது குடும்ப தீபம் லயன் செல்லத்துரை மகாதேவா அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து உடன் நொதேர்ண் வைத்தியசாலைக்கும் பின் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் விரைந்து வந்து சகல உதவிகளையும் வழங்கிய அன்புள்ளங்களுக்கும் பின்னர் இறுதிக் கிரியைகளில் கலந்து நேரடியாக அஞ்சலி செலுத்தியோர் மற்றும் அஞ்சலி உரைகளை நிகழ்த்திய சமய, சமூக நிறுவனங்களின் தலைவர்கள்,பெரியோர்கள், லயன்ஸ் கழக ஆளுநர் சபை உறுப்பினர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், தென்னிலங்கை மற்றும் சகல மாவட்டங்கள் எனத் தூர இடங்களிலிருந்து வந்த லயன்ஸ் கழக உறுப்பினர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அமைப்புகள், கண்ணீர் அஞ்சலி பதாகைகள் வைத்தவர்கள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர், பத்திரிகைகள் மற்றும் முகநூல்களில் அஞ்சலி தெரிவித்தோர், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர், பாண்ட் அணிவகுப்பு மரியாதை நிகழ்த்திய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்லூரிச் சமூகத்தினர், தொலைபேசி ,தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், அமரரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டோர், வீட்டுக்கிருத்தியக் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தோர், போசன உதவிகள், சரீர உதவிகள் மேற்கொண்டோர் மற்றும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கல்லூரி வீதி,**
**கந்தரோடை, சுன்னாகம்.**
**077 704 1767**

**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(சி-869)

# வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து அனைத்து பேருந்து சேவைகளும் இன்றுமுதல் ஆரம்பம்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(மல்லாவி )

வவுனியா மாவட்டத்தில் 195 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து அனைத்து பேருந்து சேவைகளும் ஏற்கனவே திட்டமிட்டபடி இன்று திங்கட்கிழமை காலை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறவுள்ளதாகவும் வவுனியா நகரப் பகுதியில் இருந்தும் புதிய பேருந்து நிலையத்தில் இருந்தும் பயணிகளின் நலன் கருதி இலவச போக்குவரத்துச் சேவை வவுனியா மாவட்ட தனியார் பேருந்துக்கள் மூலம்தொடர்ச்சியாக அதிகாலை 4.30 மணியில் இருந்து இரவு 7.30 மணிவரை நடை பெறவுள்ளதாகவும் வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி. இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும், வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரனுடன் புதிதாக அமைக்கப்பட்ட வவுனியா மாவட்ட மத்திய பேருந்து நிலையத்தை மீளவும் இயங்க வைப்பது தொடர்பாக வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட ரீதியாக உள்ள தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் வடக்கு மாகாணத்தில் உள்ள ஏழு அரச பேருந்து சாலைகளின் முகாமையாளர்கள், இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பிரதிநிதிகள், வடக்கு மாகாண சபை யின் போக்குவரத்து அதிகார சபையின் பிரதிநிதிகள், வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட செயலகங்களின் துறைசார்ந்த அதிகாரிகள் ஆகியோருக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து அனைத்து தரப்பினரும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

இதற்கமைய, இன்று திங்கட்கிழமை தொடக்கம் வவுனியா மாவட்ட ரீதியான உள்ளூர் போக்குவரத்துக்கள் மற்றும் மாவட்ட ரீதியான போக்குவரத்துக்கள் உட்பட மாகாணங்களுக்கிடையிலான அனைத்து அரச மற்றும் தனியார் துறையினரின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் புதிதாக அமைக்கப்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும்.

இந் நிலையில் வவுனியா நகரப் பகுதியில் இருந்தும் புதிய பேருந்து நிலையத்தில் இருந்தும் பயணிகளின் நலன் கருதி இலவச போக்குவரத்துச் சேவையை வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

பயணிகளுக்கு போக்குவரத்து சேவையின் போது ஏதாவது சிரமங்கள் ஏற்படுமிடத்து அல்லது உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் எனது தனிப்பட்ட தொலைபேசி இலக்கமான 077 - 241 7033 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ அல்லது எமது தனியார் பேரு ந்து உரிமையாளர் சங்கத் தின் அலுவலக இலக்கம் ஊடாகவோ தொடர்பு கொண்டு தகவல்களையும் மற்றும் உதவிகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் பேருந்தில் ஏறி வியாபாரம் செய்ய தடை

(குருமன்காடு)

வவுனியா நடமாடும் வியாபார சகவாழ்வு சங்கத்தின் வியாபாரிகள் புதிய பேருந்து நிலையத்தில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவில் ஏ-9 வீதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையம் கிறிஸ்மஸ் தினத்தன்று சேவையை ஆரம்பிக்கும் என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு அறிவித்திருக்கும் நிலையில் பேருந்தில் ஏறி வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு புதிய பேருந்து நிலைய வளாகத்திற்குள் வியாபாரம் செய்ய பேருந்து நிலைய நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளது.

ஆகவே வவுனியா நடமாடும் வியாபார சங்கத்தின் தலைவர் ஆறுமுகம் சிவகுமார் புதிய பேருந்து நிலையத்தில் வியாபாரிகள் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த நடமாடும் வியாபார சகவாழ்வு சங்கத்தின் வியாபாரிகள்,

கடந்த 17 வருடங்களாக பேருந்துகளில் வியாபாரம் செய்து வருகிறோம். வவுனியா ஏ-9 வீதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தில் பேருந்தில் ஏறி வியாபாரம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த வியாபாரத்தை நம்பியே எங்கள் குடும்பங்கள் இருக்கிறது. அத்துடன் வவுனியாவில் 57 வியாபாரிகளின் குடும்பங்களின் வாழ்வாதாரம் இதை நம்பியே இருக்கிறது. எங்கள் பிள்ளைகளின் கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை விடயங்கள் இத்தொழிலை நம்பியே பூர்த்திசெய்கிறோம்.

முன்னாள் ஜனாதிபதி எங்களை சந்தித்து உரையாடியுள்ளதுடன் எங்களுக்கு விசேட ஆள் அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தனர். (2-250)

# உரிமை கோரப்படாத உந்துருளிகள் முல்லை. நீதிமன்றில் ஏலவிற்பனை

(கண்டாவளை)

கடந்த காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற கஞ்சாமற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் விபத்துக்களின்போது கைதான வர்களிடம் இருந்து பெறப்பட்டு வழக்குகள் முடிவடைந்து தவறுவாயில் இதுவரை உரிமை கோராத நீதிமன்றத்தினால் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி உந்துருளிகள் நேற்று முன்தினம் நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட நீதிபதி எம்.சம்சுதீன் முன்னிலையில் ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தினால் கடந்த காலங்களில் கஞ்சா மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் விபத்துக்களில் உரிமையாளர்கள் இறந்த நிலையிலும் வழக்குகள் முடிவடைந்த தறுவாயிலும் இதுவரை உரிமைகள் கோரப்படாத 28 உந்துருளிகள் ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்த உந்துருளிகளில் மூன்று உந்துருளிகள் பதிவு செய்யப்படக்கூடிய நிலையிலும் ஏனையவை பாகங்களுக்காகவும் பகிரங்க ஏல விற்பனை அறிவிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

28 உந்துருளிகளும் 4 இலட்சத்து எண்பதாயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-315)

# வட்டுவாகல் ஆற்றின் கரையோரப்பகுதிகளில் தொழில்செய்வதற்கு அனுமதி வழங்குங்கள்

## சிறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு வட்டுவாகல் ஆற்றின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மீன்பிடித்தொழிலை மேற்கொள்வதற்கு படையினர் அனுமதிப்பதில்லை என்றும் வட்டுவாகல் ஆற்றில் முழுமையாக தொழில் செய்வதற்கான அனுமதியை பெற்றுத்தருமாறு சிறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறுகடல் பகுதியாக காணப்படும் வட்டுவாகல் ஆற்றில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீச்சுவலை தூண்டில் போன்ற பாரம்பரிய தொழில்முறைகள் மூலம் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த ஆற்றுப்பகுதிகளில் பல்வேறு வகையான சட்டவிரோத தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் இவர்களது தொழில் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

இவை ஒரு புறமிருக்க வட்டுவாகல் பாலத்திற்கும் பெருங்கடலை இணைக்கின்ற பகுதிக்கும் இடைப்பட்ட கரையோரப்பகுதிகளின் இரு பக்கமும் படையினர் இருப்பதனால் குறிப்பிட்ட சில பகுதிகளில் மீன்பிடிக்கு அனுமதிப்பதில்லை என்றும் குறுகிய சில இடங்களிலும் மீன்பிடி மேற்கொள்ளக்கூடிய பகுதிகளாக முன்னர் காணப்பட்ட பகுதிகளிலுமே தமது தொழில்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் இதனால் தமது தொழில்கள் மூலம் அன்றாடம் தமது உணவுக்காக மீன்களைக்கூட பிடிக்க முடியாதுள்ளது எஞ்சியிருக்கும் வட்டுவாகல் ஆற்றின் கரையோரப் பகுதிகளில் தொழில் செய்யக்கூடிய அனுமதிகளைப் பெற்று தருமாறு இப்பகுதி சிறுகடற்றொழில் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)




வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் விழா அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது.

# 5 ஆயிரம் ஏக்கர் பயிர்ச்செய்கை நிலங்கள் உவர்நிலமாக மாற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் ஐயாயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட பயிர்ச்செய்கை நிலங்கள் உவர் நிலமாக மாறியுள்ளதாக விவசாயத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த கால யுத்தம் காரணமாக ஆனையிறவு தட்டுவன் கொட்டி ஊரியான் ஆகிய பகுதிகளிலும் பூநகரி பிரதேசத்திலும் காணப்பட்ட உவர் நீர் தடுப்பணைகள் அழிவடைந்தமை மற்றும் சேதமடைந்தமை மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் காரணமாக கடல் நீர் பயிர்ச்செய்கை நிலங்களுக்குள் புகுந்து பெருமளவான வளமான பயிர்ச்செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் தகவலின் படி சுமார் ஐயாயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பு உவர் நிலமாக மாறியுள்ளதுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் நிறுத்தப்படாத நிலை தொடருமானால் மேலும் கரையோரப்பகுதிகளில் உள்ள பயிர்ச்செய்கை நிலங்கள் உவராக மாறும் நிலை ஏற்படும் என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (2-315)



முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியில் அமைந்துள்ள புனித மத்தியா ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பு இன்னிசை வழிபாடு நேற்று முன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் இலங்கைத் திருச்சபையின் ஏற்பாட்டில் அருட்தந்தைகளான செல்வன், அருட்சகோதரன் பவான், தேவதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்து நத்தார் இன்னிசை வழிபாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# நத்தார் நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரில் படை கட்டளை தலைமையகத்தின் ஏற்பாட்டில் முல்லையில் நத்தார் கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் படைத்தலைமையகத்தின் தளபதி ஆர்.டபிள்யூ. டபிள்யூ.ஏ. டி.பி. றாஜகுருவின் ஏற்பாட்டில் மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள 59 ஆவது கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரால் வன்னியாராச்சியின் மேற்பார்வையில் முல்லைத்தீவு நகர்பகுதியில் உள்ள றாஜப்பர் தேவாலயத்தில் அண்மையில் நத்தார் கொண்டாட்ட தொடக்க நிகழ்வு தேவாலய பங்குத்தந்தை அன்ரன் ஜேச் தலைமையில் நடைபெற்றுள்ளது. (2-28)

# யுத்த காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகள் அகற்றப்படவில்லை

## வெடிபொருட்கள் இருக்கலாமென அச்சம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மேற்கு பிரதேசத்தின் ஆனைவிழுந்தான் ஐயனார்புரம், அக்கராயன் குளம் ஆகிய பகுதிகளில் யுத்த காலத்தில் போடப்பட்டுள்ள மண் அணைகளில் வெடிபொருட்களின் அச்சம் காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், ஐயனார்புரம் ஆகிய பகுதிகளில் விவசாயநிலங்கள் குளங்களின் நீரேந்து பிரதேசங்களில் யுத்த காலத்தில் போடப்பட்ட மண் அணைகள் இன்றுவரை அகற்றப்படாமல் காணப்படுகின்றன.

குறிப்பாக ஐயனார்புரம் ஆனைவிழுந்தான்பொதுமயானத்தை அண்மித்த பகுதியிலும் இதேவேளை வன்னேரிக்குளத்தை அண்மித்த பகுதியிலும் இராணுவ மண் அணைகள்காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படும் மண் அணைகளை அண்மித்த பகுதிகளில் வெடிபொருட்களின் ஆபத்துக்கள் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இப்பகுதிகளில் காணிகளை துப்புரவு செய்து அவற்றை எரிக்கும் போது அச்சமான சூழல் ஏற்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அக்கராயன்குளம் பகுதியில் வெடிக்காத நிலையில் எறிகணைகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# வவுனிக்குளத்திற்குட்பட்ட நீர்ப்பாசன வீதிகள், நீர்விநியோக வாய்க்கால்களை புனரமையுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக் குளத்தின் நீர்ப்பாசன வீதிகள், நீர் விநியோக வாய்க்கால்கள் என்பவற்றை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் கடந்த 2009ஆம் ஆண்டின் மக்கள் மீள்குடியமர்வையடுத்து குறித்த குளம் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் சுமார் 600 மில்லியன் ரூபா செலவில் குளம் புனரமைக்கப்பட்டதுடன் பிரதான நீர் விநியோக வாய்க்கால்கள் என்பனவும் புனரமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு குளம் புனரமைக்கப்பட்டமையால் இக்குளத்தின் கீழான ஆறாயிரம் ஏக்கர் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வவுனிக்குளத்தின் கீழான இடதுகரை வலதுகரை மற்றும் மத்திய துருசு வாய்க்கால்களின் கீழ் உள்ள இணை வாய்க்கால்கள்,நீர்ப்பாசன வீதிகள் இவற்றை விட கிளை வாய்க்கால்கள் என்பனவும் இதுவரை புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது.

இவற்றை புனரமைத்து தருமாறு இப்பகுதி விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)




# மாவீரன் செண்பகராமன் நூல் வெளியீடு இன்று

சர்வாதிகாரி ஹிட்லரை அடிபணிய வைத்த மாவீரன் செண்பகராமன் கவிதை மொழியில் ஒரு சரித்திர நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவு/ தேசிய கல்வியியற் கல்லூரி கேட் போர் அரங்கில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவு/ தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க. சுவர்ணராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வவு/ தேசிய கல்வியியற் கல்லூரி (தொடருறு கல்வி), உப பீடாதிபதி தி. ஜெயகாண்டீபன், வவு/ தேசிய கல்வியியற் கல்லூரி (கல்வியும் தர மேம்பாடும்), உப பீடாதிபதி க. பரமானந்தம், வவுனியா தெற்கு வலய ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் வீ. பரஞ்சோதி, வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலக உடற்கல்வி இணைப்பாளர் ஜனாப். ஏ. எம். ஸுபைர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நூலின் வெளியீட்டு உரையை வவு/ தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பார்த்தீபன் ஆற்றுவார். நூலின் முதற் பிரதியை வவுனியா பொலிஸ் நிலைய அலுவலக கணக்காளர் ந. ரவிசந்தர் பெற்றுக் கொள்வார். நூலின் நயவுரையை கிளி/புன்னை நீராவி பாடசாலை ஆய்வாளர் பிறைசில் நிகழ்த்துவார். (2-23)

# கண்டாவளை பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் அடுத்தாண்டில் திறப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் அடுத்த ஆண்டில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் பூநகரி, கண்டாவளை ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளும் நிரந்தரமான கட்டடங்கள் இல்லாத நிலையில் தற்காலிக இடங்களில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வந்த நிலையில் பூநகரி பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு இவ்வாண்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்திற்கான நிதியொதுக்கீடுகள் கடந்த 2010ம் ஆண்டிற்குப் பின்னர் இரண்டு முறை கிடைத்தபோதும் அதற்கான இடத்தெரிவில் ஏற்பட்ட இழுபறி காரணமாக இரண்டு தடவையும் நிதி திரும்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கான இடம் புளியம்பொக்கணைச்சந்தியில் தெரிவு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாற்றுத் திறனாளிகள் தமக்கு தேவையான பிரிவுகளில் உதவிகளைப் பெறக் கூடிய வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான வழிகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# கழிவுப் பிளாஸ்ரிக் போத்தல்களினால் 35 அடி உயரத்தில் கிறிஸ்மஸ் மரம்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவ பிரிவினால் பாடசாலை மாணவர்களிடையே சேகரிக்கப்பட்ட 40 ஆயிரம் வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்களில் இருந்து 4 ஆயிரம் வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்களைக் கொண்ட 35 அடி உயரத்திற்கு அமைக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரம் ஒன்று கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவர் ஜெயரூபனால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.



இந்நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு உளநல மருத்துவப் பிரிவினால் ஒழுங்கு படுத்தப்பட்டு நடைபெற்ற கிறிஸ்மஸ் கொண்டாட்ட நிகழ்வின் போது நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவப் பிரிவினால் கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட "ஆரோக்கியமான உளநலத்திற்கு மாசற்ற சுற்றுச் சூழல்" எனும் தொனிப் பொருளிலான போட்டியின் மூலம் 40 ஆயிரம் வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்கள் சேகரிக்கப்பட்ட நிலையில் அந்த வெற்றுப் போத்தல்களில் இருந்து 4 ஆயிரம் போத்தல்களைக் கொண்டு இந்த கிறிஸ்மஸ் மரம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நடைபெற்ற போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற பாடசாலைகளாக தெரிவாகியுள்ள பாடசாலைகளுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளன.

இதன் போது. கிளி/ பூநகரி சாமிபுலம் அ.த.க. பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்று 07 ஆயிரம் ரூபா பணப் பரிசினையும் இரண்டாவது இடத்தை கிளி/பூநகரி மட்டுவில் நாடு அ.த.க.பாடசாலை பெற்று 05 ஆயிரம் ரூபா பணப் பரிசினையும் மூன்றாவது இடத்தை கிளி/பளை அல்லிப்பளை அ.த.க. பாடசாலை பெற்று 3. ஆயிரம் ரூபா பணப் பரிசினைப் பெற்றுக் கொண்டுள்ளன.

மேலும் 5 பாடசாலைகளுக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. (2-15-312)

# ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தை ஏற்படுத்தித்தர உதவுங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள அக்கராயன் கொங்காதரன் குடியிருப்பு பகுதியில் தற்போது 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

குறித்த பகுதியில் தண்ணீர வசதிகள் இல்லாத நிலையில் அருகிலுள்ள அக்கராயன் குளத்திலிருந்து ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை ஏற்படுத்தி தரும் பட்சத்தில் குடியிருந்து வரும் அரை ஏக்கர்காணிகளில் வாழ்வாதார பயிர்ச்செய்கைகளையோ அல்லது ஏனைய வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் எனப்பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே இந்த மக்களின் வாழ்வாதாரத்தினை கருத்திற்கொண்டு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தினையோ அல்லது தொழில் வாய்ப்புக்களையோ அல்லது வேறு பயிர் செய்கை காணிகளையோ பெற்றுத் தருமாறு இப்பகுதி மக்கள் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-315)

# சொட்கன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் அனுமதியின்றி சொட்கன் துப்பாக்கி வைத்திருந்தவரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டம் உடுப்புக்குளம் பகுதியில் நேற்றைய தினம் அனுமதி இன்றி சொட்கண் துப்பாக்கியை கொண்டு திரிந்த நபர் ஒருவரை முல்லைத்தீவு பொலிஸார் கைதுசெய்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட நபரை பதில் நீதிபதி சுதர்சனின் வாசஸ்தலத்தில் முற்படுத்தியுள்ளார்கள். இதன்போது இவருக்கு 40 ஆயிரம் ரூபா சரீரபிணையுடன் எதிர் வரும் 28 ஆம் திகதி நீதி மன்றில் முன்னிலையாகு மாறும் பணித்துள்ளார். (2-281)

# உலர் உணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு



வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், யுத்தம் காரணமாக கணவனை இழந்த 25 குடும்பங்களுக்கு பிரான்ஸ் வாழ் புலம்பெயர் உறவுகளின் உதவியில் உலர் உணவுப் பொருட்கள்வழங்கி வைக்கப்பட்டன.

இன்று கிறிஸ்மஸ் தினம் என்பதால் இவ் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக் கப்பட் டுள்ளன.

இந்நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் எஸ். எஸ். ஸ்ரீனிவாசன், சமூக ஆர்வலர் சந்திரகுமார் ஆகியோர் உலர் உணவுப் பொருட்களை வழங்கிவைத்தனர். (2-281)

# படையினர் வசம் காணிகள்; 346 குடும்பங்கள் மீள்குடியேறப்பதிவு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் படையினரின் பயன்பாட்டிலுள்ள தமது காணிகளை விடுவித்து தங்களை மீள்குடியேற அனுமதிக்குமாறு 346 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் தமது பதிவுகளையும் மேற்கொண்டுள்ளன.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் அதிகளவான தனியார் காணிகள் ,அரச காணிகள், பொதுமக்களின் காணிகள் படையினரின் பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மட்டுவில்நாடு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 6 குடும்பங்களினது குடியிருப்புக்காணிகள் இராணுவத்தினரது பயன்பாட்டிலும் மட்டுவில் நாடு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 4 குடும்பங்களது காணிகள் பொலிஸாரின் பயன்பாட்டிலும் உள்ளன.

அத்துடன் இரணைதீவு கிராம அலுவலர் பிரிவில் உள்ள இரணைதீவு பகுதியில் 336 குடும்பங்களினது காணிகள், வீடுகள் என்பனவும் கடற்படையினரின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் குறித்த காணிகள், வீடுகள் இவ்வாறு படையினரின் பயன்பாட்டில் இருந்து வருவதனால் இதன் உரிமையாளர்களான தாங்கள் உறவினர்,நண்பர்கள் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் நீண்டகாலமாக வாழ்ந்து வருவதாகவும் இதனை விடுவித்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதாவது பூநகரி மட்டுவில்நாடு கிழக்கு பகுதியில் வைத்தியசாலை, கமநல சேவை நிலையம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உள்ளடங்கிய வகையில் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளும் பொதுமக்களுக்குச் சொந்தமான 14 வரையான காணிகளையும் தொடர்ந்து இராணுவத்தினர் தமது பயன் பாட்டில் வைத்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது தமது காணிகளை விடுவித்து தங்களது காணிகளில் மீள் குடியேற அனுமதிக்குமாறு 6 குடும்பங்கள் தமது பதிவுகளை கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொண்டுள்ளன.

இதேபோன்று மட்டுவில் நாடு மேற்குப் பகுதியில் பொலிஸ் நிலையம், பொலிஸார் விடுதி, உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் என்பன இயங்கி வரும் காணிகளை விடுவிடுத்து அதில் தங்களை மீள் குடியேற அனுமதிக்குமாறு 4 குடும்பங்கள் தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளன.


இதேவேளை கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட தங்களது பூர்வீக நிலமான இரணைதீவில் சென்று வாழ்வதற்கும் அங்கு தொழில் செய்வதற்கும் 336 குடும்பங்கள் தமது பதிவுகளை மேற் கொண்டுள்ளதுடன் தமது சொந்த நிலத்தை விடுவிக்கக் கோரி கடந்த எட்டுமாதங்களாக போராடி வருகின்றனர்.

பல்லவராயன்கட்டு தென்னந்தோட்டக்காணி, மரமுந்திரிகைத்தோட்டம் என்பவற்றையும் விடுவிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-315)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2017-13.01.2018

## மனக்கவலை அகலும்



மற்றவர்கள் மனதைப் புரிந்து செயல்படும் தனுசு இராசி வாசகர்களே!

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலேயே சனிபகவான் உங்கள் இராசிக்குள் அடியெடுத்து வைக்கப்போகிறார். ஜென்மச் சனியாக அடியெடுத்து வைக்கப் போவதால் சிறுசிறு பிரச்சினைகளும், மனக்கவலைகளும் வரத்தான் செய்யும். இருந்தாலும் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும் விதத்தில், கிரக நிலைகளின் சஞ்சாரம் இருக்கிறது.

சனியைப் பொறுத்தவரை உங்கள் இராசிக்கு 2,3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அதாவது வாக்கு, தனம், குடும்பம், சகோதரம், சகாயம் வெற்றி ஆகியவற்றையெல்லாம் வழங்கும் பொறுப்பு சனி பகவானிடம் உள்ளது. அப்படிப்பட்ட சனி பகவான் உங்கள் இராசிக்கு வரும் பொழுது வாக்கு வளம், குடும்ப மேன்மை, சுபகாரியப் பேச்சுகள், உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு, தாராளமான தனவரவு, பஞ்சாயத்துகளில் சாதகமான முடிவு இவற்றை எல்லாம் வழங்குவார். ஆனால் அதே நேரம் ஏழரைச் சனியின் ஆதிக்கத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். முதல் சுற்றாக வருபவர்களுக்கு ஓரளவு பலன் கிடைக்கும். மறு சுற்றாக வருபவர்கள் மகத்தான பலன்களைப் பெறுவர். மூன்றாவது சுற்றாக வருபவர்கள் முன்னேற்றத் தடைகள் வராமல் இருக்க வழிபாடுகளையும், பரிகாரங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் சுய ஜாதகத்தைப் ஒருமுறை புரட்டிப் பாருங்கள். அதில் தெசா புத்தி பலமிழந்திருந்தால், ஜென்மச் சனி காலத்தில் பிரச்சினைகள் தலைதூக்கும். நடக்கும் தசாபுத்தி பலம்பெற்றிருந்தால் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. உங்களைப் பொறுத்தவரை சனி யோகம் செய்யும் கிரகமாகவே கருதலாம். ஜென்ம இராசிக்கு அவர் வரும்பொழுது, ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.

இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், வாகன மாற்றம், உத்தியோக மாற்றம், தொழில் மாற்றம், நீண்ட தூரப் பயணங்கள் ஆகியவற்றைக் கொடுக்கும் நேரமிது. வரும் மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். குறிப்பாக வாகன மாற்றம் செய்வது நல்லது. உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம். பிறருக்கு பணப்பொறுப்புகள் சொல்வதன் மூலம் பிரச்சினைகள் ஏற்படலாம். கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயல்பட்டால் கொள்கைப் பிடிப்போடு செயல்பட இயலும்.

விரயச்சனி விலகும் இந்த நேரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து, சனிபகவான் சன்னிதியில் எள்தீபம் ஏற்றி கவசம்பாடி அர்ச்சனைகள் செய்து வருவது நல் லது. 2இல் கேது, 8இல் இராகு இருப்பதால் நாக தோஷப் பரிகாரங்களை, யோகபலம் பெற்ற நாளில் உங்களுக்கு அனு கூலமான ஸ்தலங்களில் செய்து கொள்வது நல்லது.

**தனுசு சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பம் 21 ஆம் திகதி தனுசு இராசிக்குச் சுக்ரன் செல்கிறார். இதன் விளைவாக சில நல்ல மாற்றங்களும் உங்களுக்கு வந்து சேரப்போகிறது. உங்கள் இராசிக்கு 6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்




ரன். அவர் உங்கள் இராசிநாதன் குருவிற்கு பகை கிரகமாவார். அப்படி இருந்தாலும் ஆதிபத்ய அடிப்படையில் பார்க்கும் பொழுது, உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றங்கள் கிடைக்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த பணிஉயர்வு வந்து மகிழ்ச்சிப்படுத்தும். மேலதிகாரிகள் ஆதரவுக் கரம் நீட்டுவர். தொழில்புரிவோருக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். சகோதர ஒற்றுமை பலப்படும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

உங்கள் இராசிக்கு 7,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் ஜனவரி 4 ஆம் திகதி உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். களத்திர ஸ்தானாதிபதியாகவும், தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் புதன், ராசியில் சஞ்சரிக்கும் பொழுது கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி, சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வங்கிகளில் வைப்புநிதி வைக்கும் முயற்சி கைகூடும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும். மனக்கவலை அகலும்.

**பெண்களுக்கான சிறப்பான பலன்கள்!**

உங்கள் இராசிநாதன் குரு, இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பணப்புழக்கம் நன்றாக இருக்கும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். அதே நேரத்தில் ஜென்மச் சனி தொடங்குவதால் உறவினர்களையும், உடன் இருப்பவர் களையும் அனுசரித்துச் செல்லுங்கள்.

வீண் விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களைச் செய்யலாம். கணவன்-மனைவிக்குள் அனுசரணை தேவை. எல்லா வசதி வாய்ப்புகள் இருந்தும், இனம் புரியாத கவலை மேலோங்கும். உத்தியோகத்தில் கேட்காமலேயே இலாகா மாற்றங்கள், இடமாற்றங்கள் வரலாம். இராகு-கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் சர்ப்பசாந்தி செய்து கொள்வதோடு, ஜென்மச் சனிக்குப் பரிகாரமாக வாலில் மணி கட்டிய ஆஞ்சநேயரை வழிபாடு செய்யுங்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும்



நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதியடையும் மகர இராசி வாசகர்களே!

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் சனிப்பெயர்ச்சியாகி ஏழரைச் சனியாக வருகிறது.

உங்கள் இராசிநாதனாகவும், வாக்கு தனம், குடும்பம் ஆகியவற்றை எடுத்துரைக்கும் இரண்டாமிடத்திற்கும் அதிபதியாகவும் சனிபகவான் திகழ்கிறார். எனவே நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. உங்கள் முயற்சியாவும் வெற்றி பெறவும், முன்னேற்றத்தை அதிகரித்துக் கொடுக்கவும் சனிபகவான் வழிவகுப்பார். ஆனால் அவரை நீங்கள் முறையாக வழிபட வேண்டும்.

இந்த ஏழரைச் சனியின் ஆதிக்கத்தில் எண்ணற்ற நற்பலன்களை அவர் வாரி வழங்குவார். ஆனாலும் உங்களுக்கு முதல்சுற்றா, இரண்டாவதுசுற்றா, மூன்றாவது சுற்றா? என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பொங்கு சனியின் ஆதிக்கம் உங்களுக்கு வரும்பொழுது தங்குதடைகள் அகலும். தனவரவு அதிகரிக்கும். மாங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். மறக்கமுடியாத சம்பவங்கள் நிறைய நடைபெறும். அதே நேரத்தில் சனிக்கு நட்பு கிரகமாக விளங்கும் புதன் அல்லது சுக்ரனுடைய திசையோ, புத்தியோ நடைபெற்றால், அந்த ஜாதகருக்கும் நல்ல பலன்களை சனிபகவான் அளிப்பார்.

டிசெம்பர் 19 ஆம் திகதி சனிப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. அந்த நேரத்தில் நீங்கள் சென்று சனிபகவானை வழிபட்டால் மிகுந்த நற்பலன்கள் கிடைக்கும். அல்லது பெயர்ச்சியாவதற்கு ஓரிரு நாட்கள் முன்னதாகவோ அல்லது பெயர்ச்சியான பிறகு ஓர் இரு நாட்களிலோ சனி ஓரை நேரத்தில் சென்று தரிசித்தால் இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறும்.

ஏழரைச் சனி வந்தவுடன் இடமாற்றம், வீடுமாற்றங்கள் எளிதில் அமையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் தொந்தரவால் நீங்களாகவே மாறுதல் கேட்பீர்கள். சுபச் செலவுகள் அதிகரிக்கும். பொருத்தமான வரன் வந்து கல்யாணம் கைகூடும். ஏழரைச் சனி தொடங்குவதால், ஏழரை ஆண்டுகள் விக்னேஸ்வரரையும், ஆஞ்சநேயரையும், சனீஸ்வரரையும் வழிபடுங்கள். சனி சன்னிதியில் எள்தீபம் ஏற்றினால் உள்ளம் மகிழும் சம்பவங்கள் நிறைய இல்லத்தில் நடைபெறும்.

**சுக்ரப் பெயர்ச்சிக் காலம்!**

டிசெம்பர் 21 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். பிள்ளைகள் சம்பந்தப்பட்ட வகையில் இப்பொழுது பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம். பிள்ளைகள் மேற்படிப் பிற்காக வெளிநாடு செல்ல வேண்டும் என்று விரும்பினால், நீங்கள் அதற்குரிய பாதையை வகுத்துக் கொடுப்பீர்கள். பூர்வீகச் சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பெண்வழிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு




காண்பீர்கள். தொழில்புரிவோர் பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு, புதிய பங்குதாரர்களை சேர்த்துக்கொள்ள முன்வருவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சுயதொழில் முயற்சிக்கு ஆர்வம் காட்டும் நேரம் இது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

உங்கள் இராசிக்கு 6,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் ஜனவரி 4 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும். இக்காலத்தில் புத-ஆதித்ய யோகம் செயற்படுவதால் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். அருளாளர்களின் ஆதரவு கிடைக்கும் நேரமிது. பயணங்கள் அதிகரிக்கும். ஒருசிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. ஜென்மத்தில் கேது, 7இல் இராகு இருப்பதால் ஆரோக்கியத் தொல்லையால் சிலர் அவதிப்படவும் நேரிடும். வெளிநாடு செல்லும் முயற்சியில் ஆர்வம் காட்டுபவர்கள், சுய ஜாதகத்தைப் பார்த்தே முடிவெடுப்பது நல்லது. இந்த காலத்தில் வாழ்க்கைத்துணையோடு சில பிரச்சினைகள் வரலாம். அதைச் சமாளிக்கும் ஆற்றலும் உங்களுக்கு உண்டு.

**பெண்களுக்கான சிறப்பான பலன்கள்!**

இம்மாதம் ஏழரைச் சனி தொடங்குவதால், எதிலும் விழிப்புணர்ச்சி தேவை. காரியங்கள் தொடங்கும் பொழுது தாமதம் ஏற்பட்டாலும் முடிவில் வெற்றி கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. கொடுக்கல்- வாங்கல்களில் புதியவர்களை நம்பி எதுவும் செய்ய வேண்டாம். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள் நடைபெறும் நேரமிது. ஜென்ம கேதுவால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பழைய சடங்கு சம்பிரதாயங்களில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படத்தக்கதாக அமையும். தாய்ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், தாய் வழி ஆதரவு பெருகும். ஜென்ம கேது, 7இல் இராகு சஞ்சரிப்பதால் நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம்பெற்ற நாளில் செய்வது நல்லது. வடக்கு நோக்கிய பெண் தெய்வங்களை வழிபட்டால் வளர்ச்சி கூடும். (தொடரும்)

# இனத்தைக் கூறுபோடும் தமிழரசுக்கட்சியின் இராஜதந்திரம் நிச்சயம் வெறுப்புக்குரியதே




(நேற்றைய தொடர்ச்சி)

ஊடகவியலாளர் வித்தியாதரனை, அப்பதவியை ஏற்கும்படி மாகாணசபை அவைத் தலைவரூடாக, கட்சித் தலைவர் மாவை அணுகியிருந்தாராம். ஆனால் திடீரென சுமந்திரன், அப்பதவி மாகாணசபை உறுப்பினர் ஆர்னோல்ட்டுக்கே என அறிவிக்க, மீண்டும் கட்சிக்குள் குழப்பம் தொடங்கியிருக்கிறது. இந்த விடயத்திலும் சுமந்திரன் கூட்டுத் தலைமைக்கட்சிகளுடனோ, தன் கட்சியின் உயர் தலைவர்களுடனோ எவ்வித ஆலோசனைகளும் நடத்தியதாய்த் தெரியவில்லை. சுமந்திரன் வெளியிடும் இவ் அறிவிப்பு அவரது சர்வாதிகாரத்தின் சாட்சியாய் வெளிவந் திருக்கிறது.

கூட்டுக் கட்சியினரின் தலைமைகளைத் தான் விடுங்கள், அவர் சார்ந்த தமிழரசுக் கட்சித் தலைமையே சுமந்திரனின் அறிவித் தலைக் கேட்டு அதிர்ந்து நிற்கிறது. 'ஆர்னோல்ட்டே மேயர்' என்ற சுமந்திரனின் அறிவிப்பும், 'அச் செய்தி வெறும் வதந்தியே!' என்பதான தமிழரசுக்கட்சித் தலைவர் மாவையினதும், அக்கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கத்தினதும் மறுப்பு அறிவிப்புகளும், அருகருகில் பத்திரிகையில் வெளியிடப் பட்டு பாரெல்லாம் சிரிப்பாய்ச் சிரிக்கிறது.

பேரினம் தந்த அழுத்தத்தால் ஜாதி, மதம், பிரதேசம் என்ற பிரிவுகளைக் கடந்து, ஓரளவுக்கேனும் ஒன்றுபட்டு நிற்கும் தமிழினத்தின் ஒருமைப்பாட்டின் வேரைக் கூட, சுமந்திரன் அசைக்க முயற்சிக்கிறாரோ? என ஐயுற வேண்டியிருக்கிறது. ஏலவே ஆர்னோல்டை மாகாண அமைச்சராக்க சுமந்திரன் பட்டபாட்டை பாரறியும். இப்போது மேயர் பதவியில் அவரை அமர வைக்க, கட்சித்தலைமைகளை மீறிச் செயற்படும் சுமந்திரனின் வேகம் அறிவு சார்ந்ததாய்த் தெரியவில்லை. கிறிஸ்தவரான சுமந்திரன், தன் சமயம் சார்ந்த ஒருவரை முக்கிய பதவியில் அமர்த்த முயற்சிக்கும் செயல், அவரது நடுவு நிலைமையை ஐயுறவைக்கவே செய்கிறது.

தமது முடிவுக்கு கிறிஸ்தவ மதத் தலைவர்களின் ஆதரவு இருப்பதாய், சுமந்திரன் ஒருசிலரிடம் உரைத்ததாய்ச் செய்திகள் காதில் விழுகின்றன. தமிழர் என்ற ஒருமைப்பாட்டினுள் மத அடையாளங்களைக் கொண்டு வந்து, பிரிவுகளை ஏற்படுத்த முயல்வது மிகப் பெரும் தவறாகும். ஏலவே உடுவில் மகளிர் கல்லூரி பிரச்சினையில், சுமந்திரன் கிறிஸ்தவ மதப் பிரதிநிதியாய் பலரால் கணிக்கப்பட்டார். இப்பொழுது அப்பழியை எதிராளர்கள் மீண்டும் அழுத்தி உரைக்க, சுமந்திரன் வழி சமைப்பது நிச்சயம் அறிவுடமை ஆகாது. பதவி நிர்ணயங்களின் போது குறித்த மதத் தலைவர்களின் ஆதரவு பற்றி பேசுவதே குற்றமாகும். இப்படித்தான் முன்பு ஒற்றுமையாய் இருந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக் களை, மதத்தையும் மொழியையும் கார ணம் காட்டி பகையூட்டிப் பிரித்தார்கள் வஞ்சகர்கள். பதவி நிர்ணயத்தில் தலைவர்களை மீறிய சுமந்திரனின் இந்த சர்வாதிகார முயற்சிக்கு, மதச்சாயம் பூசப்பட்டு மாற்றுச் சமயங்கள் கொந்தளிக்கத்தொடங்குமாயின், அது தமிழினத்தின் ஒருமைப்பாட்டை வீணே குலைத்து, நம் இனத்தை அடக்க நினைக்கும் எதிரிகளுக்கு, செங்கம்பளம் விரித்து வர வேற்பளித்து விடும் என்பது நிச்சயம்.

ஓர் ஜனநாயக அமைப்புக்குள் எல்லா முக்கிய இடங்களி லும், தன் ஆதரவாளர்கள் மட்டுமே இரு க்கவேண்டும் என நினைப்பது ஜனநா யகத்தன்மைஆகாது. தகுதியையும் ஆற் றலையும்உண்மைத்தன்மையையும் அடிப்படையாகக் கொண்டே, பதவிகளை நிர்ண யம் செய்தல்வேண்டும். அங்ஙனமன்றிஇவர் என்னவர்இவர்மாற்றவர் எனும் கருத்தோடு பதவிகள் நிர்ணயம் செய்யப்பட்டால், கட்சியின் உடைவு தவிர்க்க முடியாததாகிவிடும். தமது ஆதரவாளர்களின் முறையற்ற செயற்பாடுகளை, தமது அன்பர்கள் என்பதற்காய் சுமந்திரன் அங்கீகரிக்கத் தலைப்பட்டால், அதுகட்சி ஒழுங்கை சிதைத்துச் சின்னா பின்னமாக்கிவிடும். இப்



கம்பவாரிதி
**இ.ஜெயராஜ்**

பிழை யான வழிகளை அங்கீகரிக்கத் தொடங்கி யிருக்கும், சுமந்திரனின் செயற்பாடு களை மனதாரக் கண்டிக்கிறேன்.

அபூர்வமாய் வாய்த்த தனது ஆற்றலையும் ஆளுமையையும் அகங்காரம் கலைந்து அன்பூட்டி, தன் ஆணவத்திற்காய் அன்றி, இனத்தின் வளர்ச்சிக்காய் சுமந்திரன் பயன்படுத்தத் தவறுவாராயின், தமிழினத்தை தவறுதலாக வழி நடத்தி இனஅழிவுக்கு வித்திட்ட பழியாளர்களின் வரிசையில், நிச்சயம் அவர் பெயரும் இடம்பெற்றுவிடும் என்பதில் ஐயமில்லை. அவர் மேல் நம்பிக்கையும் மதிப்பும் கொண்டிருந்தவன் என்ற வகையில், அவரது இப்பிழையான செயல்களை மிக வன்மையாய்க் கண்டிக்க விரும்புகிறேன். ஆற்றல் மிக்க நமது முன்னாள் தலைவர்களின் வீழ்ச்சிக் குக் காரணமாய், அவர் தம்ஆணவப்போக்கே அமைந் திருந்தமை வரலாறு. சுமந்திரனும் அப்பாதையில் பயணித்தாராயின், இனத்திற்கு வழிகாட் டும் தகுதியை நிச்சயம் அவர் இழந்து போவார்.

ஒரு நடுநிலை யாளன் என்ற வகையிலும், இனவளர் ச்சி பற்றிய அக்கறை கொண்டவன் என்ற வகையிலும், சுமந்திரனது ஆற்றலின் மேல் நம்பிக்கை யும் நன்மதிப்பும் கொண்டவன் என்ற வகையிலும், இவ்விடத் தில் சில செய்திகளை அழுத்தி உரைத்து இக் கட்டுரையை முடிக்க விரும்புகிறேன்.

சர்வாதிகார நிர்வாகம் எவ்வளவு தான் சிறந்ததாக இருந்தாலும் அதனை விட ஜனநாயகமே சிறந்தது என்று, அரசியலாளர்கள் வெறு மனே முடிவு செய்யவில்லை. அதனால் தான் ஆயிரம் சோதனைகளைத் தாண்டியும், ஜனநாயகத்தின் வெற்றி இன்றும் நிலைத்திருக்கிறது. அந்த ஜனநாயகத் தன்மை உலகத் தில் நிலைத்திருப்பதால் தான், வலிய அரசியல் தலைமைகளில் இரு ந்து, மெலிய குழுக்கள் தம்மைக் காப் பாற்றிக் கொள்ள முடிகிறது. கேட்பாரின்றித் தமிழர்களை அழித்துவிட்டு, இன்று உலகின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல், இலங்கைத் தலைமைகள் திணறி நிற்பதும், சிற்றினமாய் இருப்ப தோடல் லாமல் போர் செய்து தோற்ற பின்பும் கூட, தமிழர்கள் தமக்கான உரிமைபற்றி பேச முடிந்திருப்பதும், உல கில் நிலைத்திருக்கும் ஜனநாயகத் தன்மையால் விளைந்த, நன்மைகள் என்பதை நாம் மறக்க லாகாது.

ஆயிரந்தான் அதி காரம் தம் கையில் இருந்தாலும் மற்றவர்களையும் அணைத்துச் செல்லும் பண்பே, ஒருவனை ஜனநாயகத் தலைவனாய் இனங்காட்டும். 'என்னை விட்டால் ஆளில்லை.' 'உலகத்தலைமைகள் என்னோடுதான் இயங்குகின்றன.' 'கட்சித் தலைமைகள் என்னை ஏனென்று கேட்க முடியாது.' 'நான் சொன்னால் மற்றவர்கள் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.' என்பதான எண்ணங்கள் நிச்சயம் ஜனநாயகப் பாதையை செம்மை செய்யப்போவதில்லை. என்னதான் பலமிருந்தாலும் மக்கள் ஆதரவற்ற தலைவன், என்றோ ஒரு நாள் வீழ்வான் என்பது நிச்சயம். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்று, அன்றே இளங்கோவடிகள் அடித்துச் சொன்னார். எப்படிப் பார்த்தாலும் சுமந்திரனின் அரசியல் நடவடிக்கைகளில், ஜனநாயகத் தன்மை இருப்பதாய்ச் சொல்ல முடியவில்லை. சும நந்திரனின் ஆணவப் போக்கால் அவரை இனத் துரோகியாய் காணும் அளவிற்கு, ஏற்கனவே நம் இளையதலைமுறை யினரில் பலர் வந்திருக்கின்றனர். தேவை வரும் போது சம்பந்தனை வைத்து மற்றவர்கள் காலைப் பிடிப்பதும், தேவை இல்லாதபோது மற்றவர்கள் காலை தானே வாருவதுமாக இயங்கும் சுமந்திரனின் போக்கு, நிச்சயம் நடுநிலையாளர்களுக்கு உவப்பாய் இல்லை. அரசியல் காற்று தற்போது தனக்குச் சார்பாய் இருப்பதை வைத்து எப்படியும் தான் இயங்கலாம் என சுமந்திரன் நினைத்தால் அது பெருந்தவறாகும்.

அக்காற்று எப்போது வேண்டுமானாலும் மற்றவர்க்குச் சார் பாய் திசை திரும்பலாம் என்பதை வரலாற்றுப்படிப்பினையை வைத்து உணரத்தவறின் வீழ்ந்த தலைவர்கள் வரிசையில் விரைவில் சுமந்திரனும்சேர்க்கப்படுவார் என்பது நிச்சயம்.

கூட்டமைப்பு தமிழரசுக்கட்சி என்ற இரண்டிலும் முதன்மைப்பதவியில் இல்லாதிருந்து கொண்டு, அவ்விரு கட்சிகள் சார்ந்த முடிவுகளைத் தானே எடுக்கும் சுமந்திரனின் போக்கு, அவர் மேலும் அவரை அங்ஙனம் இயங்க அனுமதிக்கும் சம்பந்தன் மேலும், பலருக்கும் வெறுப்பை உண்டாக்கியிருக்கின்றது. ஆளுமை என்பது அறிவை அடிப்படையாய்க் கொண்டு பிறக்க வேண்டுமே அன்றி, ஆணவ த்தை அடிப்படையாய்க் கொண்டு பிறத் தலாகாது. சம்பந்தன், சுமந்திரன் என்ற இரண்டு சக்கரங்களிலேயே, இன்று கூட்டமைப்பு என்ற வண்டி ஓடிக் கொண்டிருக்கின்றது. தன்முனைப்பே இல்லாத சம்பந்தனது போக்கும், தன் முனைப்பை மட்டுமே கொண்ட சுமந்திரனது போக்கும், கூட்டமைப்பு வண்டியின் சக்கரங்கள் பழுதுபடத் தொடங்கியிருப்பதை, வெளிப்படையாய் உணர்த்துகின்றன. சக்கரங்கள் உடைவது பற்றியோ வண்டி வீழ்வதைப் பற்றியோ கவலைப்படாமல் இருக்கமுடிய வில்லை. காரணம் அவற்றின் மீதான அக்கறை அல்ல. அவ் வண்டியில் ஏற்றப்பட்டிருக்கும் தமிழ் இனத்தின் மீதான அக்கறை. சுமந்திரனின் செயற்பாடு களை கடவுள் செம்மை செய்வாராக.

(முற்றும்)



நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலய கஜமுக சங்ஹார உற்சவம் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் வெகு விமரிசையாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் நத்தார் சிங்கள, ஆங்கில திருப்பலிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் நத்தார் புதுவருட திருப்பலிகள் பற்றிய விபரத்தை பங்குத்தந்தை ஜே.பி. அன்ரனிதாஸ் அடிகளார் அறிவித்துள்ளார். நத்தார் நள்ளிரவுத் திருப்பலி, நத்தார் பெருவிழாத் திருப்பலி காலை 7 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும். இந்த இரண்டு திருப்பலிகளையும் பங்குத்தந்தை ஜே.பி. அன்ரனிதாஸ் அடிகளார் ஒப்புக்கொடுப்பார். நத்தார் தினத்தன்று காலை 9.30 மணிக்கு சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் இணைந்த திருப்பலியை எம்.றெஜீஸ் இராஜநாயகம் அடிகளார் ஒப்புக் கொடுப்பார். இதே போன்றே புதுவருட தினத்தன்றும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும் என பங்குத்தந்தை ஜே.பி. அன்ரனிதாஸ் அடிகளார் அறிவித்துள்ளார். (இ-7)

# தெருவிளக்குப் பொருத்த பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட சரவணை சந்தி தொடக்கம் புளியங்கூடல் சந்தி வரையுமான பிரதான வீதியில் தெருவிளக்கைப் பொருத்தித் தருமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியில் தெருவிளக்கு இன்மையால் இரவு வேளைகளில் பயணிக்கும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், 778 இலக்கமுடைய பேருந்தில் பயணிக்கும் பயணிகளும் இதனால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எனவே, சம்பந்தப்பட்ட அரச உயர் அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி இவ்வீதியில் தெருவிளக்கைப் பொருத்தித்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

# தமிழ்த் தலைவர்களின் எதிர்ப்பு அரசியல் நிலைமாற வேண்டும்

## வடக்கு ஆளுநர் அறிவுரை



(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு மற்றும் அனலைதீவு ஆகியவற்றில் வசிக்கும் மக்களின் போக்குவரத்திற்காக மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்ட எழுதாரகை எனும் புதிய படகின் ஆரம்ப பயணத்தில் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே கலந்து கொண்டார்.

132 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள புதிய படகின் போக்குவரத்தை ஆளுநர் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண கடற்படைத் தளபதி ஜெயந்த டி சில்வா, யாழ். அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவிசதீசன் மற்றும் பல அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய ஆளுநர், முன்னாள் ஆளுநர் பளிஹக்கார இங்குவிஜயம்செய்த போது இம்மக்களின் நிலைகண்டு கவலைப்பட்டார். அதன் தொடர்ச்சியாக மத்திய அரசுக்கு அவர் பல கடிதங்களை எழுதினார். அதன் பின்னராக நானும் பல கடிதங்களை அமைச்சர் சுவாமிநாதனுக்கு எழுதிய தன்பலனாக இன்று இந்த புதிய படகு மக்களின் போக்குவரத்திற்காக வந்திருக்கின்றது. அதற்காக முன்னாள் ஆளுநர் பளிஹக்காரக்கு எனது மனமார்ந்த நன்றியினை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மக்களே உங்களுக்கு தெரியும் இந்த நாட்டில் ஏனைய இனங்கள் குறிப்பாக முஸ்லிம் மக்களின் தலைவர்கள் மலையக மக்களின் தலைவர்கள் அரசுடன் இணைந்து கொண்டு தமது பிரதேசங்களுக்கு தமது இனம் சார்ந்த மக்களுக்கு பெரிய அபிவிருத்திகளை செய்து வருகின்றார்கள். அவர்களின் தேவைகளை மத்திய அரசிமிருந்து விரைவாக பெற்று மக்களிடம் சேர்க்கின்றார்கள்.

ஆனால் இந்த பகுதியிலே தொடர்ந்தும் 60 வருடகாலமாக தமிழ் தலைவர்கள் எதிர்க்கட்சியில் இருந்து வருகின்றார்கள். அதனால் மக்களுக்கு அபிவிருத்தி எதனையும் அவர்களால் செய்ய முடியாது போயுள்ளது. இந்த எதிர்ப்பு அரசியல் நிலைமை மாறவேண்டும். பாதிக்கப்பட்ட இங்குள்ள தமிழ் மக்களின் அனைத்து அன்றாட பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். நல்லிணக்கம் உருவாக்கப்பட வேண்டும். நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழும் நிலைமை அதிகரிக்கப்பட வேண்டும்.

ஒரு நாட்டில் மக்களுக்கு அவசியமான போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அதற்கு வீதி அவசியமானது. ஆனால் கடலுக்கு நடுவில் வாழ்கின்ற மக்களுக்கு படகு அவசியமானது. அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு மருந்து எடுக்க வருவதற்கு பொருட்களை கொண்டு செல்வதற்கு படகு அல்லது கப்பல் அவசியமானது தீவிலே உள்ள மக்களுக்காக இந்த புதிய படகினை எனது மத்திய அரசாங்கம் நல்லாட்சி அரசாங்கம் உங்களுக்கு தந்திருக்கின்றது. எனவே நாம் அனைவரும் ஒன்றாக வாழ்ந்து இந்த நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி. சி.நந்த குமார் தலைமையில் இடம்பெறும். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா:21 செவ் 7 இல்
உயரம்: 172cm
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/4133

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 75 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில்
தொ.இ: B/7179

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 34
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:HNDAலண்டன் NOT PR
தொ.இ: B/6896

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
உயரம்: 5'3"
தகைமை/தொழில் O/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/7277

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 34 சூரி, செவ் 12 இல்
தகைமை/தொழில்: A/L/முன்பள்ளி ஆசிரியர்
தொ.இ: G/5873

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 41 செவ் 8 இல்
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/5877

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 34
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்
தொ.இ: G/5882

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 50 செவ் 2 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BA/ அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/5884

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 250 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 60 | 60 | 75 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 200 | 250 | 400 |
| தக்காளி | 200 | 200 | 140 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 35 | 50 | 40 |
| கோவா | 120 | 120 | 80 | 120 | 90 |
| கரட் | 160 | 200 | 140 | 150 | 120 |
| பூசணி | 80 | 60 | 35 | 60 | 60 |
| புடோல் | 120 | 100 | 50 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 65 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 500 | 350 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 | 120 | 140 | 160 |
| பாகற்காய் | 200 | 400 | 220 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 100 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 35 | 60 | 60 |
| பயற்றங்காய் | 200 | 250 | 40 | 220 | 250 |
| லீக்ஸ் | 250 | 300 | 200 | 250 | 260 |
| பீற்றூட் | 200 | 300 | 130 | 140 | — |
| கறிமிளகாய் | 250 | 400 | 240 | 250 | 250 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — |
| போஞ்சி | 200 | 250 | 140 | 180 | 180 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 150 | 200 | 160 |
| கீரை-1பிடி | 50 | 50 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 40 | 20 | 35 | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 120 | 70 | 75 | 90 |
| இராசவள்ளி | 250 | 400 | 250 | 350 | 350 |
| வெங்காயப்பூ | 400 | — | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | — | 60 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 50 | — | 30 | 50 | 40 |
| வல்லாரை | 20 | — | 15 | 30 | 50 |
| ஈரப்பலா | 70 | — | 50 | — | — |

பிதாவே! என் பொருட்டு இவர்களை மன்னியும்
– *இயேசு நாதர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இயேசு பாலகனின் பிறப்பில் பாவச் செயல்கள் ஒழியட்டும்

இன்று நத்தார் பண்டிகை. இயேசு பாலகனின் பிறப்பு நாள்.

மானிடத்தின் பாவத்தைச் சுமக்க வந்த இயேசு பாலகனின் பிறப்பு என்பது ஒளிமயமானது. பாவம் எனும் இருள் அகற்றுவது.

எனினும் இன்றைய உலக மானிடம் பாவச் செயல்களால் இருள்மயப்பட்டுள்ளது.

இறை வழிபாடு கூட ஒரு சடங்காக மாறிவிட்ட நிலையில் பணமும் செல்வாக்கும் ஊழலும் தலைவிரித்தாடி ஏழை மக்களைத் தொடர்ந்தும் ஏழைகளாக ஆக்கி வருகிறது.

உன்னைப் போல உன் அயலவனையும் நேசி என்றார் இயேசு பிரான். உன்னைப் போல் பிறரையும் நேசி என்ற கருத்துக்குள் எல்லாம் அடங்கும்.

பிற மதங்கள், பிறமொழியினர், பிறதேசத்தவர் என அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு வாசகமே உன்னைப் போல பிறரையும் நேசி என்ற பிதாமகனின் போதனையாகும்.

இருந்தும் இயேசு பிரானின் போதனைகளைப் பின்பற்றுவதாகக் கூறும் சில சமயப் பிரிவுகள் மதமாற்றம் என்ற முயற்சியில் கடுமையாக ஈடுபடுகின்றன.

இத்தகைய அமைப்புகளால் புனிதமான கத்தோலிக்கம் கூட தள்ளாடும் அளவில் இன்றைய நிலைமை உள்ளது.

தத்தம் சமயப் பிரிவு தவிர்ந்த ஏனைய சமயம் சார்ந்த தெய்வங்களைச் சாத்தான்கள் என்று கூறுகின்ற அளவில் கிறிஸ்தவத்தின் சில பிரிவுகள் செயற்படுவது வேதனைக்குரியது.

இயேசு பிரானின் போதனைகளையும் புனித விவிலியத்தை கற்றறிந்த எவரும் ஏனைய சமயத்தின் கடவுள்களை கொச்சைப் படுத்தவும் இழிவுபடுத்தவும் விரும்பமாட்டார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை குடியேற்ற வாதத்துடன் கிறிஸ்தவத்தின் வருகை ஆரம்பமாகின்றது.

மதம் பரப்பும் நோக்குடன் அமெரிக்க மிசனறிமார் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றனர். மதம் பரப்பும் எண்ணத்தோடு அவர்கள் இங்கு வருகை தந்தாலும் யாழ்ப்பாணத்து சூழ்நிலைகளைக் கற்றறிந்து அதற்கேற்றாற்போல் அவர்கள் செயற்பட்டனர். கல்வியைப் புகட்டுவது அவசியம் என உணர்ந்தனர்.

மதம் பரப்புவதற்கு என்று வந்த மிசனறிமார்களே யாழ்ப்பாணத்து சூழ்நிலைக்கேற்ப தங்களை மாற்றிக் கொண்டுள்ளபோது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலர் குழுவாக இயங்கி பிற சமயங்களையும் அச்சமயம் சார்ந்த புத்திஜீவிகளையும் படுமோசமாக விமர்சிக்கின்றனர். இத்தகையவர்களை இயேசு பிரான் நிச்சயம் மன்னிக்க மாட்டார்.

மற்றவர்களின் பாவத்தைச் சுமந்த பிதாமகனின் போதனைகளை உண்மையாகப் பின்பற்றுவதே உண்மையான கிறிஸ்தவத்தின் உயர் பண்பாகும்.

இதனை விடுத்து வீடு வீடாகச் சென்று சம்பளத்துக்காக மதம் மாற்றுவோர் எந்த நேரத்திலும் தங்களை மாற்றிக் கொள்வர் என்பது தெரிந்த விடயமே.

எனவே இயேசு பாலகனின் பிறப்பு நாளான இன்றைய நத்தார் நன்நாளில் பிதாமகனின் கருசனை எல்லோரிடத்திலும் பாய்ச்சப்பட்டு அனைவரும் பாவத்திலிருந்து விடுபட பிரார்த்திப்போமாக.

# கொலைவெறி, இனவாத, போதைவஸ்து அரசியல்வாதிகளை தோற்கடிப்போம்

## தேர்தல் பிரசாரத்தில் அமைச்சர் மனோ உறுதி

(கொழும்பு)

பெரிய கட்சிகளின் ஒரு சில அரசியல்வாதிகள் பாதாள, கொலைவெறி, இனவாத, போதைவஸ்து போன்ற சமூக அநீதிகளுடன் தொடர்புள்ள நபர்களை முன்னிறுத்தி அரசியல் செய்கிறார்கள். எங்கள் ஒருமித்த முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை நாம், இந்த சமூக அநீதிகளுடன் தொடர்பில்லாதவர்களாக தெரிவு செய்து ஏணி சின்னத்தில் போட்டியிட வைத்துள்ளோம். அத்துடன், எமது கொழும்பு மாநகரசபை வேட்பாளர் பட்டியலில் தமிழ், சிங்கள, முஸ்லிம் வேட்பாளர்கள் உள்ளனர். தெருத்தெருவாக, வீடு வீடாக சென்று நான் தைரியமாக பிரசாரம் செய்கிறேன். ஆனால், சிலருக்கு மக்கள் முன்வர பயம். கொழும்பு மாநகர மக்கள், தங்களிடம் கேள்விகளை கேட்க வழி மேல் விழிவைத்து காத்திருக்கின்றார்கள் என்பது அவர்களுக்கு தெரியும் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபை தேர்தல் பிரசாரத்தை கொழும்பு ஜம்பெட்டா வீதியில் நேற்று ஆரம்பித்தபோது அவர் மேலும் தெரிவித்தார்.

வன்முறையை காட்டி என்னை மிரட்ட முடியாது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, நான் இதைவிட நாட்டு பாதுகாப்புக்கு செயலாளராக இருந்த பெரிய கொம்பர்களையே பார்த்தவன். அடுத்தது, இன்று இந்த வன்முறை பாதாள, கொலைவெறி, இனவாத, போதைவஸ்து தொடர்புகளில் முன்னெடுக்கப்படும் அரசியல் முடிவுக்கு வந்துவிட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய மற்றும் தேர்தல்கள் கண்காணிப்பு குழுவினர்கள், இத்தகைய சமூகவிரோத அரசியல்வாதிகள் மீது ஒரு கண் வைத்தபடி இருக்கிறார்கள். இத்தகைய நபர்கள் தொடர்பில் நான் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் விளக்கமாக கூறியுள்ளேன். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் கலந்துரையாடியபோது சுட்டிக்காட்டியுள்ளேன்.

ஏனவே எவராவது எங்களை மிரட்ட முயல்வார்களேயானால் அவர்களுக்கு தாங்கள் வாக்குகளைகூட இந்த தேர்தலில் அளிக்க முடியாத நிலைமை ஏற்படும் என்று கூறிவைக்க விரும்புகிறேன். தமிழ் மக்களுக்கு கொழும்பு மாநகரில் உரிய பிரதிநிதித்துவத்தை பெறவே நான் முயல்கிறேன். இந்த முயற்சியை நான் எப்போதும் செய்து வந்துள்ளேன்.

கொழும்பில் இருந்து எங்களை அகற்றிவிட்டு அந்த இடத்தில் தனக்கு தேர்தல்கள் காலத்தில் நிதி உதவி செய்தவர்கள், அழைத்து சென்று விருந்து உபசாரம் செய்தவர்கள், பாதாள உலகத்துடனும் போதைவஸ்து வியாபாரிகளுடனும் தொடர்புள்ள ஒருசில தமிழர்களை கொண்டு வந்து அவர்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக உருவாக்க எடுக்கப்படும் முயற்சிகளை தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். உங்கள் பிள்ளைகளை போதைவஸ்து, பாதாள உலகம் ஆகிய குற்றங்களில் இருந்து பாதுகாக்க வேண்டுமானால், நீங்கள் எங்கள் ஏணி சின்ன வேட்பாளர்களை ஆதரிக்க வேணடும்.

அத்துடன், முதல் இலங்கை மேயர் இரத்தின சோதி சரவணமுத்து என்ற தமிழரே என்ற அடையாளத்துடன் 1937ஆம் ஆண்டு ஆரம்பமான கொழும்பு மாநகரசபை தமிழர் அரசியல் இன்று தமிழ் பெயர் கொண்ட இத்தகைய சமூக விரோதிகளிடமும் சில பெரும்பான்மை அரசியல்வாதிகளை தேர்தல் காலங்களில் அழைத்து சென்று விருந்து வைத்த ஒரே தகைமை கொண்ட தமிழர்களிடமும் சென்று அடைக்கலம் புக முடியாது. கொழும்பில் சிறுபான்மை மக்களை அவமானப்படுத்தி தங்கள் எடுபிடிகளை தமிழர் பிரதிநிதிகளாக காட்ட முயன்று எங்கள் தன்மானத்துடன் விளையாட வேண்டாம் என சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பிறந்தநாளில் செய்ய வேண்டியவை யாவை?**

நாம் பிறந்த நட்சத்திரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நமது பிறந்த நட்சத்திரத்தில் விதி முறைப் படியான கர்மங்களை நாம் செய்தோம் என்றால் நமது கிரக தோஷங்கள் விலகி நல்ல ஐஸ்வர்யம் கைகூடும். நல்ல ஐஸ்வர்யங்கள் கைகூடுவதற்கும் ஒரு சிறந்த வாழ்க்கை கிடைப்பதற்கும் நாம் நமது பிறந்த நட்சத்திரத்தில் தாராளமாக கர்மங்களைச் செய்ய வேண்டும்.

பிறந்த நட்சத்திரத்தன்று நாம் அதிகாலையிலேயே எழுந்திருக்க வேண்டும். குளித்துப் புத்தாடை உடுத்திக் கோயிலுக்குப் போகவேண்டும். கோவிலில் பகவதி பூஜை மற்றும் கணபதி ஹோமம் நடத்தவேண்டும்.

மதியம் புது நெல் அரிசிச்சோறு உண்ணவேண்டும். மாமிச உணவுகளை உண்ணக்கூடாது. பிறந்த நாளன்று அன்னதானம் செய்வது சிறந்தது. அன்னதானம், வஸ்திர தானம் ஆகியவற்றை நமது பிறந்தநாளில் செய்வது நமது இல்லத்தில் ஐஸ்வர்யம் உண்டாவதற்கு உதவும்.

மேலும் மரக்கன்றுகளை நடுவதும் நமக்கு நன்மை பயக்கும். இவற்றையெல்லாம் செய்வதனால் நமது ஆயுள் அதிகரிக்கும். பிறந்த நாளில் சாத்வீகமான வாழ்க்கை முறையையும் அஹிம்சை, விரத சுத்தம் போன்றவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும். வீட்டை நல்ல முறையில் சுத்தம் செய்து இறைவனை வணங்கி விருந்தினர்களை சிறந்த முறையில் உபசரித்தால் நமக்கு நன்மைகள் வந்து சேரும். பிறந்த நாளில் தோஷசாந்தி உண்டாவதற்கும் நீண்ட ஆயுள் கிடைப்பதற்கும் விஷ்ணு பூஜை, பிறந்த நாள் ஹோமம், பகவதி சேவை, கணபதி ஹோமம் ஆகியவற்றை நடத்துவது நல்லதாகும். (தொடரும்)

## சட்டவிரோத மணல் அகழ்வு கிளி.யில் மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி மாவட்டத்தின் சில பகுதிகளில் சட்ட விரோத மணல் அகழ்வு இடமபெறுவதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.


கிளிநொச்சி - பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட, புலோப்பளை கிழக்கு காசிப்பிள்ளைக்காடு கடற்கரையை அண்டிய குறித்த பகுதியில் கடற்கரையிலிருந்து சுமார் 25 மீற்றர் தூரத்தில் சட்ட விரோதமாக மணல் அகழ்வு இடம்பெறுவதாக பிரதேசவாசிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதனால் கடல்நீர் உட்புகுவதுடன், கிணற்று நீர் உவர் நீராக மாறுவதாகவும் வயல் நிலங்களிலும் மணல் அகழப்படுவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பயிர்ச்செய்கைகளும் அழிவடைந்துள்ளதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை குறித்த பகுதியில் மணல் அகழ்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் எஸ்.ஜெயராணி தெரிவித்தார். (மு-1)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உடலோம்பல் இறைவழிபாடு



இவ்வளவு சாப்பிட்டால் போதும். நன்கு ஜீரணமாகும். உடல் நன்றாக இருக்கும் என்று தெரிந்து அளவோடும். முறையோடும் சாப்பிடுவோம். ஆனால், சுவையாக இருக்கிறது என்று அதிகமாகச் சாப்பிட்டால் அதை ஜீரணிப்பதற்கு வேண்டிய அதிகப்படியான அமிலம் எங்கிருந்து சுரக்கும்? பற்றாக் குறையின் காரணமாக உணவு செரிக்காமல் தேங்கிப் போவதால் புளித்துப் போகிறது. அது வயிற்றில் புண்ணை உண்டாக்கித் துன்பம் தருகிறது. மனிதன் அறியாமையால் செய்யும் தவறுகள் தான் துன்பமாக விளைகிறது. இறையின் ஆற்றலால் எல்லாம் சரியாக நடக்கிறது.

ஆனால், நாம் ஆசையினால், மறதியினால், இறைவனின் செயலை மறந்ததினால் அதிகமாகச் சாப்பட்டோம். இறைவன் செயலில் குறுக்கிட்டோம். உறுப்புக் கெட்டுவிட்டது. அதன் விளைவாகத் துன்பத்தை அனுபவிக்கிறோம். இறையருள் எல்லாச் செயலிலும் கலந்து சரியான பலனைத் தந்து கெ?ண்டே இருக்கிறது. நாம் அதைத் தடுத்தால் அந்தத் தடைக்குத் தகுந்தவாறு துன்பம் வரும். இதைத் தெரிந்து கொண்டால் இறைவனுக்குப் பயந்து நடக்க வேண்டுமென்று முன்னோர்கள் சொன்னது தவறா? தவறாகச் செய்தால் துன்பந்தான் வரும். சரியாகச் செய்தால் இன்பமே நிலைக்கும். இந்த உண்மையைத் தெரிந்து கொள்கிறபோது இறையுணர்வு வருகிறது.

அதற்கு ஏற்றவாறு இந்த உடலுக்கு உணவு, ஓய்வு, எண்ணம், உழைப்பு இந்த ஐந்தையும் அலட்சியம் செய்யாமல், அதிகமாக அனுபவிக்காமல், முரணாக அனுபவிக்காமல் நாம் பார்த்துக் கொள்வோம். உடல் நலமாக இருக்கும். மனமும் அமைதியாக இருக்கும். அப்படி அறிவின் தெளிவோடு உடலை நலமாக வைத்துக் கொள்வதும் இறை வழிபாடு தானே?

# கோல் மழை பொழிந்தது நாவாந்துறை சென்.மேரிஸ்

## படுதோல்வி அடைந்தது கண்டி ஹைலைன் அணி



நாவாந்துறை சென். மேரிஸ் அணி. தமது அபார ஆட்டத்தால் கோல் மழை பொழிந்து பிரிவு 1 கால்ப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்றது.

இலங்கை கால்ப்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிரிவு ,1 அணிகளுக் கிடையிலான கால்ப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

நாவாந்துறை சென். மேரிஸ் அணிக்கும் கண்டி ஹைலைன் அணிக்கும் இடையிலான ஆட்டமொன்று அரியாலை கால்ப்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் 23 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

முதல்பாதியாட்டத்தில் சென்.மேரிஸ் அணி 3 கோல்களைப் போட்டது. பதிலுக்கு ஹைலைன்ட் அணி ஒரு கோல் போட்டது. இரண்டாவது பாதியாட்டத்தில் சென்.மேரிஸ் அணி மேலும் 4 கோல்களைப் போட்டது. ஹைலைன் அணி 1 கோலைப் போட்டது. முடிவில் சென்.மேரிஸ் அணி. 7:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. அருள்ராசா யூட் 3 கோல்களையும். டிக் கேன்சன் 2 கோல்களையும். ஜெனிற்றன் மற்றும் யுனற் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் போட்டனர்.(க-26)

## கலைவாணியை வென்றது குறிஞ்சிக்குமரன் அணி

,உரும்பிராய் திருக்குமரன் சுற்றுப்போட்டியின் லீக் சுற்றுக்கு குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி தகுதி பெற்றுள்ளது.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கால்ப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியொன்றை திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

48 அணிகள் பங்கு பற்றுகின்ற இந்தச் சுற்றுப் போட்டியில். ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெற்று வருகின்றன.

கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் குறிஞ்சிக்குமரன் அணி. 4:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

## ஜேர்மன் Fist Ball தேசிய அணியில் இடம்பிடித்த ஈழத்தமிழ் சகோதரர்கள்



ஜேர்மனி Fist Ball தேசிய அணியில் ஈழத்தமிழர் இருவர் தெரிவாகி விளையாடுகின்றனர்.

மண்டைதீவைப் பூர்வீகமாகக் கொண்ட அஜித் அன்ரனி பெர்னாண்டோ மற்றும் அன்ரு அன்ரனி பெர்னாண்டோ என்ற இரு சகோதரர்களே ஜேர்மனி Fist Ball அணியில் தெரிவாகி ஈழத்தமிழருக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

கடந்த 2013. 2014. 2015. 2016. 2017 ஆம் ஆண்டுகளில் ஜேர்மன் தேசிய அணிக்காக விளையாடிய இவர்கள் ஜேர்மன் அணி வெற்றிபெற பெரிதும் உதவியாக இருந்துள்ளனர்.

இவர்களை ஜேர்மன் பிரதமர் விருது வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

## வடக்கின் தாரகை விருதை தட்டிச்சென்றார் ஆஷிகா

2017 ஆம் ஆண்டின் எட்டாவது வர்ண இரவு விழா சாவகச்சேரி கோல்டன் ஜுபிலி மண்டபத்தில் கடந்த சனிக் கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் வடக்கின் தாரகை விருதினை சுண்டுக்குளி மாணவியும் பளுதூக்கும் வீராங்கனையு மான வி. ஆஷிகாவிற்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. ஆஷிகா உள்ளூர் தவிர



வெளிநாடுகளுக்கும் சென்று பல சாதனைகள் படைத்து பல பதக்கங்களையும் வென்று யாழ். மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். இவரைத் தவிரரி தி.தனுயன், இ.டையினியஸ் ஜெ. துசியந்தினி ,ஜெ. அனித்தா சி. ஹெரினா, எஸ். சங்கவி, வி.துசாங்கன், எஸ். கார்த்திகன், இ. சானுசன், என். திவ்வியநாத், எஸ்.தரன் ஆகியோருக்கும் வர்ண இரவு விருது வழங்கிகௌரவிக்கப்பட்டது. இ

## ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவுகள்







கரணவாய் வடக்கு நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகம் தமது 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை கடந்த 20 ஆம் திகதி முதல் நடத்தி வருகின்றது.

20 விளையாட்டுக் கழகங்கள் மோதும் இந்தச் சுற்றுப்போட்டியில் முதற்சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெறுகின்றது. முதற் சுற்றிலிருந்து 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு இரண்டாம் சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெறும்.

20 ஆம் திகதி புதன் கிழமை நடைபெற்ற போட்டிகளில்,

இமையாணன் இளைஞர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் இமையாணன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டி. கரணவாய் நவசக்தி விளையாட்டுக்கழக அணிக்கு. மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் நடைபெறவிருந்தது. எனினும் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருகை தராமையால், கரணவாய் நவசக்தி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

21 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற போட்டிகளில்,

முதல் போட்டியில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வரணி யூத் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில், கலட்டி ஐக்கிய அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் 6:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டிகளில்,

முதல் போட்டியில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வரணி யூத் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி. 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

## முழு நிர்வாணமாய்...

இடம்பெற்ற குறித்த சம்பவத்தால் அப்பகுதியில் பதற்றநிலை காணப்பட்டது.

இதுகுறித்து தெரியவருவதாவது, ஏ9 வீதியால் வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் ஒன்றுக்குள் நேற்று அதிகாலை 3 மணியளவில் இளைஞர் ஒருவர் உள் நுழைந்துள்ளார். குறித்த இளைஞர் ஆடை ஏதுவுமின்றிய நிலையிலேயே உள் நுழைந்துள்ளதாக குறித்த முகாமின் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதன்போது கலவரமடைந்த இராணுவத்தினர் அந்த இளைஞரை சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்துள்ளனர். பின்னர் அவருக்கு ஆடை அணிவித்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட இளைஞரைக் கைதுசெய்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். பதினெட்டு வயதுடைய முகமட் நசீர் எனும் இளைஞரே இவ்வாறு நடந்துகொண்டதாக தெரிவித்த பொலிஸார் அவர் இவ்வாறு நடந்து கொண்டமைக்கான காரணம் குறித்து விசாரிப்பதாக தெரிவித்துள்ளனர். (மு-1)

## குளிக்கச்சென்ற...

யில் உள்ள ஆற்றிற்கு சென்றுள்ளார்கள் அங்கு குளித்துக்கொண்டிருந்தபோது இருவரை காணவில்லை. இந்நிலையில் நீண்ட நேரம் இருவரையும் மற்ற இளைஞர்கள் தேடியுள்ளார்கள்.

இதன்போது குறித்த இருவரும் ஆற்றின் சேற்றில் புதைந்துள்ளமை தெரியவந்துள்ளது. இதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த கிராம மக்கள் மற்றும் பொதுமக்களின் துணையுடன் இருவரின் உடலங்களையும் மீட்டுள்ளார்கள்.

குறிப்பிட்ட ஆற்றுப்பகுதியில் அதிகளவான மண் எடுக்கப்பட்டுள்ளதால் ஆழமான பகுதியாகவும் அதேவேளை சேறு நிறைந்த பகுதியாகவும் காணப்பட்டுள்ளது. இதனாலே சேற்றில் இருவரும் புதைந்துள்ள தாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில்புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் (2019) வணிக பிரிவில் கல்வி கற்கும் புதுக்குடியிருப்பு சிவநகரை சேர்ந்த தவராசசிங்கம் தனுசன் (வயது 17) 2019 உயிரியல் பிரிவில் கல்வி கற்கும் சிவராசா பகீதரன் (வயது 17) ஆகிய இரண்டு மாணவர்களே நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் உடலங்களை எடுத்து புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் சேர்த்துள்ளனர். மருத்துவமனை மரண விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கை யின் பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் பகீதரன் என்னும் மாணவர் கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த சாதாரண பரீட்சையில் 9ஏ சித்திகளை பெற்ற மிகவும் திறமையான மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது

இதே போன்று கடந்த தீபாவளி நாள் அன்று முல்லைத்தீவு கடலில் மூழ்கி இரண்டு உயர்தர பிரிவு மாணவர்கள் பலியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (மு-281.15)

## ஆசிரியர் சங்க...

விண்ணப்பிப்புக்காக கால எல்லையை மேலும் ஒரு வார காலம் நீடிக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும், வேட்பு மனுக்கள் தொடர்பான அறிவித்தல் கடந்த 4ஆம் திகதி வெளியிடப்பட்ட அன்றே தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களுக்கான கால எல்லை குறித்து பாடசாலைகளுக்கு அறிக்கப்பட்டதாக தெரிவித்துள்ள மகிந்த தேசப்பிரிய, முன்னரேயே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கால எல்லையை நீடிக்க முடியாது என குறிப்பிட்டு ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை நிராகரித்துள்ளார். (மு-1)

## மோ.சைக்கிள்...

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் தொலைபேசி கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்துள்ளார்

வட்டுக்கோட்டை அராலி மத்தியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ரவிச்சந்திரன் ரஜீவன் (வயது 26) என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபமாக உயிரிழந்தவராவார். இவருடன் பயணித்த அதே இடத்தை சேர்ந்த கந்தசாமி யதீஷ் (வயது 27) என்பவர் எரிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக தெரியவருகையில்,

மேற்குறித்த இரு நபர்களும் நேற்று சித்தன்கேணியில் மரணச்சடங்கு ஒன்றுக்கு சென்றுவிட்டு நண்பகல் 12 மணியளவில் அராலி நோக்கி மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக வந்துள்ளனர்.

கொட்டைக்காடு வைத்தியசாலைக்கு அண்மையில் இவர்கள் பயணித்த வீதி வளைவாகவும் குன்றும் குழியுமாக காணப்பட்டுள்ளது.

அதிவேகமாக மோட்டார் சைக்கிளை அப்பகுதியில் செலுத்தி வந்த காரணத்தால் மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே உள்ள தொலைபேசி இணைப்பு கம்பத்துடன் மோதியுள்ளது.

அப்போது தொலைபேசி இணைப்பு கம்பம் இரண்டாக உடைந்து முறிந்ததுடன் மோட்டார் சைக்கிளின் பெற்றோல் ராங் வெடித்து சிதறி தீப்பற்றியுள்ளது. மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்றவர் மீது தீப்பற்றி சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்ததுடன் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்தவர் முன்னால் தூக்கி வீசப்பட்டு முறிந்த கம்பத்தில் தொங்கியவண்ணம் இருந்துள்ளார்.

உடனடியாக அப்பகுதியில் இருந்த பொதுமக்களால் தீ அணைக்கப்பட்டு படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

உயிரிழந்த இளம் குடும்பஸ்தர் திருமணமாகி 3 வருடங்கள் எனவும் இவருடைய மனைவி தற்போது நிறைமாத கர்ப்பிணியாக உள்ளார்.

குறித்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-9,17)

## நல்லாட்சி என...

உறுப்பினருமான பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார். மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அனைத்து குற்றவாளிகளையும் தண்டிக்கவும் தயங்க மாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டங்கள் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நீர்கொழும்பு பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார். (மு-1)

## ஐ.தே.க தனித்து...

எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக் கொண்டு ஆட்சி அமைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்தும் கூறுகையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன், பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு இடையிலான புரிந்துணர்வின் ஊடாக அரசாங்கத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான உடன்படிக்கை கடந்த ஒகஸ்ட் மாதம் 31-ம் திகதியுடன் பூர்த்தியாகியது. இருந்தும் ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் ஆளும் கட்சியுடன் இணைந்திருக்க தீர்மானித்திருந்தது. சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறினால், கூட்டு எதிர்க்கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் சில உறுப்பினர்களது ஒத்துழைப்புடன் ஆட்சி அமைக்கப்படும் என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

# தமிழரசுக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காவிடின் முரண்பாடு வலுக்கும்

## சித்தார்த்தன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

கட்சித் தீர்மானங்களை மீறுகின்ற தங்களது கட்சித் உறுப்பினர்களுக்கு எதிராக தமிழரசுக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டு அவர்களை கட்டுப்படுத்த வேண்டும் என புளொட் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

கூட்டமைப்பு பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் அண்மைக்காலமாக நிலவி வருகின்ற முரண்பாடுகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல் தயாரிப்பு, உறுப்பினர் ஒதுக்கீடு தொடர்பில் புளொட் கட்சிக்கும், தமிழரசுக் கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. அதற்கு காரணம், கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவில் என்ன வீதத்தில் வேட்பாளர்களை நிறுத்துவது போன்ற விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஆனால் தமிழரசுக் கட்சி அந்த ஒப்பந்தங்களில் பல மாற்றங்களைச் செய்தது. அந்த மாற்றங்கள் குறித்து எம்மிடம் அவர்கள் கேட்கவில்லை. ஆனால் மாற்றம் செய்துள்ளோம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படுவதை ஏற்க முடியாது என நாங்கள் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறினோம். தற்போது பிரச்சினைகள் ஓரளவு சுமூகமாக இருக்கின்றது.

எனினும், தமிழரசுக் கட்சி தங்களது இரண்டாம் நிலைத் தலைவர்கள் அல்லது மாற்றுக் கட்சியிலிருந்து புதிதாக இணைந்து கொண்ட தலைவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளார். (மு-1)

# அமைச்சர் பாலித்தவிற்கு பொலிஸ் ஆய்வாளர் பதவி

(கொழும்பு)

நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டாரவை பிரதிப் பொலிஸ் ஆய்வாளராக பதவி உயர்த்தி ஓய்வு வழங்குவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

பொலிஸ் சேவையில் ஈடுபட்டிருந்தபோது அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்ட அரச அதிகாரி என்றவகையில் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக ஆணைக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கமைய கடந்த 2000ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 24ஆம் திகதி முதல் மீண்டும் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு ஒகஸ்ட் 27ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் அவர் பிரதி பொலிஸ் ஆய்வாளராக பதவி உயர்வு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கு அமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (மு-1)

# யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் உள்ளார்களா?

## பலருக்கு அதில் சந்தேகம் என்கிறார் ரிஷாத்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு மன்னார் மாவட்டத்தில் நடத்தப்படவிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்த மீலாத் நபி நிகழ்வினை யாழ் மாவட்டத்திற்கு தாருங்கள் என தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு கேட்டவர் யாழ் முஸ்லிம் இணையத்தை நடத்தும் சகோதரர் அன்சீர் அவர்கள். உடனே நான் இன்சா அல்லாஹ் செய்வோம் என கூறினேன்.

இது தவிர யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் உள்ளார்களா என்ற ஐயப்பாடு அண்மைக்காலமாக எழுந்த நிலையிலும் இந்த நிகழ்வை இந்த மண்ணில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால் அமைச்சர் எம் எச் எம் ஹலீமின் ஆதரவுடன் நிறைவேற்றியுள்ளோம் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்

2017ஆம் ஆண்டிற்கான தேசிய மீலாத் விழா யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களுக்கு 450 வீடுகளை அமைத்துக்கொடுக்க அடுத்தாண்டு நிதி ஒதுக்கப்படவுள்ளது. அதற்கு அரச அதிகாரிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ்ப்பணத்தில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களுக்காக மீலாத் கிராமம் என்ற பெயரில் நான் நடப்பாண்டில் 160 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கி இருந்தேன். அந்த நிதி ஊடாக யாழ்ப்பாணப் பகுதியில் 200 வீடுகளை நிர்மாணிக்க திட்டமிட்டிருந்தேன். ஆனால் வெறுமனே 36 வீடுகள் மட்டுமே கட்ட அனுமதிக்கப்பட்டு வேலைகள் இடம்பெற்று வருகின்றது. இதற்கு பல இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றது.

அதனால் அந்த நிதி மீண்டும் திரைசேரிக்கு திரும்ப செல்லவுள்ளது. பொம்மைவெளிப் பகுதியில் 20 ஏக்கர் காணியை முஸ்லிம் மக்களுக்காக வீடுகள் அமைக்க காணியை தருமாறு கேட்டிருந்தோம். அதில் 300 வீடுகளை அமைக்க முடியும். ஆனால் அதற்குத் தடைகள் வந்து கொண்டிருக்கின்றன. முஸ்லிம் மக்களுக்காக வீடுகளை கட்ட ஆதரவைக் கொடுங்கள்.

நான் அடுத்த ஆண்டும் 450 வீடுகளை அமைக்க நிதி ஒதுக்க திட்டமிட்டுள்ளேன் என்றார். (மு-1)

## பிணைமுறி அறிக்கை...

வடிக்கை எடுப்பார் எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பிணை முறிப்பத்திர விவகாரம் சம்பந்தமான விசாரணை அறிக்கையை மூடிமறைக்கும் எந்த தேவையும் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அம்பலாங்கொடையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் ஜனாதிபதி தூய்மையான அரசியல்வாதி என்ற வகையில், கடந்த அரசாங்கத்தில் நடந்தது தற்போதைய அரசாங்கத்தில் நடந்ததா என்பதை பார்க்கவு செயற்பட்டு வருகிறார்.

நாட்டு மக்கள் அதனை தற்போது புரிந்து கொண்டுள்ளனர் எனவும் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (மு-1)

# தமிழக ஆர்.கே...

ஜெயலலிதா மறைவால் காலியான ஆர்.கே.நகர்தொகுதிக்கு கடந்த 21ஆம் திகதி இடைத்தேர்தல் நடத்தப்பட்டது.

அ.தி.மு.க. சார்பில் மதுசூதனன், தி.மு.க. சார்பில் மருது கணேஷ், பா.ஜ.க. சார்பில் கரு.நாகராஜன் ஆகியோரும், சுயேட்சை வேட்பாளராக சசிகலா உறவினர் டிடிவி தினகரன் உட்பட 59 பேர் தேர்தல் களத்தில் நின்றனர்.

கடந்தமுறைபணப்பரிவர்த்தனைப் புகார் எழுந்தது போன்று இந்த முறையும் பணப் பரிவர்த்தனை புகார் எழுந்தது.

இதனால் இடைத்தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்ற சூழ்நிலை ஏற்பட்டது. பரபரப்பான சூழ்நிலையில் 21ஆம் திகதி வாக்குப்பதிவு அமைதியான முறையில்நடந்து முடிந்தது.

தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும்பணிநேற்றுக் காலை 8 மணிக்கு தொடங்கியது. வாக்கு எண்ணிக்கை தொடங்கியதுமே சுயேட்சையாக போட்டியிட்ட டிடிவி தினகரன் அதிகளவு வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றார்.

வாக்கு எண்ணிக்கை முடிவில் டிடிவி தினகரன் 40,707 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஆர்.கே.நகர் தொகுதியில் டிடிவி தினகரன் 50.32 சதவித வாக்குகளை பெற்று வெற்றியை தனதாக்கி உள்ளார். அவருடைய ஆதரவாளர்கள் வெற்றியை கொண்டாடிவருகிறார்கள்.

சுயேட்சையாக குக்கர் சின்னத்தில் போட்டியிட்ட டிடிவி தினகரன் 89,013 வாக்குகளை பெற்றார்.

இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்ட அ.தி.மு கவைச் சேர்ந்த மதுசூதனன் 48,306 வாக்குகள்ளை பெற்றார். உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தி.மு.க வேட்பாளர் மருது கணேஷ் 24,581 வாக்குகளை பெற்றார்.

இதற்கு அடுத்த இடங்களை நாம் தமிழர், பாரிய ஜனதா பிடித்தது. திமுக, பாரதிய ஜனதா மற்றும் நாம் தமிழர் கட்சிகளின் வேட்பாளர்கள் உட்பட 57 வேட்பாளர்கள் தேர்தலில் கட்டுப் பணத்தை இழந்தனர்.

தேர்தலில் பாரதிய ஜனதாவிற்கு விழுந்த வாக்குகளைவிடவும் அதிகமான வாக்குகள் நோட்டா (எல்லோருக்கும் எதிரான வாக்கு) விற்கு விழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (மு-1)

# புதிய அனுபவத்...

எகலியகொட பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட ஜே.வி.பியின் தலைவர் அனுர குமாரதிசாநாயக்க இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

இரண்டு பிரதான அணிகளில் உள்ளவர்களும் மாறி மாறி அணிமாறிக்கொள்கின்றனர். இவ்வாறு அணிமாறுகின்ற அனைவரும் ஒரே அணியை சேர்ந்தவர்களாவர்.

எனவே உள்ளூராட்சிமன்ற அதிகாரத்தை தம்மிடம் வழங்கி புதிய அரசியல் அனுபவத்தை பெறுமாறு அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (மு-1)


FLC FRENCH LANGUAGE CENTRE
FRENCH வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
Diploma Classes : DELF A1, A2, B1, B2. (C-788)
40, பலாலி வீதி, இலுப்பையடி 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் :06.01.18 சனி காலை 10மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி 021 320 2973 ஆரம்பம் :08.01.18 மாலை 3.30மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.



எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்

- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்
100 வீதம் இயற்கையானது
(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (1334)
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0767070069
(1903) M.Suren


## மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்

## பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை

சண்முகநாதன் அம்பிகைபாலன்,
காளி கோவிலடி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

வழக்காளி

வழ.இல : ஈடு/09/2013

எதிர்

01. தெய்வேந்திரராசா மணிவண்ணன்
02. பெண் அனுசியா மணிவண்ணன்
இருவரும் No:- 18 Ranelagh Road,
Southall, Middlesex
UB1, IDQ United Kingdom.

எதிராளிகள்

2017.11.29ஆம் திகதி இந்நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய துரைச்சாமி சிறீமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட விற்பனை அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனையை நடாத்த மன்று நியமித்துள்ளதால் அதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு, அரசடி வீதி, இல.25/05 இல் அமைந்துள்ள ஆதனத்தில் நின்று 2018ஆம் ஆண்டு தை மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத் தருகின்றேன்.

தீர்வைத் தொகை

எதிராளிகள் வழக்காளிக்கு ரூபா 59,00,889 (ஐம்பத்தொன்பது இலட்சத்து எண்ணூற்று எண்பத்தொன்பது ரூபா)வும் மேலும் ரூபா 59,00,889 இற்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 36% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 2013ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11ஆம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 2017ம் ஆண்டு பங்குனி மாதம் 07ம் திகதி வரையுமான வட்டி ரூபா 22,93,400/= அதன் பின் தீர்வை முழுத் தொகைக்கும் முழுத் தொகையும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 18% வீத வட்டியும் கொடுக்க வேண்டியுள்ளது.

ஆதன அட்டவணை

வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவு, நல்லூர் பிரதேச சபை பிரிவு, கிராமசேவையாளர் பிரிவு இல-ஜே/111, திருநெல்வேலி இறை.

"சமரபாகுதேவன்கலட்டி" நி.ப 1 (ஒன்று) குளி 15 பதினைந்தும் செய் பயிர் வான் பயிர்களும் கிணற்றுப் டாங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதற்கு எல்லை கிழக்கு - செல்லத்துரை நல்லையாவினதும் பெண் கமலாம்பிகையினதும் ஆதனம் வடக்கு - கந்தையா தம்பிமுத்துவினதும் மறுபங்காளரதும் ஆதனம் மேற்கு - வைலு சுப்பையாவினதும் பெண் பாக்கியத்தினதுமாதனம் தெற்கு - ஒழுங்கை இதடங்கலும்

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை (1/4) உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்) - 1%
பிஸ்கால் செலவு சிவில் நடைமுறைக் கோவையின்படி
விளம்பரச் செலவுகளும் பிரசித்த செலவுகளும்
விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்
விற்பனை கமிசன் 2 1/2%
விற்பனவு ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)

2017ம் ஆண்டு மார்கழி மாதம் 22ம் திகதி


நீதிமன்ற கட்டளைப்படி

து.சிறீமோகன்,
பதிவாளர்/பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(1907)


வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் உள்ள அச்சகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. (புத்தகம் கட்டுனர்) (1943)
தொ.பே: 077 282 4321
416, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-788)

UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



Techno World
(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி)
A/L தொழில்நுட்ப பிரிவு 2020
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)
சக்தி (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
ராகவன் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)
முருகநிரோஜன் (யா/வயாவிளான் ம.கல்லூரி)
மதுசூதன் (யாழ்.பல்கலைக்கழகம்)
பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)
அருண்குமார் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)
ஜெகநாதன் (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி)
சிவஜன் (தொழில்நுட்பக் கல்லூரி)
உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio-Tec)
திருக்குமரன் (நெல்லியடி மகா வித்தியாலயம்)
கலைதீபன் (நெல்லியடி மகா வித்தியாலயம்)
பொன்சிவகுமார் (C-887)
ICT
லவன் (உதவி விரிவுரையாளர், கணனி விஞ்ஞானம்)
உமாகாந்தன் BIT (யா/மத்திய கல்லூரி)
புவியியல் - ஜெனகன் | ஊடகக்கல்வி - கோணேஸ்
விவசாய விஞ்ஞானம் - சாரங்கன் | பொருளியல் - பிரதீபன்
இலகு கணிதம் - ஹரிகரன் | வணிகக்கல்வி - தீசன்
சித்திரம் - ஜெயந்தன் | கணக்கீடு - சுகிர்தன்
கிளைகள் : யாழ்ப்பாணம், சுன்னாகம் புத்தூர் (சோமஸ்கந்தா அருகாமை), கொக்குவில்.
தொடர்பு: 077 017 5346


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.